

விழியோரத்துக்
கனவுகள்
திருமலை
சுந்தா
வெளியீடு:
75/=
கல்வி பண்பாட்டு அலுவல்கள்
விளையாட்டுத் துறை அமைச்சு.

# விழியோரத்துக் கனவுகள்

(சிறுகதைத் தொகுதி)

திருமலை
சுந்தா

வெளியீடு
கல்வி பண்பாட்டு அலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு
திருகோணமலை.

விழியோரத்துக் கனவுகள்

முதற்பதிப்பு — மார்கழி 1995

பிரதிகள் தொகை — 500

அட்டைப்படம் — ம. சி. சிவதாசன்

உரிமை — கல்வி பண்பாட்டு அலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
திருக்கோணமலை.

பதிப்பாக்கம்:
வடக்கு - கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களம்
அன்பு ஒழுங்கை,
உப்புவெளி,
திருக்கோணமலை.

வட - கிழக்கு மாகாண கல்வி கலாசார
விளையாட்டு அமைச்சு செயலாளர்
திரு. க. தியாகராசா அவர்களின்

# வாழ்த்துரை

ஆக்க இலக்கியங்கள் மூலம் மக்களுடைய வாழ்க்கையில் சகல அம்சங்களும் பிரதிபலிக்கப்படுகின்றன. நாவல், சிறுகதை, நாடகம், கவிதை ஆகிய துறைசார் இலக்கிய நூல்களுக்கு இதன் காரணமாகவே முக்கியத்துவம் அளித்து அதனை அச்சு வாகனமேற்றுவதற்கு நடவடிக்கையினை அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. திருமலை சுந்தாவின் 'விழியோரத்துக் கனவுகள்' சிறுகதைத்தொகுதி நல்லதொரு படைப்பாகும். மண்வாசனையை எடுத்துக் கூறும் பல கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. வேலைப்பளு கூடிய இந்நாட்களில் வாசகர்களை கூடியளவு கவரக்கூடிய ஊடகம் சிறுகதைகளேயாகும். இதனை நம் எழுத்தாளர்கள் நன்கு பயன்படுத்த வேண்டும்.

திருமலை சுந்தாவின் இன்னுமொரு சிறுகதை ஏற்கனவே அச்சுருவில் வெளிவந்துள்ளதென நினைக்கின்றேன். மக்கள் வாழ்க்கையின் சகல விடயங்களையும் மையமாக வைத்து; படிப்பினையை ஊட்டக் கூடிய வகையில் புனையப்படும் கதைகள் வாசகர்களை இலகுவாகக் கவர்ந்து விடுகின்றன. வடக்குக் கிழக்கிலுள்ள எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தும் நோக்கோடு; அமைச்சு வருடந்தோறும் இலக்கிய நூலகளுக்கான (சாகித்தியப்பரிசு) பரிசில்களை வழங்கி வருகின்றது. தற்பொழுது வடக்கு கிழக்கைப் பொறுத்தமட்டில் எழுத்தாளர்களது எழுத்தாக்க முயற்சி கூடுதலாகவே உள்ளது. ஏனெனில் நாம் கொள்வனவு

செய்யும் வெளியீடுகளின் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளன. அமைச்சின் மூலம் அச்சிட்டு வெளியிடுவதற்கு நல்ல தரமான ஆக்கங்களைக் கூடுதலா எதிர்பார்க்கின்றோம். அதே போன்று நாடகத்துறையும் வளர்க்கப்பட வேண்டும். நாடகக் கலைஞர்களுக்கு பல பிரச்சனைகள் இருப்பதனை நாம் அறிந்து அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். மற்றும் பாரம்பரியக் கலையான நாட்டுக் கூத்து கலையையும் அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

க. தியாகராஜா
செயலாளர்
வட - கிழக்கு மாகாண கல்வி, கலாசார
விளையாட்டு அமைச்சு

12 - 03 - 1996

# விழியோரத்துக் கனவுகள் (சிறுகதை)

## முன்னுரை

- 'விழியோரத்துக் கனவுகள்' அவனது இரண்டாவது சிறுகதை தொகுதி
- பத்திரிகைகள் - சஞ்சிகைகளில் அவ்வப்போது பிரசுரமான சிறுகதைகள் இத் தொகுப்பில் இடம் பிடித்துள்ளன.
- முதல் சிறுகதை தொகுதி : வேள்வி இது 'சிரித்திரன்' பிரசுரமாக வெளிவந்தது. இரண்டாவது சிறுகதை தொகுதி : விழியோரத்துக் கனவுகள். இது வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டு அமைச்சினால் வெளி வருகின்றது. இதில் அவன் பெருமிதமடைகின்றான்.
- கதைகள் எழுதுவது வேறு - அதை பத்திரிகையில் எழுதுவது என்றால்...... இத் தொகுப்பில் இணங்காட்டி நிற்கும் சில சிறுகதைகள் அவனின் மனதை உறுத்துகின்றன.
- இத் தொகுப்பில் 'எல்லோரும்' விரும்பும் படியான கதைகள் இல்லாமல் போகலாம். ஆனால் பத்திரிகைகள் விரும்பி பிரசுரித்த தகுதி... அவனுக்கு புத்தக பிரசுர தகுதியைத் தந்தது.
- அவன் கதைஎழுத ஆயிரம் புத்தகங்கள் படித்தது கிடையாது. எங்குமே போனதும் கிடையாது. அவனைச் சுற்றி அவனோடு வாழ்பவர்கள் தான் அவனின் கதை மாந்தர்கள். அவர்கள் அவனோடு கை கோர்த்து நிற்கிறார்கள். உலாவுகிறார்கள்.
- அவனது மனதை தொட்டதை; தன்னால் முடிந்த வரை உங்களுக்கு சொல்லுகின்றான்.

- இந்த விழியோரத்துக் கனவுகளின் பின்னால் 'விழியோரத்து நிஜங்கள்' அவனது அனுமதி கோரி காத்து நிற்கும் அடுத்த சிறுகதை தொகுதி. இது பத்திரிகைகளின் பிரசுர முத்திரை குத்தாத அவனது அல்ல அவனின் கதைகள்.
- இத் தொகுதியின் முது கெலும்பு திரு. செ. எதிர்மன்னசிங்கம் (மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர்) அவர்கள், மற்றவர் திரு. க. தியாகராசா (வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை செயலாளர்) அவர்கள்
- மற்றவர்கள்; இத் தொகுதியில் உள்ள கதைகளை பிரசுரம் செய்த வசந்தம்; சுடர்; தினமுரசு; கலாவல்லி; தினகரன்; திசை. வீரகேசரி; சிவநெறி; மாணிக்கம்; நிவேதனம் ஆசிரியர்கள்.
- இத் தொகுதி வெளிவர தூண்டிய நண்பர் கவிஞர் செ. தவசோதிராசா அவர்கள்.
- இன்னும் வடக்கு-கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்கள பணிப்பாளர், அங்கு கடமையாற்றும் அலுவலர்களுக்கும் நன்றி.
- 'வேள்வி' சிறுகதை தொகுதிக்கு உயிரோடு இருந்து வாழ்த்தி மகிழ்ந்தவர் மறைந்த அவன் தந்தை இளைய தம்பி சின்னத்துரை
- 'விழியோரத்துக் கனவுகள்' அவருக்கு சமர்ப்பணம்.
- இனி அவனை விழியோரத்துக் கனவுகளில் காணுங்கள்.
- விமர்சியுங்கள்.

அன்புடன்......
அவன்...
திருமலை சுந்தா

31/1, சமாது ஒழுங்கை
திருக்கோணமலை.
22 - 12 - 95

# வெளியீட்டுரை

எமது கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு வடக்கு - கிழக்கு எழுத்தாளர்களுடைய நல்ல தரமான ஆக்கங்களை அச்சிட்டு வெளியிடும் திட்டத்தைக் கடந்த இலக்கிய விழாவில் செயற்படுத்தியது.

வடக்கு - கிழக்கிலுள்ள பத்து எழுத்தாளர்களுடைய பரிசு பெற்ற பத்துக் கதைகளைத் தொகுத்துப் 'பரிசுக் கதைகள்' என்ற தொகுதியினை வெளியிட்டது.

அதன் தொடர்ச்சியாக இந்நூல் தனியொரு எழுத்தாளனது ஆக்கமாக வெளிவருகின்றது.

1970ல் எழுதத் தொடங்கி இன்றுவரை ஈழத்து இலக்கிய உலகில் பேசப்படும் 'திருமலை சுந்தா' என்னும் புனை பெயரில் எழுதிவரும் திரு இ. சி. சுந்தரலிங்கம் அவர்களுடைய பல சிறுகதைகளைத் தொகுத்து 'விழியோரத்துக் கனவுகள்' என்னும் பெயரில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இதே போன்று பல சிறுகதை எழுத்தாளர்களிடமிருந்தும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மேலும்; நூல்வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் கவிஞர் அமிர்தகழியான் அவர்களால் எழுதப்பட்ட 'இதயப் பூக்கள்' என்னும் கவிதைத் தொகுதியும் கவிஞர் திமிலை மகாலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 'அவனுக்குத்தான் தெரியும்' என்னும் நாவலும் வெளிவரவுள்ளன.

எழுத்தாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள்; அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுவதில்லை - என்ற ஆதங்கம் நீண்ட காலமாகவிருந்து வருகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்கான திட்டத்திற்கமைய வடக்கு - கிழக்கு எழுத்தாளர்களால் அச்சிட்டு வெளியிடப்படும் நூல்களில் ஒரு கணிசமான தொகையினைக் கொள்வனவு செய்து வருகின்றோம்.

இதன் காரணமாக எழுத்தாளர்களின் எழுத்தாற்றல் தூண்டிவிடப்பட்டுள்ளது. இலக்கியப் பரிசில்களும் (சாகித்திய பரிசு) வழங்கப்பட்டு எழுத்தாளர்கள் ஆண்டு தோறும் கௌரவிக்கப்படுவதால் கூடுதலான ஆக்க இலக்கியங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

இனி... விழியோரத்துக் கனவுகளில் திருமலை சுந்தா...

எஸ். எதிர்மன்னசிங்கம்
(மாகாண பணபாட்டு அலுவல்கள்
உதவிப் பணிப்பாளர்)

## திருமலை சுந்தாவின்...
# விழியோரத்துக் கனவுகளின்....


| | பக்கங்கள் |
|---|---|
| 1. பெண் ஒருத்தி | 01 - 08 |
| 2. ஒரு வீடு திறந்து கிடக்கிறது | 09 - 19 |
| 3. ஆண் மகள் | 20 - 26 |
| 4. அவள் என்ன செய்வாள்? | 27 - 39 |
| 5. என் அக்காவுக்கு கல்யாணம் | 40 - 43 |
| 6. நீண்ட கனவுகளின் அடித்தளங்கள் | 44 - 52 |
| 7. அவன் பெரியவனாகி விட்டான் | 53 - 59 |
| 8. திருமணத்துக்குப் பின்னால் | 60 - 65 |
| 9. அவர்கள் தப்பி விட்டார்கள் | 66 - 71 |
| 10. அரசமரம் | 72 - 80 |
| 11. பத்தரை மாற்றுத் தங்கம் | 81 - 87 |
| 12. தெரியாத சங்கதிகள் | 88 - 91 |
| 13. அவதிக்காரர்கள் | 92 - 104 |
| 14. தீபாவளிப் பரிசு | 105 - 115 |
| 15. முத்துக்குமரன் ஆலயத்தில் | 116 - 123 |
| 16. விடியப் போகின்றது | 124 - 133 |
| 17. குருடு ஒரு குடும்பம் | 134 - 140 |
| 18. தாக்கத்தின் மறுபக்கம் | 141 - 148 |

# பெண் ஒருத்தி

திருமலை சுந்தா

'யாழ்ப்பாண பஸ் போயிற்றா?' - கீர்த்தி சமாதுலேன் சந்தியில் நின்று, சிவன் வீதியால் வந்துகொண்டிருந்த தாடிக்காரச் சாமியாரிடம் கேட்டான்.

பூவே' க்குடன், வந்துகொண்டிருந்த தாடிக்காரச் சாமியார், ஒருமுறை கீர்த்தியை உன்னிப்பாகப் பார்த்த வர், மறுவினாடி...... போகவில்லை...... தம்பியா...... என்றார் ஒருவித தனிமரியாதையுடன்.

அந்தப் பகுதியான - ''சிவன்'' கோவில் பகுதியில் அப்படியான 'தனிமரியாதை' கீர்த்திக்கு இருந்தது. வேறு யாராவது இந்தக் கேள்வியை சாமியாரிடம் கேட்டிருக்க வேண்டும்..... சாமியார் உருத்திர தாண்டவம்தான் ஆடி இருப்பார். அப்படியான சாமியாரே கீர்த்திக்கு அந்த தனி மரியாதை கொடுப்பதென்றால்......

கீர்த்தி தனி மனிதன் அல்ல. அவன் ஒரு இயக்கம். எந்த இயக்கத்திலும் அவன் மேடையேறாத பங்காளி. 'டியூப் லைற்' வெளிச்சத்தில் அவனைக் காணமுடியாது. இருண்ட குப்பிலாம்பு வெளிச்சத்தில்தான் சில வேளை இனங்காணலாம்.

சிவன் வீதிக்கு வந்த கீர்த்தி யாழ் பஸ் வரும் திக்கைப் பார்த்தான். கால் மணித்தியாலத்திக்கு முன்புதான், டிப்போவில் இருந்து சிவன் வீதி வழியாக ஸ்டாண்டுக்குப் போன பஸ்ஸில் மனைவியை ஏற்றி இருந்தான், அந்த பஸ் கால் மணி நேரத்தில் திரும்பி அதே வழியாக யாழ்ப் பாணம் போகும்.

மனைவியை பஸ்ஸில் ஏற்றிவிட்டு வீட்டுக்கு வந்த கீர்த்தி எரிந்து கொண்டிருந்த வீட்டு லைப்புக்களை அணைத்துவிட்டு கதிரையில் அமர்ந்து பார்த்தான். சோம்பலாக இருந்தது. அந்த அழகான வீட்டை சுற்றித்தன் விழிகளைப் படரவிட்டுப பார்த்தான்.

சே...... போன பஸ் திரும்பி வரும்...... என் மனைவி பஸ்ஸில் போவதை.....? - கீர்த்தியால் இருப்புக்கொள்ள முடியவில்லை. சிலிப்பரை மாட்டிக்கொண்டு ..... மள மள வென்று வெளியே நடந்தான். வீடு பூட்டாதது ஞாபகத்திற்கு வந்தது. திரும்பி வந்து பூட்டி...... திறப்பெடுத்து......

அவன் மனதில் அவன் மனைவிதான் நிறைந்திருந்தாள். தனியாகப் பயணப்படுகின்றாள், எத்தனை தடவைகள் கெஞ்சிக் கூத்தாடியிருப்பாள்:

பாபு...... நீங்களும் வாங்க...... நான் தனியாகப்போக என்னவோ மாதிரி இருக்கு'......

பாபு கீர்த்தியின் வீட்டுப் பெயர். அவள் அதை உச்சரித்து அழைப்பதில்; ஆகா; அவன் காணும் சுகம்......

கீர்த்திக்கும் யாழ்ப்பாணம் போக ஆசையாகத்தான் இருந்தது. ஆனால்; அவனால் போகமுடியாது அத்தனையும், அவன் தான் வாழும் சமூகத்துடன் ஒன்றியதுதான் காரணம்.

அவன் யாழ் போய்விட்டால்; அவனோடு பின்னிப் பிணைந்தவர்கள் - அவனோடு ஒன்றித்துப் போன வேலைகள்......

அவளின் உடல்தான் யாழில் இருக்குமே 'ஒளிய அவளின் மனம் உயிர் எல்லாம் ... கீர்த்தியின் 'ஆசையை'

அவன் தன் மனைவிக்கு விளக்கி; யாழ்ப்பாணம் அனுப்ப.... போதும்; போதும் என்றாகிவிட்டது:

என்ன தலைவரே...... பேமன்ற் பக்கம்...... 'சைக்கிளில் போகும் கனகசிங்கம்' அவனுக்கு ஒரு குத்து: குத்திவிட்டுப் போகிறார்.

'இல்லை...... அண்ண...... யாழ்ப்பாண பஸ்......' அவன் சொல்ல முதலே கனகசிங்கத்தின் சைக்கிள் அவனைக் கடந்து விடுகிறது.

அத்தி பூத்தது போல் அவனை அந்த விடியற் பொழுதில் ... கண்டது, கனகசிங்கத்திற்கு ஒரு கேள்விக் குறியைத் தோற்றுவித்திருக்கும்...... இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் துப்பாக்கிச் 'செதுக்குவையால்' அலங்கோலப் பட்டிருக்கும் - தந்தை செல்வாவின் சிலையின் அகோரத் தோற்றத்தை கீர்த்தி பார்த்த கோணம்:

கனகசிங்கத்திற்கு தந்தை செல்வாவின் சிலையை உருவாக்கப்பட்ட கஷ்ட...... நஷ்டங்கள்...... எல்லாம் நினைவில் வந்திருக்க வேண்டும்.

சிவன் கோவில் தேர் முட்டியில் இருந்து இரண்டு இந்திய ஆமிக்காரர்கள் கீர்த்தி நிற்கும் இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கீர்த்தி அவர்களைப் பார்த்தான்: அந்த சிவன் கோவில் தேர் எரிப்பின் கதாநாயகர்களை அவன் அவர்களுக்கு இனங்காட்டியும் இருந்தான்.

தினை விதைத்தவன் தினையைத்தானே அறுக்கவேண்டும். கோவில்கள் மீது கை வைத்தவர்கள்...... கோவிலே இல்லாது தவிக்கும் காட்சிகள்...... வீடு கடைகளை எரித்

தவர்கள்...... தாம் வாழ வீடு வாசல்கள் இல்லாது அகதிகளான சங்கதிகள்......

கிர்த்தியின் மனக்கிடங்கில் உருண்ட நினைவுகளோடு...... அந்த பஸ் ..... அதில் வரும் அவன் மனைவி..... போடப்பட்டிருந்த வாகனமொன்றின் வெளிச் சட்டத்தில் அமர்ந்தான். அமர்ந்த பின்பே கவனித்தான்: பரராசசிங்கமும் அந்த இரும்புச் சட்டத்தில் அமர்ந்திருப்பதை.

ஒரு சிரிப்பு பரராச்சிங்கத்திடம் இருந்து வந்தது. அவருக்கு அவன் வந்தது, சந்தியில் நின்றது, யாழ் பஸ்ஸைக் கேட்டது எல்லாம் தெரியும்.

'தம்பி ..... மேசன் ஒருவனை பார்க்கவேண்டும். இந்த நேரத்தில் விட்டால் பிறகு பிடிக்க முடியாது......' தன் பாட்டிலேயே பரராசசிங்கம் தான் அங்கு வந்து அமர்ந்ததற்கான காரணத்தைச் சொல்லிக்கொண்டிருக்க......

கிர்த்தியின் சிந்தனைகள்...... பரராசசிங்கத்தின் உள் தோற்றத்துடன் பேசிக்கொண்டிருந்தன.

அவரை அவன் சரியாக ஐந்து மணிக்கு—— கண்டிருக்கின்றான். பஸ்ஸில் மனைவியை ஏற்றிவிட 'சிவன் கோவில்' வாசலுக்கு அவன் வந்தபொழுது அவர் கடையொன்றில் தேனீர் அருந்திக் கொண்டிருந்தார்.

இருள்...... ஆட்களை இனங்காண முடியாத நிலையில் அவர், அவனைக் கண்டிருக்க நியாயம் இல்லை: ஆனால் கிர்த்தியின் கழுகுக் கண்கள் அவரை இனங்கண்டு விட்டது. அத்துடன் கிர்த்தியின் கழுகுக் காதுகள் பரராசசிங்கத்தைப் பற்றி கூடி இருந்த அந்தப் பயணிகள் கூட்டத்தில் இரு உருவங்களால் பேசப்பட்ட .... 'வார்த்தைகளை' வாங்கியும் கொண்டது, அந்த வார்த்தைகள்.....

'வீட்டில்...... பெண்சாதி...... இரண்டு குமர்கள்...... நாலு பிள்ளைகள்...... இந்த மனிசன் என்னடா என்றால் கடையில் தேத்தண்ணி குடிக்குது'.

பிள்ளைக்காரங்க பாடே இப்படி என்றால்...... பிள்ளை...... மனைவி இல்லாதவர்கள் பாடு

கீர்த்திக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவனுக்கும் பிள்ளைகள் இல்லை. கலியாணம் முடித்த பத்து ஆண்டு களில்...... அவனுக்கு 'ஆசைகளே' அற்று விட்டதா?

ஒரு மனிதனுக்கு குறித்த ஆசை நிறைவேறா விட்டால், அவனுக்கு வேறொன்றிலும் மனம் ஏவுவதில்லை. எதிலும் விரக்தி எதிலும் பற்றற்ற தனம் அவனில் மேலோங்குகிறது.

ஆனால்...... ஆசை...... விரக்தி ... பற்றற்றநிலை:— யாழ்ப்பாண பஸ் இன்னும் வரவில்லை. அதில் வரவிருக் கும் அவன் மனைவி அதில் மட்டும் கீர்த்திக்கு ஏன் அந்த ஆசை...... விரக்தி ஏற்படவில்லை?

அதே போலத்தான்...... அந்த பரராசசிங்கத்தாரின் உள் மனதிலும் புரியாத ஆசைகள் இன்னும் இருக்கின் றதா? அவரின் மனப் போராட்டங்களை...... அவரின் அழுகையின் கொடூரத்தை...... சேர்ந்து அழுத நாட்கள் ஒன்றல்ல, பல...... அந்த நாட்களில்...... கீர்த்திக்கு எப் படித்தான்...... அந்த 'புன் சிரிப்பும்' ஏற்படுகின்றதோ? அந்தப் புன்சிரிப்பின் மர்மம் அவன் அறியாத ஒரு கேள்வி— இந்த உலகத்தில் நமக்கு எது சொந்தம். வீடு, வாசல், பிள்ளை, மனைவி...... இவைகளோடு ஆசை...... சொந் தம்...... உறவு...... சினேகிதம்...... எல்லாம் அற்ப ஆசை களில் முடிந்துவிடும். பின்பு...... நாம்...... எங்கே போகி றோம்......

கீர்த்தியின் புன்சிரிப்பின் மர்மம் அதுவாக இருக்குமோ?

உலகத்தில் உள்ள அதி சிறந்த செல்வம் எது?

''போதுமென்ற மனம்''

அந்தப் போதுமென்ற மனம்...... கீர்த்திக்கும் உள்ளதோ? இல்லை..... அதோ வர இருக்கிறதே பஸ்...... அதில் வர இருக்கிறாளே அவன் மனைவி ... அதில் மட்டும் அந்த போதுமென்ற மனம்...... கீர்த்திக்கு இல்லை தான். அவனது — பிள்ளைகளே இல்லாத சூழல்... ஏகாந்தம்... அவன் மனைவி; அவனை விட்டுப் பிரியும் அந்த சொற்ப நாட்கள்......

அவனது விரக்தித் தீயை அணைப்பவள் அவன் மனைவியா?

மனைவியா...... எல்லாம் சுத்த நடிப்புத் தம்பி...... இப்படித்தான் பரராசசிங்கம்..... அன்று ஒருநாள் அவனிடம் தன் கதையைத் தொடங்கினான். முடியாமல் கீர்த்தியிடமே இறக்குகின்றார்.

சட்டத்தில் அமர்ந்திருந்த பரராசசிங்கம் அவனுடன் ஏதும் பேசவில்லை. அவனும் பேசவில்லை.

இந்திய ஆமியின் ஜீப் இரண்டு அந்த 'சிவபுரி' ஒழுங்கையால் போய் திரும்பி வந்து இந்திய ஆமி முகாம் போட்டுள்ள சிவன் கோவில் தேர் முட்டிப் பகுதியில் உள்ள வெளியில் நின்றன.

பரராசசிங்கத்தின் கண்களும் — கீர்த்தியின் கண்களும் ..... அங்கு நடந்ததை விசாரிக்கச் சென்றன. ஆனால் அவர்கள் இருவரின் மனங்களோ......

'குமர்கள்...... பிள்ளைகள்......' அவர்களின் வாழ்வுக்கு நான் பிரச்சினையாக இருக்கக் கூடாது. கூடாத தாய்க்குப் பிறந்தவர்கள் என்ற இழிநிலை ஏற்படக் கூடாது. என் மனைவியின் சங்கதியைக் காதால் கேட்கவில்லை. கண்களால் பார்த்தேன். தீர விசாரித்தேன்...... எனக்குள் ஏற்பட்ட கோபம் — வேதனை...... எல்லாம்...... என் பிள்ளைகளின் நல் வாழ்வு ஒன்றிற்காக அழிந்துவிட்டன. நான் சடப்பொருளாக வாழ்கின்றேன்.

எனக்குள் விரக்தி இல்லை. அந்த விரக்தி மனைவியால் ஏற்பட்டு ... என் பிள்ளைகளால் தீருகிறது.

பரராசசிங்கத்தின் ஊமை வார்த்தைகள் இன்னும் -இப்போது கீர்த்தியின் உள்ளத்திலும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது கூடாத மனைவியால் ஏற்பட்ட விரக்தி பிள்ளைகளால் தீருகிறது' பிள்ளைகள் இல்லாத விரக்தி ..... நல்ல மனைவியால் தீருகிறது'.

கீர்த்தி வார்த்தைகளை அசைபோட்டுப் பார்த்தான். 'சாணம' அள்ளிக்கொண்டு போறன் வீடு மெழுக வேணும் ..... கீர்த்தியின் நண்பன் ஞானகணேஸ் தன் பாட்டிற்குச் சொல்லிக்கொண்டு போகிறார். கீர்த்தி தலை ஆட்டினான்.

'தம்பி கீர்த்தி...... நிமிர்ந்தான் கீர்த்தி...... சைக்கிள் பாரில் ஒரு நல்ல அழகி. சிவந்த ... கட்டான மேனி...... பார்த்தால் ஒருமுறை பார்க்க வேண்டிய ...... லுக் ஏ.. வன் ..... வரதன் கீர்த்தியைப் பார்த்துச் சிரித்தான். கண் அடித்தான்.

'என்ர மனிசி பிள்ளையை...... பெத்து. பெத்து களைச்சு ..... நோயாளியாகப் போட்டு .... என்ர விரக்தி...

இப்படித்தான் ... நல்ல அழகிகளால் ..... வரதனின் கண்கள் கீர்த்திக்கு - அவன் 'வசன மழையை' இனங் காட்டியது.

அட இப்படியும் விரக்தியோ '..... கீர்த்தி சிரித்தான். ஏனோ அந்த அழகியும் சிரித்தாள். வரதன் பெடலை மிதித்தான்.

மணி ஆறேகால் ...... அதோ

யாழ்பபாண பஸ் வரும் ..

அதில் கீர்த்தியின் மனைவி .....

அவள் பிரியும் அந்த அற்ப நாட்கள் ... ......

'கீர்த்தி' எழுந்து நின்றான்

அவள் அழகாகக் கையசைத்துச் சிரிக்கிறாள்

அந்தச் சிரிப்பில் ..... ஓடும் அந்த ..... சோகம் .....

அவள் ... ஓடும் பஸ்ஸில் போய்க்கொண்டிருக்கிறாள்.

(யாவும் கற்பனையா?)

# ஒரு வீடு
# திறந்து கிடக்கிறது

வாடைக் காற்றின் வேகத்தில் பனி தூறிக்கொண்டிருக்கிறது. கச்சானும் சோளகமும் ஆட்டி உலுப்பிய உழைவுக்கு 'பனிக்குளிர்' இதமாகத் தானிருந்தது. சூடேறிய அலுத்த உடலும் குளிரத் தொடங்கியது. ஜில்லென்ற பனிவாடையில் - இந்த இதமான மயக்கத்தில் அவனும் கூனிக் குறுகித்தான் கிடந்தான். நாலு வயசு நிரம்பிய பழசொன்று அவனது மேனியை போர்த்தியதால் பாவம் அதுவும் வாடையின் வேகத்தால் நடுநடுங்கியே கொண்டிருந்தது.

'கிழக்கால இருட்டுக் கட்டுது. மழை நல்லா அடிச்சு முழங்கத்தான் போகுது? கனகம்மாதான் அவனின் கனவினில் கூறுகிறாள், விடிய முந்தியே எழுப்பிவிடவேணும் என்னை என்றேனே ... ' கனவினில் தன் மனைவிக்கு சொல்ல நாவினை அசைத்த பொன்னனுக்கு - திக்கென்று ஒரு விடிவெள்ளி பளிச்சிட்டது.

இருண்டு கிடந்த வானில் பளிச்சிட்ட மின்னலின் ஒளியில் ...... அந்த விடிவெள்ளி ...... கனகம்மா பொன்னனின் விலாவடியில்தான் படுத்துக் கிடந்தாள்.

விடிவெள்ளி விடிவின் அறிகுறி. விடிவின் முன்னே விடிவெள்ளி தோன்றுவதை பொன்னன் இதயத்தில் விழுந்த கீறல்கள் கறள்கட்டி - பழுத்து வெடிக்க ஆரம்பித்ததன் எதிரொலி .... 'இன்றைக்கு விடியமுந்தி எழும்பி விட வேணும்.'

கால்களுக்கு குளிர் ஏறாது இருக்க சுற்றி இருந்த சாக்குத் துண்டினை உதறிவிட்டு - கால்களினை இழுத்து நிமிர்ந்து பாயில் இருந்தபடியே தலையினைச் சொறிந்து கொண்டான். மேலில் கிடந்த துண்டொன்றினை இழுத்து உடம்பை நன்றாக போர்த்தியபடியே மெல்ல சரிந்து தலை மாட்டில் எதையோ தேடலானான்.

கையில் அகப்பட்டதை மெல்ல தட்டிவிட்டு - பாய் விளிம்பு மறைவில் கிடந்ததை எடுத்து ..... புகையினை இழுத்தபோது மின்னிடும் மின்மினி ஒளியில் அந்த விடி வெள்ளி கனகம்மா இன்னும் அவனின் விலாவடியில் உறங்கிக் கொண்டுதான் இருந்தாள்!

சுருட்டுக் குறையினை உதட்டில் இருந்து கைக்கு எடுத்துக் கொண்டதும் வாடையின் சோர்வு புகை மண்டலத்தில் புகைந்து கொள்ளலானது. புகையின் நிறை வில் மெல்ல பாயினை விட்டு எழுந்தவன் இருட்டுலே தடுமாறி வீட்டு படலையை திறந்துகொண்டு வெளி முற் றத்தில் இறங்கி நடக்கலானான். இன்னும் கனகம்மா பொன்னனின் விலாவடியில் .....

''இந்த இருட்டிலே எங்க போறீங்க? விடிஞ்சு போனா என்ன '' கனகம்மா விழித்துக் கொண்டாள். அவளுக்கு புகை மயக்கமில்லை. வாடையின் வேதனையில் தான் ..... கேட்டாள்.

பொன்னன் திரும்பிப பார்த்தான். அவனுக்கு ஆத் திரம் பொத்துக்கொண்டு வந்தது. 'கனகம் - உனக்கு நான் எத்தனை நாள் சொல்லி இருப்பன் போற நேரத்தில இடைமறிச்சு கூப்பிடாதையென்று' பற்களை நறுமிக் கொண்டான்.

'மூதேசி ..... எனக்கு வாற கோபத்தில ... ' தலையினை வளவு வாசல் பக்கமாக திருப்பி கால்களினை தூக்கி வைத்த போது புடலம் பந்தலுக்கு கீழ்ே கிடந்த அவனின் நாய் 'வள்' என்று குரைத்தபடி எழுந்து நின்றது. என்ர சோற்றை திண்டு போட்டே எனக்கே விளையாட்டா காட்டுறியள்' குனிந்து கல்லொன்றினை எடுத்து -நாய் 'வீலென்று' அலறியபடி கிணற்றடிப் பக்கமாக ஓடியது, பொன்னன் வாசலை நோக்கி நடந்தான். வாசல் கதவை 'பளாரென்று' விட்ட சத்தத்தில் கனகம்மா எழுந்துவிட்டாள்.

'இந்த விடியாத நடுச்சாமத்தில் என்ன புடுங்க போறாரோ? ஒரு வேளை கனகலிங்கத்தாரின் மிளகாய்த் தோட்டத்துக்குள் எதை எதையோ நினைத்தபடி, திறந்த தெருக்கதவை சாத்த, வெளிமுற்றத்தில் இறங்கிய போது, பனியின் தாக்கம் தலையில் 'சில்லென்றது. முந்தானைச் சேலையை தலையில் போட்டுக்கொண்டு நடந்த போது வீட்டு நாயும் வாலை ஆட்டிக்கொண்டு அவளை சுற்றியது.

'வள் ..... வள் .. ஊவ் . லொள்' - நாலு காணிகளுக்கு அப்பாலே பொன்னன் நடர்து போவதை நாய்களின் ஓலத்தில் இருந்து கனகம்மா தெரிந்தபோது-'மேட்டு வளவு நாய்கள், கெட்ட சனியன்கள். தெரிஞ்ச ஆக்கள் என்றாலும் விடுகிதுகள் இல்லையே' என்று புறுபுறுத்துக் கொண்டாள். கிறவல் போட்ட தெருவினை பார்த்து விட்டு கதவு கொழுக்கியினை மாட்டியபோது எல்லை வேலியோரமாக - ஏதோ சத்தம் கேட்டது. வீட்டு நாயும் திண்ணையில் பேசாமல் கிடந்தது.

'ஏய்... கனகம்மா ... ' உன்னைத்தான் கனகம்மா... அடுத்த வீட்டு எல்லை வேலியோரமாக தன்னை அழைப்

பது சின்னையர்தான் என்பது கனகம்மாவுக்கு புரிந்தது. சத்தம் வந்த இடத்தினை நோக்கி நடந்தவளுக்கு தெருக் கதவு பூட்டாமல் விட்டது ஞாபகத்தில வரவில்லை.

''சின்னையா ஐயாவர......''

''ஓம் பிள்ளை.....'' பொன்னன் சிவப் போயிட் டானா? உள்ளுக்குள வரட்டா ...''

,,இப்பதான் வெளியில போனார். வந்தாலும் வந்திடு வார். கெதியா வாங்க.'' அவசர அவசரமாக சொல்லிக் கொண்டே வீட்டு குசினிக்குள் கனகம்மா ஓடினாள்.

தெரிஞ்சுது என்றால்...... என்பாடு குளோஸ்தான், மானம் மரியாதை என்று என்னமோ ஏதோ கதைப்பாரே. ஒரு நாளைக்கு இத அவருக்குச் சொல்லி போட்டால்...... தன் நாலு குழந்தைகள் ஞாபகம்தான், இறப்பில் இருந்து தேடாக் கயிறை எடுத்தபோது முந்திக்கொண்டு வந்தது.

தேடாவின் தலப்பை சின்ன வாளியில் முடிந்து கொண்டு குசினிக்குள் இருந்து வெளி முற்றத்துக்கு கன கம்மா வந்தபோது சின்னையர் மூன்று பெரிய வாளிகளு டன் தயாராக நின்றார்.

''கனகம்மா — இன்டைக்கு ஏன் வெள்ளாப்புக்கு முந் தியே பொன்னன் போயிருக்கான். ஏதும் விசேஷமா?'' வாளிகளை ஆட்டிக்கொண்டு கிணத்தடிநோக்கி நடந்தபடி சின்னையர் சொன்னது கன்கம்மாக்கு பயமாகவே இருந் தது.

''ஏனென்று தெரியல்ல: ஒருவேளை கனகலிங்கத்தா ரின் மிளகாய் தோட்டத்தில ஏதும் வேலைவெட்டி இருக் குமோ தெரியவில்லை, அந்த மனிசனிட்ட இதுகளை எல் லாம் கேட்டா — அது என்ன எனக்கு எல்லாத்தையும் சொல்லவா போகுது?''

''ஏன் இப்பவும் நல்லா குடிக்கிறவனோ '' சின்னையா, தன் கணவனை இந்த நிலைக்கு தாழ்த்திய போது — ''ஏன் நீங்க குடிக்கிறதில்லையோ...'' என்று கோபத்தை உடன் காட்டிக் கொண்டாள் கனகம்மா. அசைபோட்ட தாவை பற்களால் கடித்தபடி தொடர்ந்தும் அசைபோட்டாள்.

''இஞ்ச பாருங்க. நீங்க அவரு இல்லாத நேரத்தில் தண்ணிய கள்ளக் களவாய் இஞ்ச அள்ள வாரது அவ்வளவு நல்லதாய் எனக்கு படல்ல.''

கனகம்மாவின் பதில் — தலையினை உருட்டி, ஒட்டிய மண்டை ஓட்டு எலும்புகளை உடைத்தெறிவது போலிருந்தது சின்னையருக்கு. பனிக்குளிரில் குத்திட்ட நின்ற ரோமங்கள்கூட, சூடேறிய உணர்வின் நாடி நரம்புகளின் தாக்கத்தினால், முன்னைய போல சாய்ந்து மடங்கின.

''தம்பலகாமத்தில இருக்கேக்க நினைச்சன். கொலனியில எடுத்தா இப்படி ஏதும் வருமெண்டு. அங்க என்றால் அவர் அவருக்கு குறித்த பகுதி இருக்கும். இஞ்ச டி. ஆர். ஓ. வின் பேமிற்றில காட்டை அழிச்சு சேனை எடுத்தா— எப்படி அவன் அவங்கள் தடுக்க முடியும். இந்த கிணத்து சனியனால இந்த பொன்னனிட்ட பணிய களவாய் அவன் கிணத்தில் தண்ணி அள்ளாட்டி அரசாங்கத்தின் கிணத்துக்கு அரைமைல் போகவேணும். எங்கட கிணறு எல்லாம் உவர் தண்ணியாயிருக்கே. அவன் கிணத்தில மட்டும் நல்ல தண்ணியா வரவேண்டும்? கடவுளே... '' சாதித் தடிப்பில் தன் கிராமத்தில் வாழ்ந்த சின்னையர் உயர் நிலையில் இருந்து இறங்கியபோது — 'பள்ளன் என்றாலும் அவன் தமிழ்ச்சாதியில ஒரு மனிசன்தான்' என்பதை மட்டும் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

'என்ன கடுமையா யோசிக்கிறியள்? கெதியா வாங்க தண்ணிய அள்ளி ஊற்றிவிடுறன்......' கனகம்மா அவதி

யரினர்ள். தோளில் கிடந்த துவாய் துண்டினை தலையில் சுற்றிவிட்டு தான் கொண்டுவந்த வாளிகளை இணைத்து தொட்டியில் வைத்துவிட்டு சின்னையர் நிமிர்ந்தபோது.... திண்ணையில் கிடந்த வீட்டு நாயும் 'வள் வள்' என்று இருமுறை குரைத்துவிட்டு பின் காணியால் ஓடத் தொடங்கியது.

'யாரென்று பாருங்க ' கனகம்மா தண்ணியை அள்ளிக்கொண்டே சொன்னாள். சின்னையருக்கு இருட்டிலே ஒன்றுமே தெரியவில்லை. 'ஏதும்...... உடும்பு கிடும்பா இருக்கும்......' என்றார். நிரம்பிய வாளிகளை தூக்கிக் கொண்டு போய் தன் எல்லை வேலிப் பொட்டுக்கால் வைத்துவிட்டு கடைசி வாளியினைத் தூக்கியபோது ஏதோ பெரியதொரு கடமை முடிந்தது போன்ற பிரமை அவர் முகத்தில் நிழலாடியது.

'கனகம்மா வரட்டுமா......' வீட்டு முற்றத்தில் சின்னையர் வரும்போது, அவர் பின்னால் கனகம்மா கிணற்று வாளிக்கயிறோடு வந்துகொண்டிருந்தாள் பதிலுக்கு அவள் தலையினை ஆட்டிவிட்டு குசினிக்குள் புகுந்தபோது—முற்றத்தில் பொன்னனின் குரல் கேட்டது.

''யாரு பக்கத்துச் சேனைக்காரரா? சுகத்தோடதான வாரியள்? சின்னையர் ஏதுமே பேசவில்லை. அவரின் காலடியில் வாளி நிரம்ப தண்ணீர் இருந்தது.

''பலபேரு சொல்லியும் நான் நம்பல்ல. இப்பதான் புரிந்தது நீங்க நடத்துற புது நாடகம். விடியமுன்னே நான் விடிவெள்ளி காணப்போவேன். ஆனா......

''என்ன பொன்னா...... என்ன நடந்தது......'' தன் களவுக்கு வேலி போட்டார் சின்னையர். என்னபேரு பொன்னனா மண்ணாங்கட்டி, நாற்பது வருடத்துக்கு

முந்தி நான் யாழ்ப்பாணத்தில்தான் பிறந்தன்; அப்ப என் அடிமை அப்பன் எனக்கு பொன்னுத்துரையென்று செல்லமாக பேரு பதிவுக்காரரிட்ட பதிவு வைச்சார்; அந்த பேர் பதிவுக்காரன் சாதித்தடிப்பில என்னை பொன்னனாக மாற்றிவிட்டான். படிக்க எழுத தெரியாத என் ஆம்பிள அப்பன் என்ன படிக்கவச்சான். பிறப்பு சேட்டு பிக்கேற் தேவைப்பட்டபோது என் பேரு பொன்னுத்துரையென்று பார்ப்பிக்கவைச்சான். இருந்தால்தானே திரும்பவும் அந்த படிக்காத அப்பன் உங்கட பதிவுகாரரிட்ட ஓடினார்; அதுக்கு அந்த பதிவுகாரன் என்ன சொன்னான் தெரியுமா — 'டேய் கந்தா... போய் 'பொ' வரிசையிலே பாரு; அதயே வைச்சிரு' என்றானாம். அதெல்லாம் அந்தக்காலம் இப்ப பள்ளனும் படிச்சிருக்கான். அவனை இனி ஏமாற்றமுடியாது''.

'ஓம்.. ஓம்...' சின்னையர் பதறினார் — பதில் சொல்லாது.

''சின்னையர் —— ஊரவங்க என்னட்ட சொன்னது வேற நாடகம், ஆனா நான் இப்ப கண்ணால கண்டது புதுநாடகம். நீ கதாநாயகன், என்மனிசி கதாநாயகி.... பார்த்தவன் நான் மட்டும்தான் ஆனா... இது ஊரவங்க வேற நாடகம் நடக்கிறதாய் சொன்ன சேனைக்காரங்க பகலில் பார்க்கனும்...'' நகைச்சுவையாக பேசினான்.

'என்ன?' சின்னையரின் நெஞ்சு படபடத்தது.

''கனகி...'' பலமாக பொன்னுத்துரை கத்தினான். அவனின் மனித உருவம் இப்போதுதான் சின்னையருக்கு மங்கலாக தெரியத் தொடங்கியது.

''எடியே பார்த்தியாடி, நீ எனக்கு தெரியாம செஞ்ச காரியம் இப்ப எங்க ஊருக்குள் எப்படி வந்திட்டுது என்று''

''என்ன செஞ்சாம், உனக்கு தெரியாம வைச்சதுதான் பிழை பிறகென்ன .... பாவம் சின்னையர். அவரால் எப்படி அரைமைல் நடக்கமுடியும் அப்பா'' கனகம்மா ஆறுதலாகவே கதைத்தாள்.

''ஓ - கணவனுக்கு மறைக்கவேண்டிய விஷயந்தானே இது.....'' பொன்னுத்துரை சினத்தோடே சொன்னான்.

''நீ என்ன சொல்லுகிறாய் .....'' பொன்னன் என்று சொல்லப் பயந்து — செஞ்சலுடன் தொங்கப் போட்ட தலையினை நிமிர்த்திக் கேட்டார் சின்னையர்.

பல்லை நெறுமிய பொன்னுத்துரைக்கு பனிக்குளிர் தெரியவில்லை. அவ்வளவு சூடாக அவன் உடல் வேகி வெந்து கொண்டிருந்தது.

''சேனைக்காரங்க என்ன கதைக்கிறாங்க தெரியுமா? உனக்கு இது தெரியாது. நீ தனியா காலையில் இஞ்ச வாறதை எப்படி உங்கட ஆக்கள் கதைக்கிறார்கள் தெரியுமா? நான் வேலை செய்யிற கனகலிங்கத்தார் எனக்கு நேற்று இரவு வரேக்க என்ன சொன்னார் தெரியுமா? 'பொன்னா உனக்கு என்மேல் வெறுப்பு இருக்கலாம். ஆனால் தான்' சொல்லுறது மெய், உங்க பக்கத்து சேனைக்காரர் உன் பெண்சாதிய சந்திக்கிராராம். இத நேரே பார்த்தவங்க தான் என்னட்ட சொன்னாங்க'' எப்படி இருந்திருப்பேன் நான். எதற்கும் உண்மை தெரியட்டும். இவங்கட வாயை அடக்கலாம் என்று தான் காலையில விடிவெள்ளி காணப்போனேன். என் மனிசி இப்படிப்பட்டவள் என்று நான் நினைக்கல்ல ..... அது உண்மையாகிட்டுது ... அவள் என்மேல உசிரு''...... தழு தழுத்த குரலில் சொன்ன தன் கணவன் பேசாது விக்கித்துக் கொண்டதும், கனகம்மாவின் கண்களில் கண்ணீர் துளிகள் பொங்க ஆரம்பித்தன.

'நீ என்னை மன்னிச்சிடு. இவர் களவாய் தண்ணி அள்ளுற விசயத்தை உனக்கு முன்பு சொல்லி இருக்க வேண் டும். எல்லாம் என் புத்தி மாறாட்டம் தான்....? கன கம்மா சொன்னதும் பொன்னுத்துரை திடீரென்று சிரித் துக் கொண்டான், அவனின் சிரிப்பில் புத்துயிர் பெற்ற சின்னையர் கனகலிங்கம் சொன்னானா' என்று துள்ளிய போது ....

'ஏய் உன் துள்ளலை நிறுத்து. என் பெண்சாதிமேலை பெருத்த பழியினை நீ ஏற்படுத்திட்டாய். நீ இங்கு எத் தனை தரம் துள்ளிக் குதித்தாலும் — என்னத்திற்கு இவளை சந்தித்தாய் என்ற உங்க ஆக்கள் கேள்விக்கு உன்னால பதில் சொல்ல முடியாதென்று எனக்குத் தெரி யும். ''பள்ளன் வீட்ட தண்ணி அள்ளப் போனன். உன் தண்ணி சுத்த உவரு'' என்று சொல்ல உனக்கு மனம் வருமா? வராது தான்.

''எங்களுக்கு தண்ணி அள்ளி ஊற்றப்பழக்கப்பட்ட உங்க கரங்கள் தாழ்த்தப்பட்ட எங்கட பெடிச்சிமாரின் கரங்களால் ஊற்றப்பட்ட தண்ணியை எப்படி கொண்டு செல்ல பழக்கப்பட்டனவோ! யுகம் மாறிக் கொண்டுதான் இருக்கிறது. நீங்கதான் இப்படியென்றால் நாமும் அப்படி இருந்தது தவறுதான். கனகி உங்களையே தண்ணி அள்ள விட்டிருக்க வேண்டும். அவள் பிழை விட்டிட்டாள். அவ ளுக்கு ஒன்றுமே தெரியாது.''

என்ன சொன்னனி...... ''கனகம்மா தன் கணவனை இடைமறித்தாள்.

''நீ ..... சும்மா இரு, சின்னையரை தண்ணிய பகலில் வந்து அள்ளச் சொல்லி இருக்கலாம். எல்லாருக்கும் தெரிஞ் சிருக்கும். இப்ப உன்மேல பழி வந்திருக்கே......'' மடிக் குள் கிடந்த கத்தியை எடுத்து விரித்தான் பொன்னுத்

துரை. அவனின் அந்தத் திடீர் மாற்றம் கண்டு சின்னை யரின் ஈரல் கருகியே விட்டது.

''சின்னையர், எங்கள யாரென்று நினைச்சாய். அந்த காலத்தில மூளைகெட்ட எங்கட சனங்கள பள்ளப் பகுதி யில இருத்துனீங்க. மாரி மழை வெள்ளத்தில நாங்க மிதந்தம். ஐம்பது, நூறு உதவி எங்கள உங்கட நிரந்தர அடிமை ஆக்கினீங்க. ஆனா...... இப்ப நாங்களும் மனிசங் களாக சரிலெவலில .... ஒரே சமதரையில்தான் இருக்கம். எங்கள இனி ஏமாற்றமுடியாது''.

,,நான் சாதி வெறியன் இல்ல ..... உங்க தண்ணிய குடிக்கிற நான் சாதிவெறியனா? சின்னையர் பதிலை மழுப்பினார். 'ஒரே மண்ணில தமிழ் பேசுற ஒரே இனத் துக்குள்ள சாதிகள ஏன் பிரிச்சம். அப்ப அடக்கி ஆள நினைச்சம். இப்ப...... அவங்களும் மனிசன் தான். எங் கட இந்த சாதி பிளவுகள் — எங்க இனத்தின் ஒற்று மையை கலைக்கிற போது — பொது எதிரிகள் எங்க எல் லோரையும் அடக்கி அலங்கோலப் படுத்திற இந்த கால கட்டத்தில்...... நாம் ஏன் பிளவுகளை ஏற்படுத்த வேண் டும். சின்னையரின் நெஞ்சில் எங்கோ படிச்சது இப்போது-

''என்ன பேசாம நிக்கிறீங்க, மனைவி மேல வந்த தீராத பழி விடிஞ்சதும் தீரணும். நாளைக் காலையில இங்க வந்து தண்ணி அள்ளணும். அதை எல்லோரும் கண்டு, இதுக்குத் தான் விடியமுந்தி வருகிறவர் சின்னை யர் என்று சொல்லி என் மனிசி மேல உண்டான கறை யினை நீக்க வேண்டும். புரிஞ்சுதா சின்னையர்''.

சின்னையர் தலையினை பலிக்கிடாய் போல ஆட்டி னார். அவரின் தொண்டைக்குள் இருந்து சொற்கள் வெளிவரத் தயங்கின.

''என்ன தலையாட்டுறீர்......'' கையில் இருந்த கத்தியினை தூக்கி நிமிர்த்தியபோது கனகம்மா குறுக்கிட்டாள்.

''என்னை வெட்டிடாதை..... நான் காலையில வாரன்...... என்னை நம்பு பொன்னுத்துரை.....'' சின்னையரின் மாற்றம் பொன்னுத்துரைக்கு வேகத்தை ஊட்டியது.

'ஒருதனி மனிதமாற்றம்...... சமுதாய...... ஏன் ஒரு இனமாற்றமாகி ?' பொன்னுத்துரை நிமிர்ந்து பார்த்தான்.

இன்னும் இருட்டுக்குள் அவனின் வீடு திறந்துதான் கிடக்கின்றது.

# ஆண் மகள்

பாவம் அப்பா. என்ன ஆசையா இந்த வீட்டைக் கட்டி முடித்தார். 'என்னப்பா இவள் ரேகா கம்பசால வரப்போகிறாள். நீங்கள் உங்கள் பாட்டில் வேலை...... வேலை...... என்று இருந்தால்...... இந்த தகரக் கொட்ட கையையா கொடுப்பது அவளுக்கு ....? அதுவும் அவள் ஒரு என்ஜினியர். வரப்போறவரும் என்ஜினியர்.'

இப்படித்தான் அம்மா; அப்பாவுடன் நாளாந்தம் சண்டைபோட்டு இந்த அழகான வீட்டை கட்டிமுடிக்க தூண்டுதலாக இருந்திருப்பாள்

அப்பாவிடம் காசு இல்லை என்று சொல்வதற்கில்லை. யாழ்ப்பாணத்து அம்மாவின் சீதன காணி; பூமிகளையும் தன் முதிசங்களையும் பத்து வருசத்துக்கு முன்போ விற்று வங்கியில் 'ஃபிக்சற் டிப்போசிற்'றில் போட்டிருந்தார்.

இரண்டு தோணியில் கால் வைக்கக்கூடாது. ஒன்றில் யாழ்ப்பாணம். இல்லாட்டி திருகோணமலை. முடிவாக திருகோணமலையில்தான் வாழ்வது என்ற முடிவு ஏற் பட்ட போதுதான்... யாழ்ப்பாண சொத்துக்களை விற்க அப்பா முடிவுசெய்தார். அம்மாவும் தலையாட்டினாள்.

''என்னடி ரேகா ரோஜா பூவுடன் ஏதோ கதைக் கிறாய்......?''

ரேகா ரோஜா பூவுடன் கதைத்துக் கொண்டிருப் பதை தாய் கேட்டுவிட்டே கேட்டாள்.

''இல்லை அம்மா...... மனிசரைப் பார்க்கிலும்..... இந்தப் பூ.. செடி... கொடி.... மரங்கள் எல்லாம் எவ்வ

ளவோ உயர்ந்ததம்மா...... என்ன ரகசியத்தையும் பய மில்லாமல் நாங்கள் சொல்லலாம். நல்ல நண்பர்கள் அம்மா இவர்கள்......"

ரோகாவின் பேச்சு .... பார்த்த பார்வை... வார்த் தைகள் வந்த தொனி...... ரேகாவின் அம்மாவை ஏதோ செய்திருக்க வேண்டும். இவளுக்கென்ன வந்ததென்ற நினைவுடன் ''என்னடி உனக்கு .....?'' ரேகாவின் அருகி னில் ஓடிவந்தாள்; கட்டியணைத்து ''உனக்கென்னடி...... அப்படி......?'' அழத்தொடங்குகிறாள் அம்மா.

ரேகாவுக்கு தாயைப் பார்க்கவே பரிதாபமாக இருந் தது. ''அம்மா.... எனக்கு விசர்.... கிசர்.... இல்லை.... நல்ல சுய நினைவோடுதான் இருக்கேன்... நீ அழவேண் டாம்.'' ரேகா ஆறுதல் சொன்னாள்.

''நீ எனக்கு ஆறுதல் சொல்லுறாய்.... என்ன ... நீ படிச்சனி... இன்னும் மூன்று மாதத்தில் என்ஜினியர் உத்தி யோகம்... இப்படி சின்னப் பிள்ளையாட்டம்...'' ரேகா வுக்கு அவளின் தாய் எதையோ நினைவூட்டினாள்.

''ஓம் அம்மா... கிணற்றடியில் நின்றுகொண்டு வசனம் பேசியதும்; வாழை மரங்களோடு சண்டை பிடிச்சது; பூனைக் குட்டிகளோடு செல்லங் கொஞ்சியதும்; குருவி; லவ் பேட்சுகளுடன் அவைகளின் மொழியில் பேசி மகிழ்ந் ததுவும்; பாட்டுப் பாடினதும்; ஓம் அம்மா... அந்த ஏழு எட்டு வயது.... என்ன இனிய நாட்கள் அம்மா. அப்ப எனக்கு விசரா அம்மா... அதுக்கு பின்னால்தானே நான் படிச்சு இப்போ சொல்லுறியோ... என்ஜினியராக வரப் போறன் என்று... அம்மா நீ ஒன்றுக்கும் பயப்படாத எனக்கு விசர் இல்லை. அந்த ஏழு, எட்டு வயது நினை வில் என் பழைய சிநேகிதர்களுடன் பேசி மகிழ்கின்றேன். அவ்வளவுதான்....'' ரேகா தாயிடம் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள்.

''கம்பசால வந்த கையோட ...... வீவுக்குள்ள எங்காவது ஒரு சேஞ்சுக்கு கூட்டிக்கொண்டு போய் விட்டு வாங்க. ரேகாவின் மனம் ஆறவேண்டும்.. ''

ரேகாவின் தோழி பரிமளம் சொன்னது தாய்க்கு உறுத்தியது.

''என்னம்மா யோசிக்கிறாய்... ? நீ மூளையை விட்டுப் போடாதை...... நீ விட்டால் அப்பா பாவம். எனக்கு பின்னாடி கலியாண கனவோடு நித்தம் வாழும் நித்யா பாவம். வேலை வேலையென்று அலையும் தம்பியன் கலங்கிப் போவான். எந்த நேரமும் உன் மடிக்குள்ள கிடக்கும் குட்டியும் துவண்டு போவான் ... வீடே தலை கீழாக போகும் அம்மா. நீ யோசிக்காத ..... என் முடிவை தேடிய நான்தான் யோசிக்க வேண்டும். அம்மா தயவு செய்து என்னை மட்டும் தனியா விட்டுடுங்க என்றால் பெரிய புண்ணியம் அம்மா... இந்த ரேகா பூவிடம் யோசனை கேட்பேன். மாதுளம் பழத்திடம் வழியைக் கேட்பேன் எனக்கு எல்லாம் சரியாய்ப் போயிடும் அம்மா ..... ''

''இவள் எங்கட சொல்ல கேட்கிறாள் இல்ல .. சாவகச்சேரி என்ஜினியர் பெடியனை விசாரித்துப் பார்த் தன். நல்ல குடி, கோத்திரம்; ஆனால் குடும்பம் கொஞ் சம் பெரிசு. நாலு வயதுக்கு வந்த தமக்கை தங்கச்சிமார். வேற ஆண் பிள்ளைகளோ துணையோ இல்லை. இவரை யும் இவரின் உழைப்பையும் நம்பித்தான் அந்த குடும்பம் இருக்கு. தகப்பன் போன வருடம் கிளாலி மோதலில் ஆளே இல்லை. அவங்கள் கேட்கிற மாதிரி ஐந்து இலட்சத்தையும் இந்த வீட்டையும் கொடுக்க ஒப்பிடுவம். வேறவழி இல்ல. நாங்கள் இழுத்தடித்தோம் என்றால் இவள் ரேகாவின் மனமும் பேதலிச்சு ...... விசரி ஆகிடு வாள். சின்னவள் நித்தியாவுக்கும் சீதனம் கொடுக்க இருக் குது தானே? இனி தம்பியன் உழைப்பான்......''

ரேகாவின் தாய் தன் கணவரின் வார்த்தைகளை யோசித்துப் பார்த்தாள்.

''ஓம்பட வேண்டியதுதான். இல்லாட்டி இவளுக்கு ..'' முடிந்த முடிவோடு ரேகாவின் முதுகினில் கையினை வைத்து ''ரேகா ... நான் கேட்பன் பிடிவாதமாக இருக்காமல் பதிலைச் சொல்லு... '' என்று விட்டு பூமரச் சாடிக்கு பக்கத்தில் கிடந்த மணல் திடலில் அமர்ந்து கொண்டாள்.

''என்ன கேட்கப் போகிறாய்? அவங்கள் கேட்கிற முழுச் சீதனத்தையும் கொடுக்கிற எண்டு தானே!'' ரேகா சிரித்தாள்.

''என்னடி சிரிக்கிறாய்......?

''அப்ப என்ன அழவா சொல்கிறாய்.....? என்ன

இந்த மூன்று வருசமாக காதலித்தாரே ... அதுக்கு'' ரேகா விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

''என்னடி ... ஏன் அழுகிறாய்.....?''

அழ இல்லை அம்மா...... இந்த உலகத்தில் வாழும் ஆம்பிளையளை நினைச்சுதான் அம்மா......''

''உன்ர அப்பா ... உன்ர தம்பி...... எல்லோரும் ஆம்பிளையள் தானே?''

''ஏன் ரஞ்சனும் ஆம்பிளதான் அம்மா......''

ரேகாவின் 'ரஞ்சன்' என்ற சொல் தாயை உலுப்பி எடுத்தது.

ரஞ்சன், கிட்டடி சொந்தக்காரன். ரேகா கம்பசுக்கு போகும்வரை...... ரேகாவின் பெற்றோரும் ரஞ்சன் ரேகாவுடன் நெருங்கிப் பழகுவதை வித்தியாசமாக பார்க்கவில்லை. ரேகாவின் மனம் மாறிய பின்புதான் ரஞ்சனை இவர்கள் தள்ளி வைத்தார்கள். கம்பசில் உள்ள என்ஜினியர் மாப்பிள்ளை எங்கே? தாய் தகப்பன் சொத்தில் சாப்பிட்டுக்கொண்டு திரியும் ரஞ்சன் எங்கே .....? ரேகாவின் இழப்பால் ரஞ்சன் ஏதோ வேலையென வெளிநாடு போனான். சிலர் அவன் ஏதோ இயக்கத்திற்கு போய் விட்டதாகச் சொன்னார்கள். ''உங்கட படிச்ச மோளாள எங்கட பொடியனை தாரை வார்த்திட்டு தவிக்கிறம். இந்த பாவம் உங்களை சும்மா விடுமா... ? ரஞ்சனின் தாய் ரேகாவின் தாயைக் கண்டால் இதைத்தான் திருப்பித் திருப்பி சொல்லுவாள்.

மாயமாக போன ரஞ்சன் ஒருநாள் ஊருக்கு வந்தான். ஆட்டோ ஓட்டிக்கொண்டு திரிகிறான். சில சமயங்களில் வழி தெருவில் ரேகாவின் தாயைக் கண்டால்......

''வாங்க மாமி .... வாங்க வீட்டுக்கு கொண்டு போய் விடுறன்... ...ரேகாவைப் பற்றி நினைக்காதிங்க...... அவ படிச்சவ ...... நான் .....?'' என அன்பாக கதைத்து பண்பாக நடப்பான்.

''என்னம்மா...... ரஞ்சன் என்றவுடன் ...... யோசிக்கிறீங்க......? இந்த விஷயமாக நான் ரஞ்சன் குடும்பத்துடன் பேசிப்போட்டன்......'' ரேகா நிமிர்ந்து இருந்த தலையினை மேலும் நிமிர்த்திச் சொன்னாள்.

''ரஞ்சனோட பேசிப் போட்டியா......? எதைப் பேசினாய்?'' தாய் அதிர்ச்சியுடன் கேட்டபோது .....

எதுவித அதிர்ச்சியும் இல்லாமல் ரேகா சொன்னாள்... ''நான் கும்புடுகிற காளி ஆச்சி ..... சத்தியமாய் நான் முடிச்சால்...... ரஞ்சனைத்தான் முடிப்பன்......''

''என்ன ... ? தாய் மீளாத அதிர்ச்சியோடு மணல் திட்டில் இருந்து எழும்பியபோது......

''அம்மா இரு...... அடிக்கடி மனதை மாத்த நான் ஆண்மகன் அல்ல. வாசிற்றியில அவர் சொன்ன வார்த்தைகள்...... சத்தியங்கள் 'எங்கட சம்பந்தத்துக்கு சிதனம் என்ற பேச்சே வேண்டாம். உங்கட குடும்ப நிலவரம் தெரியும். நான் உழைப்பேன்...... உங்கட குடும்பத்தையும் பின்னோக்கி போக விடமாட்டேன். என் பெற்றோரும் உங்கட குடும்பம் தாள விடமாட்டார்கள். என்னை நம்புங்கள்......' என்று அவருக்கு எத்தனை படிச்சு...... படிச்சு சொன்னேன்.

''கலியாணத்துக்கு முதல் பேசிற பேச்சை பேசிப் போடவேணும். பிறகு அதற்காக சண்டை சச்சரவு செய்ய முடியாது.'' இப்படி யாரோ அவையளின் தாய்க்கு குத்தி விட்டிருக்கினம். இவரும் இதை பிடிச்சுக் கொண்டு...... தாய் வழி நின்றால்......?

''என்னோடு இனி வாழப் போறாளே இவள். சுகம் துக்கம் எல்லாம் இவளோடு தானே என்ற எண்ணம்...... இவருக்கு சிறிதளவாவது இருக்கா அம்மா?

''என்னை நம்பாதவர்... என் பேச்சை ஏற்காதவர்... இவரை நான் மணந்தால் நெடுக குடும்பத்துக்க சண்டை தான் அம்மா......''

ரேகா வார்த்தைகளை நிறுத்தியபோது......

''அப்ப...... ரஞ்சனையா முடிக்கப் போறாய்......''

தாய் சத்தமாக கேட்டாள்.

''ஆம்...... ஆம்...... ஆம்......'' ரேகா அதே சத்தத்துடன் பதிலைச் சொன்னாள்.

''என்னடி...... உனக்கு பயித்தியமா பிடிச்சுப் போச்சு......? நீ என்ஜினியர்...... படிச்சனி...... இவன்......?

ரேகா வாய்விட்டு சிரித்தாள்.

''ரேகா... மலரே... நீ... சொல்லு... ரஞ்சனை...... நான் முடிக்க... உனக்கு...... சம்மதம்... தானே...?''

''ரேகா... நீ... ஆண்மகன் அல்ல ..... ஆண்மகள்...'' ரோஜா மலர் சொன்னது.

ரேகா... இப்போது.. ரோஜா மலருடன் சேர்ந்து சிரித்துக் கொண்டாள், ஆண்மகள் ஆக...... ரேகாவின் தாய்......!!

# அவள் என்ன செய்வாள்?

மாசி மாதத்தின் மத்திய காலமிது. வண்ணாத்திப் பூச்சிகளும் புற்றீசல்போல பறக்கத் தொடங்கி விட்டன. வெள்ளை நிறத்தினால் ஆன இவைகளின் கூட்டம் போருக்குப் போகும் யுத்த பேரிகையின் வீரர் அணி வகுப்பு போலவே இருந்தது.

பறக்கின்ற அந்த வெள்ளை நிறத்தினால் ஆன வண்ணாத்திப் பூச்சிகளை கறுப்பாயி மிக உள்ளிப்பாகவே பார்த்தாள். அவளுக்கும் இதே நினைவுதான் எழுந்தது. ஒவ்வொன்றாக கணக்கிடலானாள். அவளின் எண்ணிக் கையின் இலக்கங்களும் நீண்டு கொண்டே இருந்தது.

''ஏய் புள்ள என்ன செய்யிறே! நாங்க தண்ணி எடுக்க வேண்டாமா? உன் குடத்துள கெதியா தண்ணிய பிடிவன்!'' கறுப்பாயின் பின்புறமிருந்து மூளிரான குரல் ஒன்று வந்தது. கறுப்பாயி பின்னால் திரும்பாமல் 'களுக்' கென்று சிரித்து விட்டுத் தன் முறைக்குக் காத்துக் கொண்டிருந்த அந்த குடத்தை பைப்புக்குக் கீழே வைத் தாள்.

அந்த சேரிப் பகுதியில் இருக்கும் ஒரு குடிநீர் நிலை யம் அந்த பைப்பொன்றுதான். காலை பத்து மணியாகிய தும் பைப்பிலே நீர் வற்றி விடும். பின்னேரம் நாலு மணிக்குப் பின்னால்தான் நீர் ஊற்றெடுக்கும்.

சிவராத்திரியை ஒட்டி நல்ல மழையொன்று பெய்தது. அதனால் சிவன் கோவிலுக்குப் பின் உள்ள குளமும் நிரம்பி வழிகின்றது. கறுப்பாயிக்குத் தனது அடுத்த வேலையினை நினைத்த போது குளத்தின் — நினைவும் எழத்தான்

செய்தது. 'களுக்' கென்று அவளையறியாமல் அந்த சிரிப்பொன்று உதிர்ந்தது.

பைப்பையும் குளத்தையும் ஒருமித்து கறுப்பாயி கணக்குப் போட்டுப் பார்த்தாள்.

ஓர் அழகான உருவம் அவளை மெய் மறக்கத் தோன்றி மறையலானது. அதுதான் அவளின் சிரிப்புக்கும், முன்னைய கணக்கிற்கும் காரணங்களா? இரண்டாவது தடவையாக அந்த கணக்கினை மனதுள் எழுதத் தொடங்கினாள்.

இரண்டு உருவங்கள் விடையாக அவளை அண்மித்து அரவணைக்க ஆயத்தமாவதை அவள் உணர்ந்தாள். நெற்றியில் வியர்வைத் துளிகள் கோலம் போட்டன.

''ஏய் பிள்ளை எடன் குடத்தை. என்ன கனவா காணுகிறாய்?'' திரும்பவும் முன்னர் எழுந்த அதே முளிரான குரல் கேட்ட போது கறுப்பாயி பின்னால் திரும்பிப் பார்த்தாள். குடம் அவளின் வலது கையின் அணைப்புக்காக நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

''நல்ல... சிவப்பான... அழகின்னா வூட்டிலே ஈக்காமே நடுரோட்டிலே பைப்பு தண்ணிக்கு கொடத்த வைச்சிட்டு கனவு கண்டா... தாய் தகப்பனு வேலைக்கு வெள்ள வெளுக்க எந்திரிச்சி போனோங்கன்னா இவபாடு என்னா? பெண்ணோ? அடக்கமா? ஒடுக்கமா வீட்டிலே ஈந்தாவென்ன? இவ உசக்க நினைக்கிறா நல்லாப் படுவா?'' முன்னர் எழுந்த அதே முளிரான குரலில் ஒருவித தடுமாற்றம் இருந்தது.

கறுப்பாயி அரை மணித்தியால கியூவின் பின்னால் கிடைத்த நெற்றி வியர்வைத் தளும்புகளை அழித்துக்

கொண்டே வெகு அலட்சியமாக குடத்தைத் தூக்கி இடுப்பில் இருத்தினாள்.

நெற்றியை மறைத்த மயிரைக் கோதி விட்டுக் கொண்டே ''தண்ணி இல்லே — பைப்படிக்குப் போனா எம்மாசனம். பாத்தியா முனியம்மா. காத்தாலே நான் மூஞ்சி கூட சமுவல்லே'' என்று கறுப்பாயி சொல்லிக் கொண்டே தன் வரவுக்காக கிறவல் றோட்டுக்குள் நின்ற முனியம்மாவை நோக்கி நடக்கலானாள்.

முனியம்மாவை வைச்சே முஸிரான குரல்காரிக்கு பதிலடி கொடுக்க வேண்டுமென்பது கறுப்பாயியின் நடையின் கதியில் இருந்தது. தார் றோட்டில் ஒரு கார் நின்று கொண்டிருந்தது. அதைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே கறுப்பாயி கிறவல் றோட்டுக்குள் இறங்கினாள்.

''முனி — அந்த போக்கத்தவள் என்னை என்ன மாதிரி திட்டிச்சு. எனக்கு அடக்கம், ஒடுக்கம் தெரியாதாம்''

''நீ சும்மா இரு புள்ளே: வெள்ள வெளுக்கவே சண்டையைத் தொடக்கினா நாளு பூராகவும் ஒரே அடிபிடிதான். அவங்க சொன்னது அவளோட இருக்கட்டும்''. முனியம்மாவின் சமாளிப்பு கறுப்பாயிக்கு ஆத்திரத்தையே தந்தது.

முனியம்மாவுக்கு முப்பது வயதிற்கு மேலிருக்கும். பொக்கையான உடல்வாகு. கறுப்பாயியை இவளோட ஒப்பிட்டால் தாய்க்கும், மகளுக்கும் உள்ள பொருத்தம் தான். 'ஆனாலும் இருவரும் ஒன்றாக சேர்ந்து போகும் போக்கைப் பார்த்தால்......

'களுக்' — தூர்ந்து போன அந்தச் சிரிப்பு கறுப்பாயியின் ஆத்திரத்தின் துளிர்ப்பிலிருந்து மறுபடியும் தோன்றிக் கொண்டது.

"ஏன் சிரிக்கிறே... உன்னை யாரோ நினைச்சிச்சு என்றா......"

"சும்மா இரு முனி"

"பின்னே உனக்கு தானே சிவமாலை ஐயா, காத்த மூத்து மவன் செல்லையனை பேசி முடிச்க இருக்கிறார். இன்னும் ஒரு மாசம் தான். அதுக்குள்ள அவன் உன்னை நினைச்சிட்டான் போல" முனியம்மா நீண்ட அந்த படலத்தை தொடக்கி வைத்தாள். ஆனாலும், அவளுக்கு தான் வந்த காரியம்...... அவள் கையில் காகிதமாய் வீசும் குளிர் காற்றில் நடுநடுங்குவதை அவளால் உணரக் கூடிய தாகவும் இருந்தது!.

'அதே குளிர் முனியம்மாவின் பேச்சினால் கறுப்பாயி யின் உள்ளத்தைக் கூட ஒரு கணம் சில்லிடவே வைத்து விட்டது. கறுப்பாயியின் முன்னைய அர்த்தமற்ற சிரிப்பு களுக்கும் கணக்குகளுக்கும் காரணங்கள்? முனியம்மா கேலியாக சொல்லிக் கொண்ட சிவமாலை ஐயாவும், செல்லையனாகவும் இருக்குமா?

"குளத்து தண்ணியத்தான் நாம குடிச்சு சாக வேணுமா? எங்களுக்கென்று ஒரு பைப் வேணும்" இப்படி சங்கக் கட்டிடத்தில் முழங்கி பிரேரணை கொண்டு வந்து பின்னர் நகரசபை தலைவரோடு போராடி தார் றோட்டு பைப்புக்கே அடிவகுத்தவன் தான் செல்லையன். அவனை செயல்படுத்தி வெற்றி கண்டவர் தான் சிவமாலை ஐயா. செல்லையனையும், சிவமாலை ஐயாவையும் அந்த காலை வேளையில் கறுப்பாயி சில தடவைகள் ஒப்பிட்டு பார்த் தும் இருந்தாள்?

அவ்வருடம் தான் அவள் க. பொ. த. பரீட்சையில் சித்தி பெற்றிருந்தாள். அதே திகைப்பில் — அந்த சேரி

வாழ்வினில் படித்தவன் என்ற விலாசத்தில் கறுப்பாயி யிக்கு சில சிந்தனைகள் வெளிப்படத்தான் செய்தன. செல்லையன் தங்கள் இனத்தோடு இணமாக — இரத்தத் தோடு இரத்தமாகக் கலந்தவன். ஆனால் சிவமாலை ஐயா ... அவரின் உருவத்தை தங்கள் சமூகத்தினர் — தங்களின் நெஞ்சினுள்ளே படம் போட்டு வைத்திருக்கும் அளவுக்கு - அவர் அந்த சமூகத்தோடு ஒன்றி, அவர்களுக்கே தன்னை அர்ப்பணித்து விட்டார்.

''நான் வந்த விஷயத்தை மறந்துட்டேனே, பின்னே— இந்தா... இந்த ஆங்கிலத்தில வந்திருக்கிற கடுதாசிய படி, அதான் வெள்ள வெளுக்க உன்னட்ட வந்தேன்...'' முனி யம்மா தன் கையிலே இருந்த கடிதத்தை கறுப்பாயியிடம் நீட்டினாள்.

வலப்பக்க இடையில் குடத்தினை இருத்தியதால் - கடிதத்தை வாங்கிக் கொண்ட கறுப்பாயியின் இடக்கை யானது சற்று படபடத்தே அந்த கடிதத்தை உயர்த்தியது. கண்கள் வெகு வேகமாக ஓடத் தொடங்கின.

எதுவுமே புரியாத நிலையில் முனியம்மா நடந்தபடி இரண்டு மூன்று முறைகள், இருமி ....

''முனி அக்கா உன் புருஷன் கங்காணி காத்தமுத்தன் நகரசபை தலைவருக்கு பணிஞ்சு நம்மட ஆக்களுங்கள குறைஞ்ச கூலியில வேலை வேண்டியிருக்கிறான் என்பதற் காக - குமச்சுபுட்டு பேசினதே ஞாபகம் இருக்கா?

''ஆமா - அதான் போன வருஷம் நடந்திச்சு. அதால வேலை இழந்திச்சல்லோ அவரு இப்ப இருக்கார்.''

''நம்ம சிவமாலை ஐயா இது விஷயத்தில சும்மா இருக்கலே. என்னா செய்தாருன்னா உம்ம புருஷனுக்கு

வேலையும் வாங்கி கொடுத்து - இவ்வளவு நாளும் சம்பளத்தையும் பெற்று கொடுத்திருக்கார். இதுதான் இந்த கடிதம்''

''உம்மையா - சாமி சத்தியமா?''

''ஏன் - உண்மைதான். நம்மளுங்களுக்கெல்லாம் சிவமாலை ஐயா கடவுள் மாதிரி. போன மாதம் ஸ்ரைக் செஞ்சி வெற்றி கண்டாங்களே எங்க ஆளுங்க, யாரு உதவினார்? சிவமாலை ஐயா தானே! நம்மட ஆளுங்க கன்னா பின்னாவென்று கள்ளை குடிச்சு குடிச்சு அழிஞ்சு போறதைத் தடுக்க நகரசுத்தி தொழிலாளர் சங்கமென்று ஒன்றைத் தொடங்கி எல்லாமே நடத்துறதே இவருதானே! எங்கள மதிச்சு - எங்கள மதிப்பாக்க - ஏன் எங்களையும் மற்றவங்க மனிசர் எங்கிறதை மதிக்கிற அளவுக்கு கொண்டு வந்தவர்... உழைச்ச யாரு?

சிவமாலை ஐயா நம்மட இனமா? நம்மட இரத்தமா? அல்லது உடன் பிறப்புகளில் ஒன்றா? இல்லை! எங்கோ பெருங் குடியில் பிறந்து - பஞ்சத்தோடு பஞ்சமாய் பறந்து திரிகின்ற எங்களுக்காக வந்து - இன்னும் எங்க கூடவே வாழற அவரு... - அவர் போல இந்த உலகத்தில வாழ யாருக்கு மனசு வரும்? அவர் செய்யிற தியாகத்திற்கு ..

ஆவென்ற வாயை மூடாது பிளந்து கொண்டே நடந்த முனியம்மா - தன்னால் பேச முடியாதென்ற நிலையில் மகிழ்ச்சியோடு திளைத்தாள். அவள் புருஷனுக்குத் தானே; சிவமாலை ஐயாவின் துணையோடு வேலை கிடைத்து விட்டது. அத்தோடு ஒரு வருட சம்பளமும் கிடைத்து விட்டதே!

வடருயடித் திருப்பத்திற்கு அவர்கள் வந்து விட்டார்கள். வலது பக்கமாக திரும்பும் குச்சு ஒழுங்கைக்குள்

இறங்கினால் கறுப்பாயியின் குடிசைக்குப் போகலாம். நேராகப் போய்த் திரும்பினால் முனியம்மாவின் நகரசபை லயம் வரும்.

அப்போது... மூச்சு வாங்க ஓடி வந்தான் மேட்டுத் திடலில் கிட்டி; விளையாடிக் கொண்டு நின்ற கறுப்பாயியின் தம்பி.

ஏய் அக்கா சிவமாலை ஐயா மூணு தடவை வந்து தேடிச்சு...... இப்பதான் சங்க கட்டிடத்துக்கு போறார். கறுப்பாயியிக்கு தம்பியின் சொற்கள் குளிராக இதயத்தை வந்து மெதுமையாகத் தாக்கின.

ஏன் சிவமாலை ஐயா அழைக்கிறார்?

''கறுப்பாயி - செல்லையன் விஷயமாகத்தான் இருக்கும்? உன்னோட முடிவு எடுக்க வேணாம்?'' - முனியம்மா சொன்னது தான் தாமதம், கறுப்பாயியின் வாயிலிருந்து அந்த 'களுக்' கென்ற சிரிப்பும் உதிர்ந்தே விட்டது.

''ஏய் புள்ளே, நீ சிரிக்கிறியே...... அதே சிரிப்பு...... கே. ஆரு. விசயா கூட தோற்று போயிடும். அந்தா பாரு......'' முனியம்மா சொல்லிக் கொண்டே குளத்தோரமாக போகும் உருவத்திற்கு பின் புறமாக சுட்டு விரலை நீட்டினாள்.

என்னமோ ஏதோவென்று திரும்பிய கறுப்பாயி - அந்த உருவத்தைக் கண்டபோது...... என்ன மாதிரித்தான் தலை கவிழ்ந்தாளோ?

'அடே... அடே... வெக்கத்தைப் பாரு. இன்னும் ஒரு மாசம். பிறகென்ன சோடியா அந்தக் குளத்து கட்டில... செல்லையனும் நீயுமாக காதல் கதையெலாம் பேசித்

திரியலாம். உங்கட சோடிப் பொருத்த மீக்கே. நாங்க பொறாமைப் படப் போறோம். செல்லையனை உன்னோட சேர்த்து வைக்கத்தான் சிவமாலை ஐயாவுக்கு எத்தனை ஆசை. அவருதானே உன் வூட்டில் இந்த பேச்சை ஆரம் பிச்சாரு!'' - முனியம்மா தனக்குத் தெரியவந்த விபரங் களைக் கூறும்போது, கறுப்பாயிக்கு போன திங்கள் கிழமை த்ன் வீடு வந்து தகப்பனுடன் சிவமாலை ஐயா கலியாண விஷயமாக பேசியபோது சொன்ன வார்த்தை கள் இன்ப ஈட்டிகளாகக் குத்திக் கொண்டு நினைவுக்கு வந்தன.

கறுப்பாயி முனியம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு ஒழுங்கைக்குள் ஏறினாள். ''இந்தா குடத்தை வூட்டுக்கு கொண்டுபோ... நான் சிவமாலை ஐயாவை பார்த்திட்டு வாரன்'' தம்பிக்குச் சொல்லும் போது கறுப்பாயியின் அதட்டல் அவனை பணிய வைத்தபோது...

கறுப்பாயிக்கு அந்த 'களுக்' என்ற சிரிப்பு மீண்டும் வந்து விழுந்தெழுந்தது. இடுப்பில் இருந்த குடத்தை தம்பியிடம் கொடுத்துவிட்டு இரு கைகளாலும் முகத்தை துடைத்து சேலை முந்தானையால் ஒத்திக் கொண்டாள். தோள் மூட்டில் இருந்து வழுவிய சட்டைக் கையை இழுத்து சரிப்படுத்தினாள். சங்க கட்டிடத்துக்கு நடக்கத் தொடங்கினாள். அவளை - அவளையறியாமலே குளக்கட் டில் நின்ற உருவமொன்று பார்த்துக் கொண்டு நின்றது. காலை ஏழரை மணிக்குப் போகும் ரீ.ரீ.ஏ. பஸ்சும் மெயின் றோட்டால் போய்க் கொண்டிருந்தது.

'யாரு - கறுப்பாயியா வா உன்னோட பேசவேணும். ஏன் வெளியே நிக்கிறாய் வா உள்ளே சிவமாலையரின் குரலுக்கு மதிப்பினைத் தந்தவளாய் பூனை போல பதுங்கி அருகே வந்தாள்.

''உன் கலியாண விஷயமாக செல்லையனோட இப்ப தான் பேசினேன். அடுத்த மாதம் ஒரு நாளில கலியா ணத்தை நடத்த அவன் சம்மதம் தந்திட்டான். ஆனால்,...

''என்னங்க ஐயா''

''நீ படிச்சனி. தன்னோட வாழ்வியா என்பது இவ னுக்கு சந்தேகமாக இருக்கு. ஒரு தடவை உன்னட்டே கேட்க முயற்சித்தான். முடியவில்லை - இப்ப நான் கேக்கிறன்''

கறுப்பாயி ஏதுமே பேசாது மௌனியானாள்.

''என்ன - பேசாமல் இருக்கிறியே - உனக்கு செல்லை யனை பிடிக்கவில்லையா?''

கறுப்பாயி தலையினை ஆட்டினாள்.

''ஒத்துக் கொள்ளுறியா - செல்லையனை மணக்க...''

அதற்கு ஆமென்ற சாயலில் கறுப்பாயி தலையினை அசைத்தாள்.

''இந்தா கறுப்பாயி- செல்லையன் பல நாளாய் உன் னிடம் கேட்கலாமென்று நினைத்தானாம், . அதை.. வாவன் கிட்ட காதைக்கொடு'' கறுப்பாயிக்கு இந்த வார்த்தைகள் நடுக்கத்தையே ஏற்படுத்தியது.

''கிட்ட வா.....''

கறுப்பாயி காதினை கூர்மையாக்கி சிவமாலையரை அணுகினாள். அவர் ஏதோ மளமளத்தார். கறுப்பாயியின் உடல் நடுநடுங்கியது.

ஏன் அவள் அப்படி நடுநடுங்குகிறாள்? அவளின் கண்கள் வெளுக்க ஆரம்பித்தன.

''என்ன பேசாமல் நிக்கிறியே'' தான் சொன்ன இரகசியத்தின் அர்த்தத்தை; எச்சிலை விழுங்கி ஈரமாக்கிய தொண்டையினால் கரகரத்த குரலில் சிவமாலையர் சொன்னார்.

கறுப்பாயி சிவமாலையரை உன்னிப்பாகப் பார்த்தாள். அவளுக்கு அந்த 'களுக்' என்ற சிரிப்பு எப்படித்தான் வந்ததோ அடுத்த நிமிடம் அவளின் கண்களில் இருந்து ………………

கண்ணீர் வருவதை சிவமாலையர் எதிர்பார்த்த ஒன்றுதான். அவரின் உடலும் பதறிக்கொண்டே இருந்தது, மெதுவாக எழுந்து ஆவென்று வாயினைப் பிளந்து உள்ளே நடக்கப் போகும் கோரக் காட்சிகளை காட்டவென திறந்திருந்த வாயில் கதவினை சாத்திவர சென்றார்? கறுப்பாயி அவரை மறிக்கவில்லை.

தன்னைச் சுற்றி விழுந்த வட்டத்தை வடிவாக தொட்டுத் தொட்டுப் பார்க்கலானாள் கறுப்பாயி. 'டார் — டார்' நிசப்தமான அந்த வேளை - குளத்தின் பக்கமிருந்து சேலை அடிக்கும் சத்தம் கேட்டது. அடிக்கும் சேலை பயந்தால் எப்படி அதில் இருந்து ஊற்றை கழர முடியும்?

சிவமாலையர் கதிரையில் வந்து அமர்ந்தார். அறைக் கதவு சாத்தப்பட்டதால் இருளாக அவ்விடம் இருந்தது.

''கறுப்பாயி - விஷயம் முன்னாடி தெரியவேண்டும் என்கிறதுக்காகத்தான் சொல்கின்றேன் நேற்றே இதைச் செல்லையன் என்னிடம் சொல்லி அழுதான்'' தனது இரகசிய வார்த்தைகளை சற்று விரிவாக்கி தொடர்ந்தார் சிவமாலையர்.

''நான் நினைத்தது ஒன்று நடந்து விட்டது வேறொன்று''

செல்லையன் காதலிச்ச முனியம்மாவின் பெட்டைக்கு இப்ப மூனு மாசம் - பிள்ளைத் தாச்சி.

கறுப்பாயி விக்கி அழத்தான் நினைத்தாள். முடிய வில்லை. சிவமாலை ஐயாவின் எண்ணத் துளிர்வுகள் அதை?

''செல்லையன் ஒரு போராளி அவனின் விரிவான சமூக போராட்டத்துக்கு ஒரு உந்தலாக துணை தேவை. அது உன்னால்தான் முடியும்!''

கறுப்பாயி கண்களைத் துடைத்தாள்,

என்ன செய்யனுங்க நான்......''

சிவமாலை தன் கண்களை துடைத்துக் கொண்டே சொன்னார். ''நீ செல்லையனையே மணக்க வேண்டும்.''

நீங்க மறைக்க மாட்டீங்க அவருக்கு நான் ஒரு உந்த லாக இருக்க முடியும்? முன்னவ நிலை என்ன?

''அது இரகசியம் — செல்லையன் காதலிச்ச பெட் டையை இன்னொருவனுக்கு கலியாணம் செய்து வைக்கப் போறேன்''

''என்னங்க—''

''வேற வழி இல்லை இந்த விஷயத்தை நான் உன் னிடம் மறைத்திருக்கலாம். ஆனால் நான் விரும்புகிற உங்கள் வாழ்க்கையில் இது பெரிய பிரச்சினையாக பின் னால் உருவாகி விடுமென்பதனால்தான்......''

''அப்படியாயின் முனியம்மா மகள் கெதி...... அவள் இதற்கு சம்மதிக்க வேண்டுமே!''

அதுக்கு வழி பண்ணிட்டேன் 'தம் சமூகம்' என்ற ஒரே காரணத்துக்காக - அதன் பிரச்சனைகளோடு ஒன்றிய வர்கள் என்பதற்காக அவர்களே உங்கள் கலியாணத்தை ஆதரிக்கிறார்கள்''

''உண்மையா?'' கறுப்பாயியின் உடல் பூரித்தது. இப்படியும் நடக்குமா''?

''உண்மைதான் என் எண்ணங்கள் - எவ்விதமானவை ஏன் நான் இதையெல்லாம் செய்கிறேன் என்பதையெல்லாம் இனி உன்னால்தான்—''

கறுப்பாயி நிமிர்ந்து நின்றாள். ''எங்கள் சமூகத்துக்கு எது வந்தாலும்...... நான் தயார். ஐயா உங்கள் அணியில் இருந்து அவரைக் காப்பேன்'' கறுப்பாயி சினிமா வசனமா பேசுகிறாள்?

சிவமாலையர் சந்தோசத்தோடு எழுந்தார்.

கதவினை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. சன்னல் துவாரத்தின் ஊடாக பார்த்தார். அப்போதே தான் ஏன் கதவினை சாத்தினேன் என்ற வினா ஒன்று அவரிடமிருந்து அவருக்கே எழுந்தது.

''நான் ஏன் கதவினைச் சாத்தினேன்?'' வெளியே நின்ற அந்த உருவத்துக்கு பொதியப் போகும் கேள்விக் குறியோடு சிவமாலையர் வளைந்தபோது அவருக்கு எல்லாமே தலைகீழாக உருளுவது போலிருந்தது.

தெரியாத்தனமாக ஏற்பட்ட இந்தத் தவறு - சிவமாலையர் அப்படியே......

கறுப்பாயி அவரை அணுகினாள். 'யார் ஐயா வெளியே கதவினைத் தட்டுறது?'

அப்போதுதான் அவளுக்கும் புரிந்தது; ஏன் கதவினைச் சாத்த அவரை விட்டேன்?

கதவினைத் திறந்தால் - எழப்போகின்ற காட்சிகள்;... நிகழ்வுகள் எல்லாமே.........

'களுக்' அவளுக்கென்ற சிரிப்பு அர்த்தத்தோடே வெளிவந்தது.

சிவமாலை ஐயா ''கதவை திறவுங்க'' - வெளியே செல்லையனின் குரல் பலமாக ஒலித்துக்கொண்டே இருந்தது.

# என் அக்காவுக்கு கல்யாணம்

லிசாவின் சந்தோஷத்துக்கு அளவே இல்லை. வாய் முழுதும் பல்லாய் சிரித்துப் பார்த்தாள். வயிறு நொந்ததுதான் மிச்சம்.

காரணம் வேறு ஏதும் இல்லை. அக்காவுக்கு வரன் தேடி ... மாப்பிள்ளையின் படத்தைப் பார்த்தபோது தான் ... லிசாவுக்கு அந்த பொல்லாத சிரிப்பும் பொத்துக்கொண்டு வந்தது.

''என்னடி இப்படி சிரிக்கிறாய்..?'' லிசாவின் தாய் கேட்டபோது ''இல்லை அம்மா . என்னை குண்டு... குண்டு தடிமாடு... தடிமாடு என்பீர்கள்... இப்ப அக்காவுக்கு வாரவரைப் பார்க்கும்போதுதான்...'' லிசா மீண்டும் தன் அழகான சிரிப்பை உதிர்த்தாள்.

தாய்க்கும் சிரிப்புத்தான் வந்தது. கஷ்டப்பட்டு அடக்க லிசாவின் அம்மா முற்பட... ''பிறகென்ன அம்மாவை இனி எங்க பிடிக்கிறது. மூத்த மகளோட கொஞ்சிக் குலவ கனடா போய் விடுவா... நாங்கதான் இஞ்ச இருந்து '' லிசா வார்த்தைகளை உதிர்த்தபோது... தபால்காரனின் மணியோசை கேட்கவும் சரியாக இருந்தது.

துள்ளிப் பாய்ந்து தெருவுக்கு ஓடிய லிசா கடிதத்துடன் திரும்பி வந்தாள். ''அம்மா அக்காவின் கடிதம்...'' கடிதத்தை பிரித்தாள்.

ஒரு பக்கத்தில் அழகான முத்து முத்து எழுத்துக்களில் கடிதம் எழுதப்பட்டிருந்தது. ''என்னவாம்...?'' தாயின் குரலுக்கு ஏதும் சொல்லாதவளாய் லிசாவின் கண்கள் அந்த கடித வரிகளுடன் மொய்த்துக்கொண்டிருந்தன.

''என்னடி கடிதத்தில எழுதி இருக்கு?... கொண்டுவா அதை..'' விசாவின் தாய் கதிரையில் இருந்து எழ முற் பட்டபோது

''அம்மா அக்காவுக்கு வாற மாதம் லீவாம் இன்னும் இரண்டு வருடத்துக்குப் பிறகு படிப்பு முடிந்த பின்பே... கல்யாணத்தைப் பற்றி சிந்திக்கலாமாம்...'' கடிதத்தை தாயிடம் கொடுத்துவிட்டு வானத்தைப் பார்த்தாள். முன் முற்றத்தில் கதலி வாழை பெரிய குலையொன்று போட் டிருந்தது. நல்ல குண்டு குண்டான வாழைக் காய்கள்... பார்ப்பதற்கு அழகாக 'மட்டுமல்ல.... ஆனந்தமாகவும் இருந்தது விசாவுக்கு. ஆனால்.... ஆனா .. அவள் முகத் தில் ஐந்து நிமிடங்களுக்கு முன்பிருந்த அந்த ஆனந்தம்.... பெருமிதம்... அளவற்ற மகிழ்ச்சியின் சாயல் எல்லாமே இப்போது அந்த முற்றத்து கதலி வாழையுடன் ஒட்டியாகி விட்டது?

அக்காவின் கல்யாணத்தை நினைத்து அந்தரத்தில் பறந்த அவளுக்கு அக்காவின் கடித வரிகள்... அவளது கற்பனை நினைவுகளை கட்டியா விட்டன?

''ஏனம்மா... அக்காவுக்கு இந்த சம்பந்தம் ? நல்ல இடம் அல்லவா? தேடிப் போனாலும் இப்படி வருமா? கலியாணத்தைச் செய்துபோட்டும் படிப்பை முடிக்கலாம் தானே. அதுக்கு அவையள் ஓமென்று சொல்லுகினம் தானே...? அக்கா ஏன் இப்படி எழுத வேணும்?'' விசா ஆத்திரத்தோடுதான் தாயிடம் கேட்டாள்.

ஆனால் அந்த ஆத்திரம் உணர்வின் சாயல் விசாவின் தாய் தங்கரத்தினத்தின் முகத்தில் எள்ளளவும் இல்லை. கலவரம்தான் புகுந்துவிட்டிருந்தது. சிந்தனைக் கோடுகள் முகத்தில் மாறி... மாறி... அழ .. அழகான வண்ணப் படங்களை கீறி... கீறி... அழித்துக்கொண்டிருந்தன.

உச்சி வெய்யில் அந்த தகர விட்டை மட்டுமல்ல... அவர்கள் இருவரினதும் தலைகளையும் சூடாக்கியே கொண்டிருந்தது. ''எப்ப பார்த்தாலும் இந்த அக்கா இப்படித்தான். எதைச் செய்யப் போனாலும் அதுக்கு ஒரு எதிர்ப்பு. அப்பா எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த கல்யாண சம்பந்தத்தைப் பேசி முடித்தார். பாவம் அவர். இவ இரண்டு வரியில் தப்பப் பார்க்கிறா... வாசிற்றியில படிச்சா என்ன பெரிய மனிசியான நினைப்போ! இல்லாட்டி கொஞ்சம் 'பஸ்' படிச்சுத்தான் எங்களுக்கு பெரிய மனிசாகக் காட்டுற நினைப்போ... சே...''

லிசா தன் வார்த்தைகளை எண்ணைச் சட்டியில் போட்டு பொரிக்கத் தொடங்கினாள்.

''லிசா... சும்மா இரு. கதைக்காதை...''

''என்னண்டு கதைக்காமல் இருக்க... என்ர ஸ்கூல் பிள்ளைகளிட்ட அக்காவுக்கு கலியாணம்... அக்காவுக்கு கலியாணம் என்று எத்தனை தடவைகள் சொல்லிப்போட்டன். இனி எப்படி அவையள் முகத்தில முழிக்கிறது? அம்மா! எங்கட பிரின்சிபல் அடிக்கடி சொல்லுவா. பிள்ளைகள் வாழ்க்கைதான் முக்கியம் படிப்பல்ல. இந்த படிப்பு அந்த வாழ்க்கையை செப்பனிட உதவ வேண்டும் என்று...

''அக்காவும் முதலில வாற நல்ல வாழ்க்கையைதான் நேசிக்க வேண்டுமே ஒளிய படிப்பு... படிப்பு.... என்று வாழ்க்கையையே பாழாக்கக்கூடாது. படித்திருக்கிறாவாம்... படிப்பு... கண்டறியாத படிப்பு...''

''லிசா சும்மா இரு... கதைக்காதை...''

''உங்களுக்கு மூத்த மகள் என்றா போதும் அவ என்ன செய்தாலும் சரிதான்... நான்...''

''லிசா சத்தம் போடாதை... கொஞ்சம் யோசித்துப் பார். நாங்க இருக்கிறது திருகோணமலையில... அவ இருக்கிறது யாழ்ப்பாணத்தில. நாங்க யுத்தமில்லாத ரவுண் பகுதியில புளிச்சல் வாழ்க்கை வாழ்கிறம். அவ யுத்தம் நடைபெறும் பயங்கர பூமியில் வாழுகிறா. எங்களுக்கும் அவவுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கு. இதில் கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

''அவளின் முடிவை ஒட்டித்தான் நாங்களும் முடிவு எடுக்கவேண்டும். அவதிப்படக்கூடாது...''

தாய் தங்கரத்தினம் மெதுவாக சொன்னது லிசாவின் காதுகளில் வேகமாக நுழைந்துகொண்டது.

''அப்ப அக்காவின் கலியாணம்...: அப்ப அக்காவின் கலியாணம்...''

சுருதி இல்லாத வார்த்தைகள் லிசாவின் வாயில் இருந்து வந்தபோது...

''லிசா அப்பாவை ஒருக்கா யாழ்ப்பாணம் அனுப்பி என்னண்டு பார்ப்பம்.''

அம்மாவின் வார்த்தைகள்......

லிசாவின் காதுகளில்... ..

வானில் உச்சத்தில் பறந்த அந்த போர்விமானம் சுப்பர் சொனிக்... தன் உச்சமான குண்டுகளை பொழிந்து விட்டு மின்வெட்டில் மறைந்தது போலிருந்தது;

தினமுரசு நவம்பர் 06 - 12, 1994

# நீண்ட கனவுகளின் அடித்தளங்கள்

கனவுகள் கலையவில்லை. கண்கள்தான் இறுக்கிக் கொண்டன. அதனால்...? விதானையார் நாகராசர் இரண்டு இரவுகள் இதைப்பற்றித்தான் சிந்தித்தார். இதைப் பற்றியென்றால்...

அந்த நீண்ட கனவுகள் அடிக்கடி எழுந்து கொள்ளும் அடித்தளங்களைப் பற்றியே தான்! ஆனால்... அதே நேரத்தில் தன் வாழ்வின் அடித்தளத்திற்கு அத்திவாரமாக அமைந்துபோன அக்காள் அன்னலட்சுமி... தன்னுடைய கனவுகளின் அடித்தளத்திற்கு..

நாகராசாவுக்கு நா வரண்டே விட்டது. தன்னுடைய முடிவினை எப்படி அக்காளிடம் கூறலாம்?

அன்னலட்சுமி சுவையாக தந்த தேனீர் கூட அவரின் வரண்ட நாவுக்கு இதமாக இருக்கவே இல்லை. அத்தோடு நாக்கின் சுவை அரும்புகள் கூடும் நுனிப்பகுதியில் இரண்டு சிவந்த பருக்கள் வேதனையினையும் தந்தன. வாயினை உறிஞ்சி எச்சில் சத்தமெழுப்பிவிட்டபோது கொஞ்சம் சுகமாகத்தான் இருந்தது. என்றாலும்...

தன் நீண்ட கனவுகளின் அடித்தளங்கள் எல்லாம் தான் எடுத்துக்கொண்ட அந்த திடீர் முடிவினால் உடைந்து நொறுங்கி, பாவம் அக்காளைக்கூட பதறவைத்து விடுமென்பது விதானையாருக்கு தெரியாத தொன்றல்ல! அதை எப்படி நாசூக்காகக்கூறி விடலாமென்று கடுமையாக மூளையைப்போட்டு அவர் குழப்பிக் கொண்டாலும்...

வாய்மட்டும் அசைந்த பாடாகவே தெரியவில்லை. பற்களினால் வேதனையினைத்தந்த பருக்களை அழுத்திப் பார்த்தார். மிச்சம் சுகமான வேதனைதான் கூடிக் கொண்டிருந்தது. அந்த வேதனை அவரின் அந்த திடீர் முடிவினால் ஏற்பட்டதொன்றல்ல! அந்த திடீர் முடிவுக்கு காரணிகளாக-உண்மையான பெரிய பாரதூரமான பிரச் சனையொன்றே அவரை நிமிரவைத்து மனிதாபிமானக் கண்ணோடு சிந்திக்கத் தூண்டி... இந்த நிலைக்கு அவரை வரவைத்தது. தன்னுடைய அந்த மனிதாபிமான எண் ணம்

தான் இந்த திடீர் முடிவுக்குவரக் காரணிகளாக அமைந்துபோன அந்தப் பெரிய பிரச்சினை-நாசூக்காக திணித்துக்கொண்டு தன்னுடைய இனத்தையே சுட்டுப் பொசுக்குகின்ற எரிசுவாலையாக இன்னுமொரு ஆளும் இனத்திடமிருந்து வந்தபோது...

நாகராசா தான் வென்றுவிட்டதாகவே நினைத்தார். இதற்காக அவரது கடந்தகால வாழ்வின் பல பாரதூர மான பாவச்செயல்கள் கொல்லாமல் கொன்றே, ஒரு சுய விமர்சனக் கண்ணோட்டத்தோடு அவரை அணுகி; அந்த வெற்றியினை அவருக்கு பறைசாற்றி நிமிர வைத்தன.

''ஏன்ரா ஒருமாதிரி இருக்கிறாய் நாலு நாளாய் உன் தலையைக் காணவேயில்லையே!'' நீண்டிருந்த அந்த நாலடி வாங்கில் தன் கட்டையுருவத்தை நீட்டியபடி, தலைக்கு குத்துக்கை கொடுத்துக்கொண்டே அன்னலட்சுமி கேட்டாள். அவளின் மூதுமையின் கீறல்கள் உச்சி பிரித்து வாராத் தலைமயிரில் இருந்தும், முகத்தசும்புகளில் இருந் தும் தெரிந்தன. நாரியினைக்கூட தடவிக்கொண்டிருந்தாள்

நாகராசா அக்காளின் நாரியைப் பார்த்தார்: முது மையின் ஆரம்பத்தில் உண்டாகிக் கொள்ளும் அந்த நாரிப்

பிடிப்பும் - சுவாசப்புகைச்சலும் - முடக்குவாத கால்வேதனைகளும் அன்னலெட்சுமியை ஆட்கொள்ளத் தவறவேயில்லை. ஆனால் அவளுக்கு தன் தம்பியின் அந்தப் பார்வை என்னவோ யோசிக்கவைத்தபோது முதுமை ஒரு சாட்டாக இருக்கவில்லை! அன்னலட்சுமிக்கு சில இடிபாடுகளும் விளங்கவே தொடங்கின.

நாகராசா பிரம்பு நாற்காலியில் அமர்ந்து பத்திரிகையைப் புரட்டினார். அக்காளுக்கு அது புரியாத புதிராக இருக்குமென்பது விதானையாருக்கு தெரியாததொன்றல்ல. அதையே தான் அவர் எதிர்பார்த்தார்.

முன்பு நாகராசா தன் தமக்கையின் வீட்டிக்கு வருவதென்றால் எண்ணி பத்து நிமிடங்களுக்கு மேல் நிற்கவே மாட்டார். அவசர அவசரமாய் அக்காளை கலகலப்பாக்கிவிட்டு பறந்தே விடுவார். மருமகள் சாந்தியை அந்த நிமிடவேளைக்குள் இழுத்து... ''எடியே உனக்கேற்ற மக.. உனக்கு தோதாய் இல்லையடி, இருந்தால்... முடிச்சு வைச்சிடுவன்'' என்ற பகிடிவிட்டு அவளை கோபத்துக்கு உள்ளாக்கிவிட்டு பறக்காமல் இருந்தால்.. சாந்தி என்ன அவரை விட்டா வைத்துவிடுவாள்?

அப்போது கூட அவருக்கு தன் வயதிற்கு வந்த இரண்டு குமர்களும், இன்றோ நாளையோவென கலியாணத்திற்கு காத்துக்கொண்டிருக்கிற எதிர்பார்ப்பு கூட தெரியாமல் இருந்ததில்லை. கிராமசேவையாளர் என்ற அடித்தளத்தில் இருந்து கலியாணம் என்கிற சில கனவுகளை சர்வ சாதாரணமாக தீர்த்துவிடலாமென்றே அவர் நம்பியிருந்தார். சமூகத்தில் தான் ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பதாக எண்ணிக்கொண்டபோது, தன் குமர்களின் எதிர்காலத்தில் வந்து மோதப்போகின்ற பெரிய சீதனவரிசையெல்லாம் தூசாகத்தான் அவருக்கு தெரிந்தது.

''விதானையாரின் மோனை கட்டுறதுக்கு ஊர் பெடியளே போட்டிபோட்டு திரியிறாங்க...' இப்படியெல்லாம் யார்யாரோ சொல்வதையெல்லாம் கேட்டும் கேட்காமலும் இருந்திருக்கிறார் நாகராசா. அப்போதெல்லாம்.... விதானை வேலையில் உள்ள மவுசு அவரை... தன் பிள்ளைகளினால் ஏற்பட்ட சங்கிலித் தொடர்களான எதிர்கால எதிர் பார்ப்புகளின் நீண்ட கனவுகளின் அடித்தளங்களாக அவரை நிம்மதியாய் இருக்கத்தான் செய்தன.

தன் குடும்ப ஏற்ற தாழ்வுகளுக்கு—தன் வேலையொன்றே சரியான அடித்தளமென்றே விதானையார் நாகராசா நம்பினார். அதற்காகத்தான் அதைக் காப்பாற்றிக் கொள்ளத்தான்...

அவரும் சிங்களத்தைப் படித்து தேர்ச்சி பெற்று 'கிராமசேவையாளர்' என்ற வாழ்வின் அந்த அடித்தளத்தைக் காப்பாற்றிக்கொண்டார். சிங்கள தேர்ச்சி என்று அவர் நினைக்கிறபோது — ஏதோ விதமான பொருமல் தன்னுள் எழுவதை அவர் உணர்ந்தாலும்... அவரின் மனதில் இரவு, பகலாக எழுந்து கொள்கின்ற அந்த நீண்ட கனவுகளின் தாக்கம்.... அவருக்கு எதுவித மயக்கத்தையும் தரவில்லை.

குசினிப்பக்கத்தில் இருந்து சத்தம் எழுந்தது. வாங்கில் முடங்கிக்கொண்ட அன்னலட்மிசு எழுந்து உட்கார்ந்தாள்.

''அம்மா... கோழி சருவச் சட்டிகளை தட்டிப்போட்டுது. கண்டறியாத இந்த கோழி வளர்ப்பால் மனிசன் படுறபாடு! கண்ட, கண்ட இடத்தில் இதுகள் பீச்சினால் '' தன் அருவருப்பை கொட்டிவிட்டு அன்னலட்சுமியின் மகள் சாந்தி கிணற்றடிப்பக்கமாக நடந்தாள். அவள் ஓடியதற்குக் காரணம்?

தன் மாமா நாகராசாவின் திடீர் நகைச்சுவை வெடி களில் இருந்து தப்பவேண்டும் என்பதற்காகத்தான்! ஆனால் மாமா... இன்று ஏதோ புதுமாதிரியாய் பிடிச்சு வைத்த பிள்ளையார்போல கதிரையில் பேசாமல் இருப்பது அவளுக்கும் வியப்பாகவே இருந்தது.

கிணற்றடிக்குப் போகும் சாட்டில் விறாந்தைப் பக்க மாகத் திரும்பிக்கூட சாந்தி பார்த்தாள். நாகராசா அந்த பேப்பரோடுதான் இருந்தார். தன் மாமாவைப்பற்றி சாந்தி தன் பள்ளித் தோழிகளிடம் அடிக்கப் புகழுவது உண்டு. அதற்காக அவள் தோழிகளிடமிருந்து வேண்டியும் கட்டி யிருக்கிறாள்.

''உன்ர மாமாவைப்பற்றி எங்களிடம் சொல்லாதை... காலத்துக்கு ஏற்ற மனிதன்! எந்தகட்சி ஆளும் கட்சியாக வந்தாலும் அவருக்குச்சரி.... அது அதுக்கு ஏற்றபடி அப் பப்ப தனக்கு வால்கட்டிக் கொள்வார். இப்ப... இந்த ஆளுங்கட்சிக்கு தோரணம் தூக்கி திரியிறார். இனி...''

தன் மாமாவிடம் நேர்மையான அரசியல் கொள்கை யோ மனிதாபிமான எண்ணங்களோ இல்லையென்பது சாந்திக்கும் தெரிந்ததொன்றே! அவருக்கு எல்லாம் தான் தன்குடும்பம்... நீண்ட கனவுகள்... என்ற நினைவுகள் தான். ஒருமுறை... சாந்திகூட அவரை கிண்டல் செய்து பார்த் தாள். அதற்கு அவர்...

'உனக்கு... எங்கபிள்ளை இது தெரியப்போகுது. சமு தாய அமைப்பு எங்கட இனம்.. அது, இதுவென்று வெட்டித்தள்ளுறியே... இதுகளுக்குள இருக்கிற குத்தை கள் உனக்கு தெரியுமா? இந்த குத்தைகளுக்குள புழுக் கள் இருக்குது. நான் வாழ்ந்தவன்... எனக்கு எல்லாமே தெரியும்...' - இப்படியெல்லாம் சாந்தியின் கேள்விகளுக்கு

வேறு விதமாக - சம்பந்தம் இல்லாத எதை எதையோ சொல்லி நாகராசா வென்றே விடுவார்.

அன்னலட்சுமி - கிணற்றடிப்பக்கம் போன தன் மகள் சாந்தியையும்... முன்னால் அயர்ந்து பேப்பரில் மூழ்கி இருந்த தன் தம்பியையும் ஒருமுறை பார்த்தாள்.

''இனிவாற லிஸ்ற்றில... சாந்திக்கு ரீச்சர் வேலையும் கிடைச்சிடும்'' அன்னலட்சுமி தன் தம்பியின் கலவரத்துக்குள்ளும்... இதையே நினைத்துப் பார்த்தாள், அடுத்தபடியாகத்தான்... தான் அறுதியிட்டுக் கொண்ட சில சந்தேகங்களை அவளிடம் கேட்க நினைத்தாள்.

கிணற்றடியில் இருந்து சத்தம் எழுந்துகொண்டிருந்தது. சாந்தி குளிக்கின்றாள். அன்னலட்சுமி எழுந்து; முற்றம் வரை வந்து பின்னர் திரும்பினாள்.

தான் வாங்கில் இருந்து எழுந்ததையோ அல்லது நிமிட நேரமாக தான் குந்திக் கொண்டிருந்தபோதோ... தன் தம்பி எதையுமே அலட்டிக் கொள்ளாமல் இருந்தது இனம்புரியாத பல கற்பனை எண்ணங்களைக்கூட அன்னலட்சுமிக்கு தோற்றுவித்தன.

''மனிசியோட சண்டை பிடிச்சிருப்பானா? அல்லது போன திங்களுக்கு முதல் திங்கள் மூத்த மகளின் கலியாண விஷயமாக சொன்னானே!! அதில் ஏதும் சிக்கல்கள் ஏற்பட்டுதோ!!? - நாகராசாவின் அந்த நிலைக்கு காரணங்களாக எவை இருக்கலாம் என்று அன்னலட்சுமி யோசித்துப் பார்த்தாள். தான் முன்னர் நினைத்துவைத்த இடிபாடுகளையும் இத்தோடு சேர்த்தே பார்த்தாள்.

அன்னலட்சுமிக்கு ஒன்றுமே புரியவில்லை. ''தன் தம்பி விதானை'' என்று மற்றவரிடம் சொல்லிக்கொள்ள அவள் மனதால் நினைத்தாலும் அதை அதே ஊரவரிடம்

கூறிக்கொண்டு பெருமை அடிக்க அவளால் முடியாமலேயே இருந்தது. காரணங்கள் எல்லாம்... அந்த ஊருக்கே தெரிந்தவைதான்.

இருமிக்கொண்டு எழுந்த அன்னலட்சுமி ரீப்போவில் இருந்த... நாகராசர் தேனீர் பருகிவிட்டு வைத்த கிளாசினை கழுவுவதற்காக தூக்கினாள். பேப்பரில் இருந்து தன் முகத்தை விலக்கிக்கொண்டு நாகராசா பார்த்தார்.

அவரின் கண்கள் சிவந்திருந்தன. முகம் வீங்கி இருந்தது. பார்க்கவே அன்னலட்சுமிக்கு பரிதாபமாகவே இருந்தது. தூக்கிய கிளாசினை ரீப்போவில் வைத்துவிட்டு - பேப்பரை பறித்தெடுத்து பக்கத்தே இருந்த மேசைமீது போட்டு விட்டு - ''என்னடா . உனக்கு நடந்தது... உனக்குள்ளேயே நீ புகைந்தால்...''

சாந்தி குளித்துவிட்டு முற்றத்துக்கு வந்துவிட்டாள். முருக்கம் மரத்திற்கும் தென்னைக்கும் இடையில் கட்டப்பட்டிருந்த கயிற்றுக்கொடியில் தோய்த்து அலம்பிய சேலையொன்றினை காயப்போட்டுக் கொண்டே... விறாந்தையினை நோக்குகிறாள்.

அக்காளின் அன்பான அதட்டலுக்கும் - குறுக்குக்கட்டோடு நின்று தன்னையே வேடிக்கை பார்க்கும் சாந்திக்கும் நடுவே அகப்பட்டுக் கொண்டே நாகராசா விழிகளை அகல விரித்து மேலே அண்ணாந்து பார்த்தார்.

சிலந்தி, வலையொன்றை பின்ன போராடிக் கொண்டிருந்தது. பல்லியொன்று தீராந்தி இடுக்கில் இருந்து... அந்த சிலந்திக்கே சாஸ்திரம் சொல்லிக் கொண்டிருந்ததாக நாகராசாவுக்கு தோன்றியது.

சாந்தி... முன்னால் வந்தாள். ''மாமா...... நீங்க சொல்ல வந்த விஷயம் எனக்குத் தெரியும்.''

நாகராசா அதிர்ந்தே விட்டார். ''நான்... செய்தது சரி தானே சாந்தி '' நாகராசா சின்னப்பிள்ளையாகவே உருமாறினார்.

தன் மகளும் - தம்பியும் பேசிக்கொண்டவைகள் அன்னலட்சுமிக்கு புரியவில்லை. மூக்கில் படிந்த வியர்வையினை ஆள்காட்டி விரலினால் தட்டி விட்டுக்கொண்டே புறுபுறுக்கலானாள்.

'அக்கா... நான் இந்த விதானை வேலையை விடுகிறதாய் நினைச்சிட்டன். இனி எனக்கு இது ஒத்துவராது...'' நாக்ராசாவுக்கு எப்படித்தான் துணிவு வந்ததோ!! சாந்தி கூட திகைத்தே விட்டாள். அவள் நினைத்தது வேறு ஏதோ ஒன்று.

''தம்பி...மாமா...'' இரண்டு குரல்களும் ஏககாலத்தில் தோன்றி நாகராசாவின் செவிப்பறையில் மோதின.

'நீதான் சிங்களம் பாஸ் பண்ணி இருக்கிறியே! உன்னைப்போல அறுபத்து ஒன்பது பேர் பாஸ்பண்ணி இருக்கிறாங்க...''

''உண்மைதான். ஆனால்... இறுபத்தாறு தமிழ்பேசும் கிராமசேவகர்களுக்கு அரசாங்கம் கல்தா கொடுத்திருக்கிறதே!! அதுமட்டுமா ''இன்னும் சிங்கள தேர்ச்சி பெறாத நிலையில் நூற்றியொரு பேரது வாழ்க்கை ஊசலாடுகிறதே!!! அக்கா இவர்களை எண்ணிப்பார், இவர்கள் வாழ்க்கையை ஒருகணம் சிந்தித்துப்பார்.

இவர்கள் செய்த குற்றம் தான் என்ன?

இவர்களது எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது?

சாந்திக்கு தலைகாலே தெரியவில்லை. மாமாவா இப்படிச் சொல்கிறார்? அன்னலெட்சுமிதிக்குமுக்காடினாள்.

''இலங்கையில் ஒரு தமிழன் சிங்களத் தேர்ச்சி இருந்தால் மட்டுமே... தன் உத்தியோகத்தை காப்பாற்றிக் கொள்ளலாம். ஆனால்... ஒரு சிங்களவன்... அவனுக்கு மொழி விஷயத்தில் எதுவித பிரச்சினைகளுமே இல்லை. இதெல்லாம்... ஒரு இனம் மற்ற இனத்தின்மீது ஏற்படுத்திக்கொள்ளும் ஆரம்ப ஆக்கிரமிப்புக்களே!! உண்மையான இனவாதமில்லாத அரசென்றால் பெரும்பான்மை மொழியை மற்ற இனத்திடம் வலிய புகுத்தாது அவரவர் மொழியிலேயே தொழில் புரிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இனத்துவேஷம் ஒழிக்கப்படவேண்டியதொன்று. ஆனால் அது .. பெரும்பான்மை இனத்திடமிருந்து ..... நாளுக்குநாள் அதிகரிக்கின்றபோது... சிறுபான்மையினமும் தன்னை விடுவித்துக்கொண்டு சுதந்திரமாக இயங்கத்தான் நினைக்கும். அது தவிர்க்கவே முடியாதது...''

நாகராசா வேர்த்து விறுவிறுக்க தன் எண்ணங்களை அள்ளிச் சொரிந்தபடி கதிரையில் இருந்து எழுந்தார்.

அவரின் நீண்ட கனவுகளின் அடித்தளங்கள்...? சாந்தி உடுப்பு மாற்றுவதற்காக விறாந்தைப் படியில் ஏறினாள்.

(யாவும் கற்பனை)

# அவன் பெரியவனாகி விட்டான்

மூணுவயது, நாலு, ஐந்து, ஆறு, ஏழெட்டு வயதிருக்கும். ஆறேழு மனித சீவன்கள் அசுர வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. முன்னால் வந்த சைக்கிள்காரன், பின்னால சத்தத்தோடு அவர்களை மிரட்டுவதுபோல நெருங்கிக் கொண்டிருந்த 'பீச் ஹோட்டல்' வாடகைக் கார்காரன், நிறைய சாமான்களை ஏற்றி சாக்கடையோடு முட்டி விழப்போகும் இரசமையா - எல்லோருமே ஓடுபவர்களின் புலன் உறுப்புகளில் பதியப்பட்டவர்களாக இல்லை.

மூன்றாம் குறுக்குத் தெருவால் திரும்பி - நிமிர்ந்திருக்கும் பள்ளிவாசல் சென்றல் றோட்டுக்குள் வந்தபோது (அம்போவ்) என்ற ஈனக் குரல் மட்டும் அந்த கூட்டத்திலிருந்து எழுந்தது.

எட்டு வயது சிறுசொன்று வீதியில் கால் தடக்கி விழுந்த வேகத்தில் முழங்கையும் - வலது முழங்காலொன்றும் தேய்பட்ட வேதனையின் குரல் தான் அது.

''காளி... என்னடா?'' — கூட்டத்தில் ஒரு சிறுவன் விழுந்தவனை எழுப்பி புழுதியினை தட்டிவிட்டான்.

''ஆ...ஆ ஆவ்ஊ...'' இரத்தம் கசிந்துகொண்டிருந்த முழங்கைகளைக் காட்டி காளி கத்த ஆரம்பித்தான். ''டேய் மருந்து போடுங்கடா '' காளிக்கு உதவிய சிறுவனுக்குஇன்னொரு நாலு வயதுக் குட்டியொன்று ஆலோசனை வழங்கியது.

நாக்கில் ஊறிய எச்சிலை உள்ளங்கையில் எடுத்து ஆள்காட்டி விரலினால் அதைத் தொட்டு காயத்துக்கு தடவினான் ஆலோசனை பெற்ற பெடியன்.

''ஊ . ஊவ் .. அம்மாவ் .. வலிக்குது .. வா அம்-மாட்ட... காலைத்தட்டி என்னை விழுத்திட்டு '' காளி கிடைத்த உதவியினைக் கூட தட்டி தள்ளி நன்றியில்லாது பேசினான். அதை, உதவிசெய்த சிறுவன் ஏதுமே பொருட்படுத்தாதவனாய்... ''சும்மா போடா... கொழுக்கட்டை, நீயெனக்கு ரொட்டித் துண்டு தரல்ல அல்ல, அதுதான் இது வந்திருக்கு.'' என்று கூறியபடி ''வாங்கடா பஸ் ஸ்டாண்டுக்கு'' என்றான் கீச்சிட்ட எலிக் குரலில்!

பஸ் ஸ்டாண்டில் மத்தியானம் இரண்டு மணியிலிருந்து பின்னேரம்வரை நல்ல சனக்கூட்டம் இருக்குமென அவர்களுக்குத் தெரியும். அந்த வித்தைக்காரன் கிட்டத் தட்ட ஆறேழு நாட்களாக குறித்த நேரத்தில் தப்பாது வித்தைகள் செய்வதால் இவர்களின் கைகளிலும் பத்தோ, இருபத்தைந்தோ சேர்ந்தே வந்தது.

முற்றவெளி குடிலுக்குள் காலை நீட்டிக் கொண்டு கஞ்சா புகை மயக்கத்தில் இருக்கும் அப்பனுக்கு, அல்லது மானாங் கேணி கள்ளுக் கொட்டிலின் முன்னுள்ள பனந் தோட்ட வடலிப் பற்றைக்குள் இருந்து கள்ளு உறிஞ்சும் அம்மாக்கு, அல்லது ஆருமே இல்லாத வெறும் திண்ணைகளுக்கு — கடைக்குந்துகளுக்கு... தங்கள் உழைப்பைக் காட்ட வேண்டுமென்ற கட்டாயம் அவர்களுக்கு இருந்தது. இல்லாமலிருந்தால்.... இவர்கள் இப்படி அனாதைகள் என்ற லேபலில் முச்சந்திக்கு வந்திருக்க முடியாதே!

''டேய்..... வித்தைக்காரன்''

''சனம்...... சேரல்லையடா''.

''மழை இருட்டு கட்டுது... மழை வந்தாலும்''

''முச்சந்தி பேக்கரிக்காரன் முந்தாநாளு பாணு வைச்சிருப்பான்''

அலைகின்ற மாட்டு மந்தைகள் போல அவர்கள் கனைத்துக்கொண்டு வருவது பீடா விற்றுக்கொண்டிருந்த காதர் மாமாவுக்கு சிரிப்பைத்தான் வரவழைத்தது.

''எண்ட அல்லா... இதுகளின் வாப்பா, உம்மா என்ன செய்யிறாங்களோ! இதுக இப்படி நாளுபூராவும் திரிஞ்சா... எதிர்காலம்?...'' வாயை குதப்பியபோது அவரின் நாலு குழந்தைகள் முன்னுக்கு வந்து புன்னகை பூப்பது போலிருந்தது.

ஒருவனுக்கு எட்டு வயது, மற்றப் பெட்டைக்கு ஆறு. மற்றதும் பெட்டை, மூனு வயசிருக்கும். கடைசியா 72 நாள் குழந்தை. பீடா விற்று வாற நாலு, ஐந்து ரூபாவில இந்த குடும்பத்தில்... ஆறு பேரு சீவிக்கிறதென்றால்...... பசி ..... பசி!

''எண்ட அல்லா... நான் மௌத்தானப் பிறகு-தான்... நான் விடமாட்டேன். நான் தேஞ்சு இதுகள ஆளாக்கினனென்றால்... பிறகு?'' பீடா பெட்டிக்குள் இருந்து வாசனை எழுந்தது. மூக்கை உறிஞ்சிக் கொண்டே காதர்......

''அடேய் காளி என்னடா காலில்.. வா இங்க...'' கிட்ட வந்த காளியின் காயத்துக்கு தட்டில் கிடந்த சுண்ணாம்பினை போட்டபோது அவர் தகப்பன் உருவில் தான் இருந்தார்.

''ஆ... எரியுது நீ விடு என்னை...'' காதரின் கைகளில் இருந்து திமிறினான காளி. ''ஏன்டா... மத்தியானம் ஏதுமே சாப்பிடவில்லையாடா'' காதரின் கேள்வியை அசட்டுத் துணிவோடு கேட்ட காளிக்கு வாயிலிருந்து உமிழ் நீர் சுரந்தது.

''இல்லை... நானா... காட்ட குடிச்சேன்...

''ஏன் அம்மா எங்க?...''

''அவ - கன்னியாவுக்கு அருவி வெட்ட போறதாய் சொல்லிட்டு போயி 4 நாட்கள் ஆவுது. இன்னும் வரல்ல... தம்பியும் என்னோட தான்...''

''சின்னத்... தம்பியையா?'' — ஏழு மாத பச்சிளங் குழந்தையை, காதர் முன்பாக காளி முன்னொரு நாள் காட்டி இருந்தான். ''அட... பாவமே! அந்த பிஞ்சுக் குழந்தை? பாலுக்கு என்னடா செய்யிறே! - இப்படியும் ஒரு தாயி இந்த உலகத்தில இருப்பாளா?''

''நானா - தம்பிய பின்னேரமா - காளி கோயிலுக்கு இருக்கே - முற்றவெளி அப்பா பள்ளிவாசல் - அங்கதான் கச்சான் கொட்டய விற்றுக்கொண்டு இருக்கிறாவே சவுறு தீனின் உம்மா. அவட்டதான்... அவதான் தம்பிக்கு பாலூட்டுறது. ஒரு ரூபா கொடுக்கணும்.''

''என்ன?'' காதர் நானாவின் முகம் கருகிச்சிவந்த போது பீடா வாங்குவதற்காக ஒருவர் குறுக்கிட்டு அவரை குழப்பிவிட்டார். பீடா வாங்க வந்தவரின் மேல் காதருக்கு கோபமாகத்தானிருந்தது. என்ன செய்வது வியாபாரம் போக வேணுமே! வேண்டா வெறுப்போடே காசை வாங்கிப் போட்டுக் கொண்டு காளியைப் பார்த்தபோது...

''பாவிப்பயபிள்ளைக... பறந்திட்டாங்களே! ஏழு மாச குழந்தைய விட்டுட்டு வேலைக்கு போக எந்தத் தாய்க்கு துணிவு வரும்? ஒரு ரூபா கொடுத்தா தான் குழந்தைக்கு பாலூட்டுவேன் என்று அடம் பிடிக்கின்ற தாய்களும் '' எல்லாமே அதிசயமாகவும் - ஆச்சரியமாகவும் காதருக்கிருந்தது.

வித்தைக்காரனின் கூட்டத்துக்குள் நுழைந்த காளிப் பயலோடு சவுறுதீன் - முனிப்பயல் - கோணன் - சுனில் - தாச - கங்கா... இப்படி ஒரே செற்றாக சுற்றி... சுற்றி வந்தார்கள்.

''ஐயா - எனக்கு அம்மா இல்லைங்க ..... பசிக்குது.''- ''அப்பா செத்துப் போனார். அம்மாக்கு ஆப்பரேசன்...'' பழைய பல்லவி பாடல்கள் மிக நளினமாக, சொற்தொடரீக்ள் நில்லாத குழைவோடு, வேகமாக வந்து கொண்டிருந்தன. ஐம்பது பேருக்கு ஒருவரின் செவிதான் - இவர்களின் குரல்களை ஏற்று ஒரு சதமோ, இரண்டு சதமோ கொடுக்க வழி பண்ணின. மிகுதி? 49 பேரும் வித்தைக் காரனின் வேடிக்கையில்தான் லயித்திருந்தார்கள்.

சுனிலுக்கு ஆத்திரமாகவும், பசியின் வேகத்தால் உடலும் படபடத்துக் கொண்டிருந்தது. காளியினை மெல்ல சுரண்டினான். ''டேய்—— அந்த களிசான்காரனின் சாக்கைப் பார் மணிப்பேர்ஸ் தெரியுது. அடிப்பமா?

தம்பிக்கு பால் ஊட்டுவதற்கான கூலி ஒரு ரூபாயினை தேடி இருந்த காளிக்கு, சுனிலின் பேச்சு இதமாக இருந்தது.

''சரிடா...'' காளி சொல்லி விட்டு மெல்ல தயங்கினான். போன கிழமை இப்படியொருவரிடம் அடிச்சு, பிடிபட்டபோது, அடிபட்ட வேதனைகள் நினைவில் வந்தன. அதோட இன்றைக்கு றோட்டில் விழுந்த போது உண்டான காயமும் எரிவைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

''சுனில் - நான் வரல்ல, நீ போய் எடு. என்னையும் கவனி''. சொல்லிவிட்டு கூட்டத்தின் மற்ற பகுதியினைக் காளி அடைந்து இரு நிமிட நேரத்தில் ..

சுனிலின் அலறல் கேட்டது.

''காவாலிப் பசங்க. பிச்ச பிசாசுகள். யார் பெற்றுப் போட்டு இப்படி முச்சந்தி வழிய அலைய விட்டிருக்குது களோ!'' யாரோ நல்ல மனிதர் பேசுவதும் காளிக்கு கேட்டது.

மெல்ல திரும்பி...... கோணேஸ்வரா கபே மெயின் றோட்டுக்கு பஸ் ஸ்டாண்டில் இருந்து ஏறியபோது சவுறுதீன், காளியின் அருகினில் வந்தான் காளிக்கும் சட்டென யோசனையொன்று உதித்தது.

''டேய் - சவுறுதீன் .....''

''என்னடா... ''

''எனக்கு ஒரு உதவி செய்வியா?''

''என்ன?''

''உன் அம்மாட்டை சொல்லி - என் தம்பிக்கு பால் ஊட்டச் சொல்லுறியா? என்னட்ட இப்ப முப்பது சத மிருக்கு. மிச்சத்த நாளைக்கு தாரன்...''

''எனக்கு முடியாதுடா. உம்மா என்னை கொன்று போடும்''

சவுறுதீன் உம்மாவின் அடிக்குப் பயந்து பாய்ந்தோடினான், சுனிலுக்கு அடி விழுந்த கூட்டத்திற்குள்.

காளி பரிதாபத்தோடு கண்களை நிலத்தே சாய்ந்த போது, அவன் கரங்களில் ஒரு ரூபாய் குத்தியொன்று வந்து விழுந்தது. காளியின் பின்னால், காதர் நானா நின்று கொண்டிருந்தார்.

''காளி... நீ என்ர பிள்ளைகளில் ஒன்று போல. இன்றைக்கு நான் சாப்பிடாட்டி என்ன செத்தா போயிடுவேன். பிஞ்சு பிள்ளைக்கு நீ பாலை ஊட்டுவி. உனக்கு, தைரியமாக உழைக்க வழி இருக்கு. நாளைக்கு நீ என்னட்ட வா காட்டுறன்''. காதர் நானாவை காளி நன்றியோடு பார்த்தான்.

சுனிலைச் சுற்றி நிற்கும் முச்சந்தி பெடியன்கள் கூயா, மயா போட்டு கேலி பண்ணுவது கூட காளிக்கு இப்போ கேட்கவில்லை.

அவன் பெரியவனாகி விட்டான். அவன் ஏன் இனி இந்த கூட்டத்தில் சேரப் போகின்றான்?

- யாவும் கற்பனையல்ல

# திருமணத்துக்குப் பின்னால்

சிவராசனால் நம்ப முடியவில்லையாம்!

'ஏன்...'

தனக்குப் பிடிக்காத பெண்ணை எப்படி அரவிந்தன் மணந்து கொண்டான் என்பதினால்...!

நானும் மனைவியும் பேசிக் கொண்டிருப்பதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த எங்கள் மூத்த மகள் பிரியந்தி ஓடி வந்தாள்.

'அப்பா விஷயத்தை விளங்காமல் கதைக்காதேயுங்க...'

'ஏன் மகள் அண்ணை சிவராசன் பேரைச் சொன்னால் உமக்கு ஏன் கோபம் வரப்பாக்குது. நீதானே அவன் ஓமென்று சொன்னவனை குழப்பி பேசி முற்றாக இருந்த கலியாணத்தை குழப்பினனீ...

நான் என் வார்த்தைகளை முடித்தபோது...

அந்த வீடே நடுங்கும்படி பிரியந்தி கூச்சலிட்டாள்.

'நானா குழப்பினேன் நானா குழப்பினேன்...'

'நீயென்று தான் எல்லோரும் பேசிக் கொள்ளுகினம் உன் காதில விழவில்லையா? நான் கொஞ்சம் கோபமாகவே சொன்னேன்.

பிரியந்தி விக்கி, விக்கி அழத் தொடங்கினாள்.

எனக்கும் வந்த கோபம் அடங்கியது.

,ஏன் அழுகிறாய்? சொல்லிப் போட்டு அழன்' பிரியந்தியின் தாய் - என் மனைவி பிரியந்தியை வார்த்தைகளால் தடவத் தொடங்கினாள்.

'அம்மா... அந்தப் பொம்பிளை எனக்குப் பிடிக்க வில்லை. என் அண்ணி எப்படி இருக்க வேண்டும் என்ற கற்பனைக்கு அந்தப் பெண் ஒத்து வரவில்லை அதுக்கு தான் நான் அண்ணனை அந்தப் பெண்ணுக்கு கலியாணம் செய்ய விடாமல் தடுத்தேன். மற்றப்படி அந்தப் பெண் மேல் எனக்கு எந்தக் கோபமும் இல்லை. அந்தக் கலி யாணத்தை நான் குழப்பவும் இல்லை ..'

பிரியந்தி விக்கி விக்கி பதினைந்து நிமிட நேரம் எடுத்து இதனைத் தன் தாய்க்கு சொல்லி முடித்தாள்.

நான் பலமாக சிரித்தும் கொண்டேன்.

என் சிரிப்பு பிரியந்தியை அதிர்ச்சியடைய வைத்திருக்க வேண்டும். தன் அழுகையை மறந்து என் மேல் பட்ட கோபத்தை மறந்து,

'ஏன் அப்பா சிரிக்கிறீங்க ? என்றாள்.

'இல்லை மகள்... சிரிப்பதற்கு உண்மைக் காரணத் தைச் சொன்னால் உனக்கு கோபம் வருமோ என்று'

பிரியந்தி தன்னை மறந்தவளாய் சிரித்தாள். அவளின் சிரிப்பின் அழகை நான் அள்ளிப் பருகினேன்.

அவள் தாயைப் போல நல்ல அழகி, நீண்ட மூக்கு, அழகான நாடி, பூனைக் கண்கள், மெழுகுப் பொம்மை போன்ற உடல்வாகு, சுருட்டை மயிர் இன்னும் இன்னும் என் மகளைச் சொல்லிக்கொண்டே போகலாம் ஆனால் தாயைப் போல் மக்கு, மரமண்டையாய் இருப்பதை நினைக்கும் போதுதான் கவலையாக இருக்கின்றது:

எடுத்ததற்கெல்லாம் கோபம், அடம், பின்னால் அழுகை, பிறகு குதூகலம் நல்லதெற்கென்றும் சொல்ல

முடியாது. சாப்பிடாமல் பட்டினி கிடப்பாள்: அந்தப் பட்டினிப் போராட்டத்தை நிறுத்த நாங்களும் பெரிய போராட்டம் நடத்த வேண்டும்.

சின்ன வயதில் அவள் அழகில் மெய்மறந்து கொடுக்கக்கூடிய செல்லத்தையெல்லாம் கொட்டி அவளை வளர்த்து விட்ட பயன் இப்போதுதான் எங்களுக்கு விளங்குகின்றது.

குமரிப் பருவத்தில் இன்னும் இருக்கும் அவள் நாள் கலியாண சந்தைக்கு போகும்போது ஏற்படப் போகின்ற விளைவுகளை எல்லாம் என்னால் கற்பனை பண்ணிப் பார்க்கவே முடியாது இருக்கின்றது.

மெழுகில் வார்த்த மாப்பிள்ளை வேணும் என்பாள். டொக்டரோ என்ஜினியரோ பெரிய கோடீஸ்வரனோ வேணும் என்பாள். கார், பங்களா, முதிசங்கள் பல உள்ள மாப்பிள்ளையைப் பார் என்பாள்.

எங்கட நடுத்தர வாழ்க்கையில் மாதம் முடிந்தால் மறு நாள் அரச சம்பளத்தை எதிர்பார்க்கும் எங்கள் குடும்ப சூழலில் முடியுமா இதற்கெல்லாம்'

பிரியந்தி அழகாக ஆங்கிலம் பேசுவாள். நான் பேசும் ஆங்கில வார்த்தை உச்சரிப்புக்களை திருத்து திருத்து என்று திருத்தி கேலி செய்வாள். எழுதும் கடிதங்களில் உள்ள ஆங்கில இலக்கணப் பிழைகளை சுட்டிக் காட்டுவாள்.

எனக்கு ஒரு புறம் வெட்கமாக இருந்தாலும், என் மகள் என்னையே வென்று விட்டாளே என நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கும்.

இவளுக்கு எவன்தான் வந்து அகப்பட்டு இடி வேண்டப் போறானோ என்று என்னுள் எண்ணிப் பார்ப்பேன்.

எங்களைப் போட்டு வதைக்கிற வதைக்கு... இவளைப் போட்டு இவள் புருஷன் இவளை இருத்தி எழுப்ப வேண்டும். என்ற அகம் எண்ணமும் என்னுள் வரும்.

இவளுக்கு நேர் மூத்தவன்தான் சிவராசா பேங்கில் வேலை செய்கின்றான். வயது இருபத்தைந்தாகுகிறது. ஆறு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னால் வந்து இன்று எங்களை ஆட்டிப் படைப்பவள் இவள்.

எங்கட சொல்லை விட சிவராசனுக்கு பிரியந்தியின் வார்த்தைகளின் மீது நம்பிக்கை இருந்ததினால்தானே வந்த சம்பந்தத்தை உதறி எறிந்தாள்.

முற்றுப் பெற இருந்த இந்த சம்பந்தம் முறிந்து போனதால் முழு மனிசனாக இருந்த நான் அரைமனிசனாகிப் போனேன். வெளியே போக வெட்கமாகவும் இருக்கிறது.

'என்னப்பா... ஏதுமே கதை எழுத சிந்திக்கிறீங்களோ... நானும் ஒரு கதை சொல்லட்டா?'

பிரியந்தி என் சிந்தனையை தன் வார்த்தைகளால் அறுத்தாள்.

'உங்கட சிரிப்பின்ர காரணம் .. உம் .. உம்... பதில்...?'

அடுத்த நிமிடம் அவள் தன் பேரில் கவனமாக இருந்தாள். தன் கோபத்தை நான் கேவலமாக நினைத்துச் சொன்னது அவளுக்கு....

'இல்லை மகள்?... நான் என் மனைவியைப் பார்த்தேன்.

'தகப்பனும் மோளும் சண்டை போடுங்க. நான் சமாது லேன்...'

'ஓம்... வேற வேலை இல்லாமல் தெருவில் கதிரை போட்டு இருந்துகொண்டு உங்கள போன்ற பொப்பிளக ளோட அரட்டை அடிக்கும் அந்த ரீச்சரிடம் போகப் போறாய் இல்லையா?'

நான் மனைவியைப் பார்த்து கத்தினேன் வார்த்தை களை. என் வார்த்தைகள் என் மனைவியின் காதில் ஏறியதோ என்னமோ என் மகளின் காதில் ஏறிக் கொண்டது.

'அப்பா... அம்மா பாவம் போகட்டு. நீங்க கதையை மாத்தாம நான் கேட்டதற்கு பதிலைச் சொல்லுங்கோ?'

'மகள் .. என்னையும் உன் அம்மாவையும் பார்...'

'அம்மாவுக்கும் உங்களுக்கும் என்ன?'

'எங்க இரண்டு பேரிலும் உனக்கு எந்த வித்தியாச மும் தெரியவில்லையா?'

பிரியந்தி உடனே பதிலைச் சொல்லாமல் யோசித் தாள். 'இல்லை, அப்படியொன்றும் இல்லை அப்பா'

'பொய் சொல்ல வேண்டாம்... உண்மையைச் சொல்...'

சில இலக்கணப் பிழைகளை வார்த்தைகளை இறப்பர் போல பிரியந்தி இழுத்தாள்

'சொல், சொல்...' நான் உற்சாகமூட்டினேன்.

'அப்பா நீங்க கறுப்பு, அம்மா வெள்ளை'

நான் சிரித்துக் கொண்டேன்.

'அப்ப என் முதலில் எங்கள் இண்டு பேரிலும் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை என்று சொன்னனி'

பிரியந்தி திக்கி திகைத்து விட்டாள்.

மௌனி ஆகி விட்டாளோ?

'அப்பா, அம்மா என்றவுடன் பார் உனக்கு ஏதும் தெரியவில்லை. பார்... நானும் அம்மாவும் நிறத்தில்; அழகில் வேறுபட்டாலும் அதெல்லாம் உன் கண்ணுக்குத் தெரியவில்லைபார். ஆனா, அண்ணனுக்கு வாற அண்ணி தான் கொஞ்சம் கறுப்பென்றவுடன் நீ...'

அவள்...

'மகள் கலியாணத்தின் போதுதான் மகள் நீ நினைக்கிற மாதிரி, ஆனால் அதன் பிறகு இதெல்லாம் தெரிவதில்லை மகள். நான் அழகில்லாவிட்டாலும் உன் அம்மாவிடம் ஒருக்கா போய் கேட்டுப்பார் நான் அழகா இல் இல்லையா என்று. கடைசிவரை நீயோ அல்லது எம்மை படைத்த இறைவன் சொன்னாலும் நான் அழகில்லை என்று உன் அம்மா சொல்லமாட்டாள் தெரியுமோ.

'திருமணம் என்பது எங்கட கையில் இல்லை. நாங்கள் காரணிகள் அவ்வளவுதான் மகள்'

நிறுத்தி நிறுத்தி நானே பேசினேன்.

பிரியந்தி அழவில்லை, கோபத்தால் துள்ளி எழவில்லை. அவளும் எதையோ யோசிப்பது போல...

நான் அந்த இடத்தை விட்டு எழுந்து கொண்டேன்.

என் மனைவி அரட்டை அடிக்கப் போன அந்தத் தெரு ரீச்சரிடம்...

நானும் அரட்டை அடிக்க வேண்டும்போல இருந்தது.

(யாவும் கற்பனை)

# அவர்கள் தப்பிவிட்டார்கள்

''அவங்க இனி என் கண்ணில படனும்... கல்லால மண்டைய உடச்சிபிடுவன். மௌத்தாப் போனவங்க. தாயீ, பிள்ளைன்னு பாக்கிறானுங்களா? ஏய்... பொட்டம்மா—அந்த சிவலயன்; நீளமா மீசய வைச்சிருக்கான்... அவன் கள்ள ராசுக்கோல்... அவங்களுக்குள அவனை...''

சவுக்காரமே கண்டிராத இரண்டு ரூபாய் பன்னிரண்டு சதம் விற்ற காலத்து சீத்தை - றவுக்கையும், இனி உடுக்கவே முடியாதென்ற நிலையில் தென்னம் பன்னாடை போல நைந்த சேலையும்—அணிந்த முப்பத்தாறு வயது கொண்ட முக்காடிட்ட ஜீவன் ஒன்று அந்த 'யாழ்கபே' சந்தியில் நின்று அலறிக்கொண்டது; மழையும் இலேசாக தூறிக் கொண்டே இருந்தது.

மூன்று கார்களும்—இருபத்தொரு சைக்கிள்களும்—மூன்று இ.போ.ச. பஸ்சும்—ஆஸ்பத்திரியில் இருந்து அனாதையாக ஒரு பிணத்தை இடுகாடு எடுத்துச் செல்லும் ஒரு வண்டிலும் ஆறு மாட்டு வண்டில்களும்—உணவு கட்டுப்பாட்டு அலுவலக வேனொன்றும் இந்த இடத்தை கடந்து சென்றிருக்கின்றன. இந்த அநியாயம் இவைக்கு மட்டுமல்ல அந்த இடத்தில் நின்ற முப்பது நாற்பது பேருக்கும் தெரியும். தெரிந்தும் என்ன செய்வது...?

''அடி அனிபா உன்ராத்தாவ கூப்பிடு. காரு—சைக்களு தெரியாதவள போல— விசரு பிடிச்சவள் போல நிக்கிறாள். கூப்பிடடா... அவள... அரிசியத்தான் பறிகொடுத்தம் எங்க உசிரையும் கொடுக்கோணுமா'' கத்திக்கொண்டு நின்ற அந்த ஜீவனின் தம்பிக்கு பிச்சைக்காரனாக மாறாதவன் சொன்னான்.

''ஏய்... ராத்தர... காரு சைக்களு – இப்படி சந்தியில், அழுதா அரிசி கிடைச்சிருமா?'' அனிபா தனது தமக்கயினை அழைத்த மறுநிமிடம்... ''எல்லோரும் வாருங்க நெல்லு சந்தை படுத்துற இடத்துக்குப் போயி எங்க அரிசிய கேட்பம்'' சத்தம்போட்டே கத்தினான். இருபத்தாறு சீவன்கள் மந்தைகள் போல அழுது குழறிக்கொண்டு அனிபாவின் பின்னால் நடந்துகொண்டிருந்தன.

''நேற்று .. ரவுணுக்கு கொண்டுவந்த அரிசிய பிடிச்சாங்களே... அத திருப்பி கொடுத்தாங்களா? இல்லையே கிண்ணியா துறையடியிலகூட மறிப்பு போடாம ஈந்து ஈந்தாப்போல் எங்கள பிடிச்சர் அட பிடிக்கியாங்க— எங்கள கோட்டுக்கு கொண்டு போயி... குற்றம் கட்டச் சொல்றாங்களா? இல்லையே... அப்ப எங்கட்ட பிடிச்ச அரிசி கணக்கிற்கு... இல்லாத எங்கட்டையா இத பறிக்கணும்.''

''மச்சி... எங்க நிலமை... இவங்களுக்கு தெரியுமா? இந்த அரிசிய நாங்க என்னபாடு பட்டு இங்க கொண்டந்து வித்து உண்ணுறமுன்னு இவங்களுக்கு தெரியாதா— இந்த மௌத்தாப்போன ஹறாம் சாதிகளுக்கு; என்னது நாற்பது கொத்து அரிசி. மில்லு வைச்சிருக்கிற அகமது லெவ்வையிடம் பூசலு நெல்லு அறுபதாய் வாங்கி—அத அவிச்சு குத்தி—இஞ்சினை கொண்டந்தா ... வயிறு பத்துது. அரிசி விற்றா ஏதாச்சும் வயிறு கழுவலாமென்று இந்த யாவாரத்த தொடங்கி—கூப்பனுங்கள அடைவு வைச்சது தான் மிச்சம்.''

நெல் சந்தைப்படுத்தும் அலுவலக வாசலை இந்த இருபத்தாறு சீவன்களும் முற்றுகை இட்டன. பல திக்கிலும் இருந்து இந்த சீவன்களின் விம்மிய அழு குரல்கள்

'அரிசி வேணுமென்று' மழை தூறுவது போல தூறியே கொண்டிருந்தன. அனியா லகைகளினை தூக்கினான். அமைதி நிலவியது. பேசுவதற்கு முன்னே வந்தான் அலுவலக வாசலை தடித்த உருவம் மறைத்துக் கொண்டு நின்றது.

''ஐயா... எங்கட அரிசிய தாங்க நாங்க மிச்சம் ஏழைங்க...''

''மொனவத மொனவத... பளையங்..'' பல்லை கடித்து மிருகத்தைப் போல உறுமியது வழியை மறித்து நின்ற காண்டாமிருகம்.

''எங்கள நம்பி வூட்டில கிடக்கிற சீவங்க கஞ்சி குடிக்கணுங்க, அரிசிய தாங்க... மாத்தையோவ்...''

''மிச்சம் கரைச்சல்... மோட மினிசு உக்கட அரிசி...'' மிச்சத்தையெல்லாம் சிங்கள மொழியிலேயே கொட்டித் தள்ளுகிறது அந்த தடித்த உருவம். ''அரிசிய விக்குறது சட்ட விரோதம். அரிசிய பிடிக்கச் சொல்லி எங்களுக்கு அரசாங்கம் உத்தரவு தந்துள்ளது. எங்கட கடமையை நாங்க செய்யிறம். அரிசிய திருப்பி தர முடியாது.''

''என்ன கடமை ஐயாவுனக்கு: சோனி - சிங்களவனென்று பிரிச்சு அரிசிய பறிக்கிறதா? எங்க வயிறு பத்து... இந்த நாசமா போன ரவுனு சாதிங்களுக்கு - அரிசிய கொண்டு வந்து, எங்க வயித்திலே மண்ணைப் போட்டு சாகவா சொல்லுறீங்க'' அனிபாவே பேசினான்.

''அடோ... சும்மா... இரு... மோட மினிசு... மூதேசி... சனியங்க... சனி சாதிங்க ..''

''ஆரடா சனியங்க? எங்க அரிசிய - இங்க கொண்டு வந்து - தாங்க விற்கலைன்னா - ஒங்க கொழுப்பு. வத்தி

தான் போகும் சனியங்களாம் - டேய் - சிங்கள வடுவா... வாடா வெளியே. உன் குடலைை புடுங்கி தூக்கி எறிய, இவருக்கு லோங்கிசு - கழட்டி அம்மணமாய் அனுப்புவம். இது எங்கட கிண்ணியாவாய் ஈந்தால்.'' அரிசி பறி கொடுத்த வேதனையில் உமர் கொஞ்சம் உறைக்கவே பேசினான்.

''டேய்... யன்னல பூட்டுறாங்கடா... கதவ சாத்தப் போறாங்கடா... விடாதேங்கடா...'' பின்னால் ஆறுமாத குழந்தையொன்றை காவிக்கொண்டு நின்ற, அனிபாவின் அக்காள் சத்தம் போட்டாள்.

''ஏன் யன்னலை பூட்டுறீங்க... எங்கட அரிசிய தாங் கவன் நாங்க போறதுக்கு...'' தாழ்மையாகவே கேட்டான் அனிபா.

அந்த உருவம் இன்னும் வாசலை மறித்துக்கொண்டு தான் நின்றது. அதன் முகத்தில்... இப்போது கடுகடுப் பில்லை. 'சிரிப்பின்' அறிகுறிகளே படர்ந்து கொண் டிருந்தன.

ஐயா இங்க ரவுனுக்கு அரிசி கொண்டந்து விக்கிற வங்க எல்லாம் நாளாந்தம் மூணுவேளை சாப்பிடாதவங்க தான். இந்த அரிசி அவங்க சொந்த முதலிலே வேங்கின அல்ல. கிண்ணியாவிலே ஈக்கிற காசுக்காரங்க - தங்கட்ட ஈக்கிற அரிசிய விக்க பயன்படுத்துறாங்க. ஒரு கொத்து வித்தா இருபத்தைந்து சதமென்னு தருவாங்க. இங்க கொண்டந்து அரிசிய அளந்தா, சில்லறை அரிசி அளவில, எப்படியாயிலும் அரை கொத்தோ ஒரு கொத்தோ குறைவு வரும். இந்த நட்டம் எங்க மேலுதான்.

கிடைக்கிற நயத்தில இது போனா... மூணு... நாலு ரூபாய் மிஞ்சும். காய - பிஞ்சு வாங்க பொயிலை - வெற் றிலை - பாக்கு வாங்க பிறகு பஸ்சுக்கு கொடுக்க,... வீட்ட

இறங்கினா காட்டா தண்ணிக்கும் காசி ஈக்கா, இப்படி தான் எங்க பிழைப்பு ஓடுது.''

''அதுசரி இந்த அரிசி விக்கிறது சட்டவிரோத மென்று உங்களுக்குத் தெரியாதா? தெரியுந்தானே பிற கேன் இத செய்யிறீங்கள்? வேற வேலையை செய்து பிழைக்கலாமே ..'' லோங்ஸ் போட்ட அந்த சிரித்த உரு வம் சிங்களத்தில் தான் பேசியது. இதை லோங்ஸ் போட்ட கட்டை உருவமொன்று தமிழில் இப்படிச் சொன்னது.

''என்ன வேலைய நாங்க செய்ய? தண்ணி இல்லாம வயல் எல்லாம் காஞ்சு கிடக்கு. வயலு வேலயும் இல்ல .. வேற என்ன வேல ஈக்கு? நாங்க படிக்கவும் இல்லையே... ஐயா .. அரிசிய தாங்க .''

இத உங்க எம். பி. யிட்ட சொன்னீங்களா?''

''எம். பியா? அவர் கொழும்பில. ஜீ. ஏ. மாத்தை யாட்ட நேற்று அரிசி பிடிபட்டவங்க போனாங்க, அவரு ஒரு துண்டு தந்தார் உங்கட ஒபிசில கொடுக்க. நீங்க இதுக்கும் முடிவு செல்லல்ல. இப்ப எங்கட அரிசிய தாறிங் களா... இல்ல ஜீ. ஏ மாத்தையாட்ட நாங்கபோகட்டா...''

'ஜீ. ஏ.' என்றதும் சிரித்த அந்த உருவத்துக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது - தன்னையே பயமுறுத்திறாங் களே என்ற எண்ணம்போல; ''பனையாங் . போ...'' அந்த உருவம் கத்தியது.

''நாங்க போறம். எங்களிட்ட பறிச்ச அரிசியின்ர கணக்கு ரீசிற்றையாவது தாங்களேன். பிடிபட்ட அரிசியில உங்க ஆக்கள் தங்களுக்கு விரும்பியதை எடுத்திட்டா... நீங்கதான் பதிலு சொல்லனும். நீங்க சட்டவிரோத மென்னா பிடியுங்க .. அது உங்க கடமை. ஆனா - இதிலே யும் சோனி - சிங்களவன் என்று ஏன் பிரிக்கிறீங்க?

''ஒக்கம வொறு மாத்தையா'' நின்ற உருவம் பின் னால் திரும்பி யாருக்கோ சொன்னது: முன்னால் நிமிர்ந்து

அனிபாவை நோக்கி .. "மிச்சம் லொரு . நாங்க எதயும் செய்யும் நீயி லொறு..." சினத்தோடே சொன்னது.

"இல்ல... மாத்தையா... ஜீப்பில் வந்த உங்க ஆக்களுங்க தான் இத செய்தாங்க. சிங்கள ஆக்கள மட்டும் இரத்திவிட்டு - கிண்ணியாவில் இருந்து வந்த எங்களிட்ட தான் எதுவும் செல்லாம பறிச்சாங்க. வேணுமின்னா இப்ப பேயி பஸ் ஸ்டாண்டை பாருங்க அவங்க பயமில்லாம ஆறு ரூபாய்க்கு அரிசி விக்கிறதை, வேணுமின்னா இவங்கள பிடிச்சுப் பாருங்க பாப்பம். இது உங்களாள முடியா சட்டம்... சட்டம்... என்கிறீங்களே... இந்த நாட்டிலே சிங்களவங்களுக்கு ஒரு சட்டம்... தமிழங்களுக்கு ஒரு சட்டமா? அரிசி விக்கிற சட்டவிரோதமெங்கிறீங்களே... இப்ப அங்க சிங்கள ஆக்கள் விக்கிறாங்களே... அது சட்ட விரோதமில்லையா? ஆனா இது... சிங்களவனுக்கு ஒரு... தமிழ் சோனிக்கு ஒரு..." அனிபாக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது.

"அடே... உடையுங்கடா யன்னல் .. இவங்கள எல்லாரையும்... உடைச்சு எறிவம்" அனிபாவின் அக்கா கத்தினாள்.

அனிபா கைகளை மேலே தூக்கினான். "இவர்களை விட்டுடுங்க... இவங்களும் கூலிக்கு மாரடிக்கிறவங்கதான். இதுக்கெல்லாம் காரணம் .. நாங்க வோட்டு போட்டமே . ! அதுதான் குற்றம்

ஐயாமார்களே உங்கள விடுறம். எங்கள போல அரிசி கொண்டு வந்து, சுதந்திரமா விலைபேசி - சட்ட விரோதமென்னு சொல்லி பிடிக்கிறதுக்கு ஆள் இல்லாம - அரிசி விக்கிற சிங்களவங்களையும் விடுறம் - எங்கள நம்பி ஊட்டில நாலு - ஐந்து சீவன்கள் இருக்கிறதால்;- இனி .. அரிசிவிக்க... நாங்க எல்லோருந்தான் வருவம்... அப்ப... நீங்க எவருமே தப்பமாட்டீர்கள்."

(யாவும் கற்பனையல்ல)

# அரச மரம்

கிடுகுகள் காற்றோடு விளையாடத் தொடங்கி விட்டன. மிக 'மன நிறைவான' விளையாட்டாகத்தான் அது இருந்தது.

'ஜெஸ்மி கிழவி' கூரையினை நிமிர்த்து பார்த்தாள். அவளின் பாக்கு துவைக்கும் உரலில் கூட சில 'ஓலைச் சருகுகள்' விழுந்தே கிடந்தன.

'வெங்காய காசை எடுத்து வீடு வேய வேண்டும்' என்ற நினைவுகளா அவளை ஆக்கிரமித்து இருக்கின்றன?

வெங்காய காசை எடுத்து வீடு வேய வேண்டுமென்ற எண்ணம், அவளின் மகன் மரியான் 'வெங்காய நாற்றை' வீட்டுக்குள் கொட்டும்போதே உண்டானதொன்று.

வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டிக்கொண்டுதான் 'வெங்காயச் சேனைக்கு' முழுப்பொறுப்பாளி ஆனாள். வெங்காய சேனையின் முழு உழைப்பும் மரியானினது அல்ல. உடல் உழைப்புக்கு அவன் தேவைப்பட்டாலும் 'உருப்படியாக' அந்த சேனையை உருவாக்கியது அறுபதை நெருங்கும் கிழவி ஜெஸ்மியின் எறும்புக்கு நிகரான உழைப்புத்தான்.

அந்த உழைப்பின்—அறுவடையின் — எதிர்பார்ப்புகள் எல்லாம் 'வெங்காய காசை எடுத்து வீடு வேய வேண்டும்'—கிழவி வீட்டு முற்றத்திற்கு வந்தபோதும்—அவளையறியாமல் அவளுள் விதம் விதமான எண்ணச் சுமைகள் கனக்கத் தொடங்கியே விட்டன.

அந்த சுமக்க முடியாத கனத்துடனேயே அவளும் நடக்கத் தொடங்கினாள். அவளின் குழி விழுந்த கண்கள்

குளமாகி—நிரம்பி வழியத் தொடங்கின. கூனிக்குறுகிய அவளின் உருவம் மெல்ல . மெல்ல ..... தள்ளாடி...... தள்ளாடி...

'எங்கயனை போறாய்—திரும்பவும் அதை போய்... போய் பார்த்து — இஞ்ச வந்து ஒப்பாரி வெச்சு ஊரை அழைக்கவோ?...'

தாயினை தடுத்து நிறுத்தியது மரியானின் குரல்; அதில் ஒருவித வேகமும் இருந்தது.

கிழவி முற்றத்தில் நின்று விட்டாள். திண்ணைக் குந்தில் அமர்ந்திருக்கும் மகனைப் பார்த்தாள். அந்தப் பார்வை அவனை 'எட்டி உதைவதைப்' போலவே இருந்தது.

'அடேய் ஊரோட ஒத்துப் போக வேணுமடா—ஊர் பிழை விட்டாலும்— அந்த பிழையின் பக்கமே ஊர் திரளும்போது—நாம மட்டும் தனித்து அதை எதிர்த்தால்— எங்களின் எதிர்ப்புக்களால் உண்டாக்கிக் கொள்ளும் பகைமைகளை சந்திக்க நாம் தயாரானவர்களாக இருக்க வேண்டுமடா. அப்படியானவர்களால் தான் அதை தாங்கும் சக்தியும் இருக்கும்'—மரியான் தாய் மனிசியின் பேச்சினைக் கேட்காதவன் போன்று எங்கோ பார்த்தான்.

அவனின் பார்வையின் முடிவு?

இரண்டு நாட்களுக்கு முன் என்றால் இந்நேரம் அவனின் பார்வையின் முடிவு—ஒரு 'அரசமரத்தோடு' முடிந்திருக்கும், இன்று... இரவு பகலாக நடந்து முடிந்துபோன எத்தனையோ 'விஷயங்கள்' எல்லாம் அந்த விழுந்து கிடக்கும் அரச மரத்தோடு சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தது.

ஜெஸ்மி கிழவி மகன் அருகில் வந்தாள். அவனின் முகத்தினை தன் பக்கம் திருப்பினாள். மரியானின் கண்கள் சிவந்திருந்தன.

'எணை—உன்னை என்னால் விளங்கிக்கொள்ள முடிய வில்லை. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் ஏதாவது ஒரு பக்கத்தில் நிற்கவேண்டும். நிற்கும் பக்கம் சரியானதோ; பிழையானதோ என்பது அவரவர் சிந்தனையைப் பொறுத்தது. நீயோ கூழுக்கும் மீசைக்கும் ஆசைப்பட்டவனைப் போல் நின்றால்.. எணை என்ன செய்யச் சொல்றாய் என்னை...' மரியான் படபடக்க கத்திவிட்டு எழுந்து கொண்டான். அப்போது...

'அண்ணாச்சி இந்தா...' கோப்பை ஒன்றை அவனின் தங்கை நீட்டினாள். அவளின் உள்ளங்கையில் சக்கரைத் துண்டொன்று கசிந்துகொண்டிருந்தது.

சாயக் கோப்பையை வாங்கி—தங்கையின் உள்ளங் கையில் சக்கரைத் துண்டை எடுத்துக்கொண்டது போதா ததற்கு...

'அண்ணாச்சி... இஞ்ச சக்கரை... இதையும் நக்கன்'—வழமைபோல் தங்கை குரல்தர முன்னமே—அவளின் கை யினைப் பற்றி உள்ளங்கையை நக்கிக் கொண்டான் மரியான்.

அவனின் வாய் இனிக்கத்தொடங்கி விட்டது. சூடான சாயமும் வாய்க்குள் நுழைந்து கொள்ள ..

ஜெஸ்மி கிழவிக்கு அந்தக் காட்சி...

தன் இரண்டு பிள்ளைகளையும் அரவணைக்க அவ ளின் கரங்கள் துடி துடித்தன. உடலுள் 'வரைவிலக்கணம்'

இல்லாத 'இன்ப உணர்வு' பொங்கி; திரள வழி தெரி யாது அவளை...

மரியான் சொன்னான். ''எங்கட வெங்காய வரவைக் குள்ள நீங்க வெட்டுற அரச மரம் விழுந்தால் — நாங்கள் போட்ட முதலே தப்பாது. நீங்க செய்யப்போற காரியத் துக்கு நானும் தோள் கொடுக்கிறேன். தயவுசெய்து இன் னும் ஒரு மாதம் பொறுங்க. இந்த பொறுப்ப என்னட் டயே தாங்க இப்படித்தான்—நான் சேனாதி ஆக்களிடம் அப்பவே சொன்னேன். அதுக்கு அவங்க பாஞ்ச பாச்சல் இருக்கே—தாங்கத்தான் தலைவர்கள் என்று ஊருக்கு காட்ட வேண்டுமே...''

''அதனாலதான் அவையளோட நீ சண்டை பிடிச் சது போதாம... அரசமரம் வெட்டினால் வெட்டின ஆக் களை பொலிசுக்கு காட்டிக் கொடுப்பேன் என்று சொன் னாய்'' என்று தமையனின் கதையை அவளின் தங்கை தொடர்ந்தாள்.

''எடியே; எங்கட வெங்காய வரவைக்குள்ள அவர்கள் வெட்டுற அரச மரம் விழுந்தால்—எங்கடபாடு? இப்படிச் சொன்னால் ஆவது அவங்க பயந்தாவது போவாங்கள் என்று பார்த்தேன். ஆனால் விஷயங்கள் இவ்வளவு தூரத் துக்கு பெரிசாக வளரும்போது... நான்.''

வெறுங்கோப்பையை தங்கையிடம் மரியான் நீட்டி னான்.

'இப்ப—இதற்கு நீ என்ன செய்யப்போறாய்?' —மரியா னின் தாய் விடாப்பிடியாக நின்றாள்.

நான் என்ன செய்யிறது. அம்மா யோசித்துப்பார். எங்கட வீட்டு ஒழுங்கை வளைவுக்குள தான் அரசமரம்

நின்றது. கண் பார்வைக்குள் அகப்படும் தூரம்: அதுவும் மூன்று பேர் கட்டிப்பிடிக்கிற அளவானது. ஒரே நாளில வெட்டி விழுத்தி இருக்கினம். பக்கத்தில இருக்கிற நாங்க— 'யார் வெட்டினது என்று தெரியாது' என்று சொன்னால் யாரும் நம்புவினமா? அதுவும் அதை பொலிசுகாரங்க நம்புவாங்களா? நான் வெட்டின ஆக்களை பொலிசு கேட்டால் சொல்லித்தான் திருவேன்...

'எடே... அந்தப்பெடியள் ஏதோ தெரியாம செய்து போட்டாங்க...'

'என்னணை—இப்ப கொஞ்சத்துக்கு முதல் தானே—அழுது வடித்தாய்—பாழாப் போனவங்க என்ற வெங்காய வரவைக்குள் மரத்தை வெட்டி விழுத்தி என்னை ஏறி மிதித்து போட்டாங்க என்று...' தனது தாயின் தடுமாற்றங்களை மரியான் சரியான இடத்தில் இனங் காட்டினான். ஆனாலும்......

அவனுக்கு சினம் சினமாகவே வந்தது. வீட்டுக்குள் போக எழுந்தான் 'ஜெஸ்மி கிழவி' அவனை மறிக்கவில்லை. 'இரண்டு பக்கத்தையும்' ஆதரிக்க வேண்டுமென்ற 'உள்ளுணர்வுகள்' அவளிடம் தேங்கி இருந்தன.

மரத்தை வெட்டி வெங்காய சேனையை அழித்தவர்களை காட்டிக் கொடுத்து சரியான பாடம் படிப்பிக்க வேண்டும் என்பதும்—

மரம் வெட்டின ஆட்களைக் காட்டிக் கொடுத்தா உங்கட சமூகம் எங்கட தோட்டங்களில் வேலை செய்யிறதுக்கு இடம் தரமாட்டோம்; தோட்டமும் தரமாட்டோம் என்ற 'குரல்களுக்கும்' இதனால் சாட்டையடி கொடுக்கலாம் என்பதுவும்—அவளின் ஒருபக்க நியாயமாக இருந்தது.

மறுபக்கத்தில்... என்ன அழிஞ்சு போச்சு. வெங்காயச் சேனை, புயல் வந்தது—இஞ்சயும் அடிச்சிருந்தால் மரமும் விழுந்திருக்கும் தானே! இதுக்காக என்னுடைய மடியில யும் அன்பின் பிணைப்பிலயும் வளர்ந்த பிள்ளைகளை எங்கோ இருந்து வந்த அரக்கர்களுக்கு காட்டிக் கொடுத்து அவங்கள் வதைபட நாம் உடந்தையாக இருக்க வேண் டுமா? இது அவளின் மறுபக்க நியாயமாக இருந்தது.

வெங்காய சேனையை நினைக்கும் போது 'வெட்டிய வர்களை' அழிக்க வேண்டும் என்ற உணர்வும்.

வெட்டியவர்கள் தன் பாசப்பிணைப்பில் வளர்ந்த வர்கள் என்ற போது 'சே இவங்களையா காட்டிக் கொடுப் பது' என்ற பாச உணர்வும் ஜெஸ்மி கிழவியை மரம் விழுந்த இந்த இரண்டாவது தானாக விரட்டிக்கொண்டே இருந்தது.

'அண்ணாச்சி — எங்க போறாய்?' கோடிப்பக்கத்தால் மரியானின் தங்கை ஓடி வந்தாள்.

"பெரிய தோட்டத்துப் பெத்தா' தோசை அனுப்பி இருக்கு. இந்தா...' அவள் நீட்டினாள்.

'அதை தூக்கி எறியடி. இனி இந்த தடிச்ச சாதி மான்களோட எங்கட கொண்டாட்டம் இல்லை. மரம் தறிச்சவர்களை காட்டிக்கொடுத்தால் அவையள் எங்களுக்கு வேலை தரமாட்டினமாம், அவையளை நம்பித்தான் நாங்க வாழுறம் என்ற நினைப்பு. கடவுள் உலகத்தை படைத்திருக்கிறார் — உயிர்கள் வாழ — அழிக்க அவருக்குத் தெரியும். இவங்கள் எங்கள அழிக்கிறதென்றா எங்கட கடவுள் இவங்களா? என்ன வந்தாலும் சரி... இந்த சந்தர்ப்பம் இனி வரவே வராது..."

'அப்ப பொலிசுக்கு மரம் தறிச்சவங்களை காட்டியாடா கொடுக்கப் போகிறாய்'' கிழவி கத்தினாள். அவளின் முகத்தில் உள்ள பள்ளங்கள் நிமிர்ந்து பதிந்தன.

மரியானின் தங்கை தயங்கி நின்றாள்.

'ஆத்திர உணர்வோடு ஒவ்வொரு மனிதனும் அந்தந்த நேரத்தில் அவ்வப்போது 'ஏதோ' கூறலாம் அது 'நல்ல முறைக்கு வருகிறதா இல்லையா' என்று இருந்து பார்க்க வேண்டும். ? கலியாணமாகாததன் இருபத்தாறு வயதின் அனுபவம் அவளுக்கு அதைத்தான் உணர்த்தியது.

அண்ணனுக்கு எப்படி ஆத்திர உணர்வோ அதைப் போல — காட்டிக் கொடுத்தா தோட்டம் தரமாட்டம் என்றதும் அவர்களின் ஆத்திர உணர்வாக ஏன் இருக்க முடியாது.

'நீ காட்டிக்கொடு. நீ அவங்களை மட்டுமல்ல-எல்லா ரையுமே காட்டிக் கொடுக்கப் போறாய்' - கிழவியின் கத றல் ஓய்ந்தபோது...

மாஸ்டர் தெருக்கதவடியால் வருவது மரியானுக்கு தெரிந்தது. மரியானைப் பொறுத்தவரை - சாதாரண உழைப்பாளியான அவனுக்கு உலகத்தில் உள்ள ,மனித நெருப்புக் கோளங்களின்' சக்திகளையும் அதன் தாக்க விளைவுகளையும் காட்டித்தந்தவர் அந்தோனி மாஸ்டர்.

'வாங்க மாஸ்டர் —' மரியான் மரியாதையாக நின்றான்.

'மரியான் என்ன முடிவு எடுத்திருக்கிறாய்' — மாஸ் டர் கேட்டுக்கொண்டே வந்தார்.

'வேறு என்ன செய்யிறது மாஸ்டர்' வெட்டினவர் களை சொல்வதை விட . இனியும் மறைக்க முடியுமா இவ்வளவு வந்தபின்...

'இதில — ஒரு விஷயமும் கலந்து இருக்கு '-மாஸ்டர் திண்ணையில வந்து அமர்ந்து கொண்டார். மூன்று சோடிக் கண்கள் அவரைச் சூழ்ந்து கொண்டன.

'என்ன மாஸ்டர்' — மரியான் எழுந்தே நின்றான்.

'என்ன நிக்கிறாய் இரன் மரியான். பொலிசு காரங்க இந்த அரசமரம் தறிச்சதை பிழையாக விளங்கிக் கொண்டிருக்காங்க ' விளங்கவில்லை. மாஸ்டர் தன் பேச்சினைத் தொடர்ந்தார்.

யாரோ பொலிசுக்கு பெட்டிசம் எழுதி போட்டிருக்கினம் எப்படி தெரியுமோ — 'புனித சின்னமான அரச மரத்தை தறித்திருக்கிறார்கள். ஒரு சாரரை அவமதிப்பது போலவே இது நடந்துள்ளது' இப்படித்தான் எழுதி இருக்கிறார்கள். இந்தப் பழியும் உன் மேல்தான் விழப் போகிறது.

மரியானின் மூளையில் பொறி தட்டியது.

தெரு ஒழுங்கையின் பாதி நிலப்பரப்பை இந்த அரச மரம் பிடித்திருக்கிறது. போக்குவரத்திற்கு இடைஞ்சல் என்பதற்காகத் தானே அவர்கள் அதை வெட்டினார்கள். அரசமரம் மட்டுமல்ல அவ்விடத்தில் 'புளியமரம்' இருந்தாலும் வெட்டப்பட வேண்டிய தொன்று.

பொலிஸ் ஸ்டேசனில் தான் போட்ட என்ரியை நினைத்துப் பார்த்தான் மரியான்.

'அத்துமீறி என் வெங்காய வரவைக்குள பெரிய மரத்தை வெட்டி வீழ்த்தி விட்டார்கள்.'

ஆனால் ஆக்களைச் சொல்லவில்லை.

இந்த சம்பவத்திற்கு 'இனச் சாயம்' பூசப்பட்டு அரங்கிற்கு வருவதென்றால் ..

'மாஸ்டர்...' மரியானின் கதறல் ஜெஸ்மி கிழவியையும் தாக்கியது...

இந்த சம்பவத்திற்கு நீங்கள் சொன்ன மாதிரி ,இனச் சாயம்' பூசப்பட்டு என்னிடம் வருமென்றால்... அரசமரத்தை நான் தான் தறித்தேன் என்று சொல்லுவேன். நான் தான் அரசமரத்தை தறிச்சவன்...

மரியானின் ஆவேசம் கலந்த குரல்...

அந்த 'கிராமம்' முற்றிலும் ஒலிக்கத் தொடங்கியாகி விட்டது.

(யாவும் கற்பனை)

இரசிகமணி நினைவுப் போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்ற கதை

# பத்தரை மாற்றுத் தங்கம்

பொன்னுத்துரை இதை எதிர்பார்க்கவே இல்லை. இப்படியான பழி தன்மேல் வருமென அவன் கனவில் கூட நினைக்கவில்லை.

அதுவும் தன் மனைவி ரூபத்தில் அந்த பழி வந்த போது... உண்மையில் துடி... துடித்தே போனான். அவனது இதயமே கனத்தது. பேசக்கூட அவனால் முடியவில்லை.

மௌனமாக இருந்து யோசித்துப் பார்த்தான். யோசிக்க யோசிக்க இன்னும் வேதனை கூடிக்கொண்டே அவனுக்கிருந்தது.

"உங்கட மௌனம்... எனக்கு எல்லாம் விளங்கிப் போச்சு... ராட்சதப் பூனை வேடம் இனியும் போட வேண்டாம். உங்களுக்கு ஒரு மனைவி இருக்கு. வருசத்துக்கு ஒன்றாய் ஐந்து பிள்ளைகள் இருக்கு. இதுகளை நினைத்தாவது உங்கட மனங்களை கட்டுப்படுத்தி வாழ முடியவில்லை என்றால் .... நீங்கள் எல்லாம் என்ன மனிச சாதியோ...?

பொன்னுதுரையின் மௌனம் அவனின் மனைவி அன்னலெட்சுமியை பேச வைத்தது. அவனின் குழந்தைகளை முழுசி முழுசி பார்க்க வைத்தது.

தன் மனைவியும் தன் பிள்ளைகளும் தன்னை ஒரு காட்சி விலங்காக்கி கூட்டுக்குள் அடைத்து வேடிக்கை பார்க்கின்ற நிலை... தன் மௌனம் ஏற்படுத்தி விட்டதே... என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டபோது...

புதியவர்களைக் கண்டதும் பாயும் வெறி நாயாக பாய்ந்தால் என்ன? என்று ஒரு விநாடி நினைத்துப் பார்த்தான். 'கோபக்காரனுக்கு புத்தி மட்டும்' அவனது தந்தையார் அவனுக்கு சொன்னது. துணையாக வந்தது. மௌனம் கலக நாஸ்தி' என்ற அவன் தந்தையின் போதனையும் கூட எழுந்தது.

பொன்னுத்துரை மௌனமாக வாய் விட்டு சிரித்தான். விழுந்து விழுந்து சிரிக்க நினைத்தான். அப்படிச் சிரித்தால் தன்னைச் சுற்றி நிற்கும் இவர்கள் எல்லாம் பைத்தியமாக்கிப் போடுவார்களோ என்ற பயமும் அவனுள் எழத்தான் செய்தது.

'என்ன சிரிக்கிறீங்க ? செய்ததை செய்து யோட்டு... மானங்கெட்ட சிரிப்பு சிரிக்கிறீங்களே என்னால என் பிள்ளைகளால இனி வெளியில தலைகாட்ட முடியுமோ...' பொன்னுத்துரையின் மனைவி அழத் தொடங்கினாள்.

கூட தகப்பனை முறைத்துப் பார்த்த பிள்ளைகளும் தாயுடன் சேர்ந்து கொண்டார்கள்.

பொன்னுத்துரை அப்போதுதான் வேலையால் வந்திருந்தான். கிராமோதய சபையில் அவன் கிளார்க். நல்ல சிவந்த மேனி. உருளையான உடம்பு. சுருண்ட கேசம். சீரான பல்வரிசை எந்தவொரு பெண்ணுக்கும் அவன் காதல் இளவரசன் தான். சின்ன புன்னகையால், நாக்கில் தடுக்கி விழும் சில சொற்களால் .. எந்தப் பெண்ணையும் அவன் சுண்டி எடுத்துவிடும் ஆற்றல் உண்டென்று அவன் மனைவி மட்டுமல்ல... எல்லோரும் தான் நினைப்பார்கள்.

இந்த நினைப்புகளுக்கும்... அவனின் அந்த அழகான தோற்றத்துக்கும் எந்த தொடர்புகளும் உண்டா என்பது அது பொன்னுத்துரையினை நன்றாக உரசிப் பார்த்தால் தான் தெரியும்.

மளமளவென்று தன் கையோடு நின்ற சைக்கிளை உருட்டி முள் முருங்கையில் சாத்திவிட்டு வீட்டுப் படியில் ஏறினான் பொன்னுத்துரை.

''உங்களுக்கு ரோசம் ஆவது இருக்கா? நான் இங்கு ஒருத்தி அழுது குளறுகிறன். நீங்க உங்க பாட்டுக்கு சிரித்துக் கொண்டு போறீங்களே ஒரு வார்த்தை நீங்க எங்க பேசப் போறீங்க குற்றம் செய்த விலங்கு உடம்பல்லவா?'' அன்னலெட்சுமியின் வார்த்தைகள் போன பொன்னுத்துரையை திரும்ப வைத்தது நிற்க வைத்தது.

முட்டி மோதிக்கொண்டு எப்போது புறப்படுவோம் என்ற அம்புகளான அவனின் சொற்கள் இந்தக் கால 'ஷெல்' போல படுவேகமாக குறித்த இலக்குகளை நோக்கி புறப்படத் தொடங்கின. 'ஷெல்'களின் குறி தவறினாலும் பொன்னுத்துரையின் ஷெல் வார்த்தைகளின் குறி தவறாது. மனைவியை மட்டுமல்ல வளவு வேலியில் முளைத்த திடீர் முகங்களைக் கூட அவை தாக்கத் தொடங்கின.

''எனக்கு அழகான மனைவி இருக்கு. அழகான மூளைசாலிகளான பிள்ளைகள் இருக்கு. எனக்கு எந்தக் குறையும் இல்லை. நீங்கள் ஏன் வேலிக்குள்ளால எட்டிப் பார்க்கிறீங்க? எனக்கும் என் பெஞ்சாதிக்கும் உள்ள பிரச்சினை இது.''

பொன்னுத்துரையின் வார்த்தைகள் தன்னை வேடிக்கை பார்த்தவர்களைத் தாக்கியது.

'செய்யிறதை செய்து போட்டு.. கதைக்கிறதைப் பார்...' ,வேலி முகம்' ஒன்று பேசியது. அது பொன்னுத்துரையின் காதுகளில் விழவில்லை.

''அன்னலெட்சுமி! நீ யாரோட எப்படி எதை பேசு இறாய் என்றதை நல்லா யோசித்துப் போட்டு பேசு. இந்த பதினைந்து வருட தாம்பத்திய வாழ்க்கையில் நீ என்னை இவ்வளவு தான் புரிந்திருக்கிறாய் என்றதை நினைக்கும் போது.. எனக்கு என்மேலதான் கோபமாய் இருக்கு கொஞ்சம் யோசித்துப் பார்... எனக்கு இந்தா அந்தா என்று குமராகிற வயசில பிள்ளை இருக்கு நான் பிழைவிடுவேனோ?

''இது கோணேச மண் பிழை விடுபவர்களை உடனுக் குடன் கேட்கும் மண். பிழைகளை செய்துபோட்டு யாரும் இஞ்ச தப்பமுடியாது... உன்னட்ட என்னைபற்றி யார் சொன்னது முதலில் அவையளக் கூப்பிடு...''

பொன்னுத்துரை தன் பேச்சினை முடிக்காது தொடர்ந் தான்.

அன்னலெட்சுமிக்கு தன் புருஷனைப் பற்றித் தெரியும். பிரச்சனை என்று ஒன்று வந்தால் அதை முடிக்காது சோறே சாப்பிட மாட்டார் என்று - இப்ப என்ன செய் வது?

அந்த பிள்ளை ராதாவைக் கூப்பிட்டால் என்ன? நேர வைத்து விசாரித்தால்... அன்னலெட்சுமிக்கு புத்தி சாலித்தனமான யோசனை அந்த நேரம் வந்தது. சீ . என் புருஷனை நம்பாமல் இதை பேசய் நேர விசாரித்து... இப்போது அன்னலெட்சுமிக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை.

''கூப்பிடு அவளை... நேர கேட்பேசம்...'' பொன்னுத் துரை ஆவேசம் கொண்டு கத்தினான்.

''இஞ்ச பார் நாலு நாட்களாகப் பார்க்கிறன். கிணத் தடியில இவள். ராதா பெட்டை குளிக்கிற விதம் எனக்கு

பிடிக்கவில்லை. வெள்ளை அண்டஸ்கேட்டை தூக்கி மேல கட்டிக்கொண்டு முக்கால் வாசி தொடை தெரிய குளித் தால் எப்படி இருக்கும்...? வெள்ளை அண்டஸ்கேட்டில தண்ணி நனைய கீழ முக்கால் வாசி தொடை தெரிய இஞ்சேர் அவள் யாரோ பிறத்தி பெட்டை என்றாலும், எனக்கு என்னமோ என்னால பார்க்கவே முடியவில்லை. அதுதான்... கிணத்தடியிலேயே வைத்து சொன்னனான். ''ராதா உனக்கெண்டு ஒரு சாரம் வாங்கி... கிணத்தடி யில குளிக்கக்க அதை கட்டி குளி'' என்று இப்படி குளிக் கிறது அம்மணமாக இருக்குதென்று, இதைப் போய் அவள்''

பொன்னுத்துரை தங்குதடையின்றி வார்த்தைகளை அளந்தான்.

''அப்படியா சங்கதி...?'' அன்னலெட்சுமி அதிர்ந்தே விட்டாள்.

பெண்கள் இப்படித்தான். உணர்ச்சி வசப்படுதலில் ஆண்களை விட கெட்டிக்காரர்களோ? உடனுக்குடன் தங்கள் நிறங்களைக்கூட மாற்றிக்கொள்வார்கள்.

''அன்னலெட்சுமி... என்ன நடந்தது என்று ஆறுத லாக அமைதியாக என்னிடம் ஏது என்று கேட்டாயா? ஏதோ கோபுரம் சரிந்தே போய் விட்டதென்று அல்லவா அடிச்சு புரண்டாய். யாரோ எவரோ ஆம்பிளைகள் பிழை விடுயினம் என்றதுக்காக அதே கண்ணோட என்னைப் பார்த்தால் உண்மையை இப்ப சொல்றன்... நான் ஒரு ஆண்மகன் என்ற நிலையில்...''

''தற்செயலாக போன... போன.... புதன்கிழமை... இல்ல. சனிக்கிழமை... சனீஸ்வரர் கோவிலுக்கு போன நாள்... ஓம்... இவன் ராதா கிணத்தடியில குளித்துக்

கொண்டு நின்றாள் நான் பார்த்திட்டன். திரும்பவும் பார்க்கவேண்டும் போல இருந்தது... நான் பார்த்தன். அவள் குளிக்கிற காட்சி... அப்போதுதான் என்ர மனச் சாட்சி வேலை செய்தது... என்னையறியாமல் அவள் எப் படி குளிக்கிறதை தடுக்க வேண்டும் என்ற உணர்வே என் னிடம் வந்தது''.

''மூன்று நாட்களாகப் பார்க்கிறன். அவள் அப்படித் தான் அதே நேரத்தில் குளிக்கிறாள். எனக்கு ஒரு சந்தே கம்... துருவிப் பார்த்தான். ராதா குளிக்கிற காட்சியை அனுபவிக்க பலபேர் காத்திருக்கினம் என்று... இவள் பேய்ப் பெட்டை... வஞ்சகம் இல்லாமல் குளிக்கிறாள்... அதுதான் பொறுக்க மாட்டாமல் இப்படி குளியாதை என்று சொன்னனான்...''

அன்னலெட்சுமி வாயே திறக்காது தன் கணவனை... விழித்த கண் மூடாது பார்த்தாள்.

'முழிக்காத... என்னண்டு சென்னாள்...? நான் அடிக் கடி அவள் குளிக்கக்க கிணத்தடிக்குப் போய்...'

பொன்னுத்துரையின் வார்த்தைகள் தொடரா வண் ணம் அன்னலெட்சுமியின் கை அவன் வாயினைப் பொத் தியது.

''இப்ப தெரியுதே உண்மை...?''

''சரி... சரி... இதை இப்படியே விடும்... அப்பா...''

''எப்படி விட... அதுதான் முடியாது...

''இந்த பிரச்சனைக்கு ஒரு பக்கமாய் உண்மை காண முடியாது. மறு பக்கமும் தேவை... அந்த ராதாவையும் கூப்பிட்டு ஆறுதலா விசாரி. ராதா நல்ல பிள்ளை. அவள்

இந்த வயசில் இப்படி பேசவைத்து .. பின்னால இந்த சமூகத்துக்கு தேவையற்யவள் ஆக்கிவிடக்கூடாது. அதற்கு நாமும் வடிகால் ஆகக்கூடாது... அதுவரை நான் சாப்பிட மாட்டன்... எங்க உண்மை என்றதை... நீ அறிய வேணும் ..''

தன் உடுப்புக்களை களைய பொன்னுத்துரை வீட்டுக்குள் ஏறினான். அவனோடு இத்தனை நேரமாக அம்மாவோடு நின்ற பிள்ளைகள் - இப்போது சேர்ந்து கொண்டார்கள். அம்மாவை ஏளனமாக பார்க்கிறார்களா? அவர்கள்...?

அன்னலெட்சுமியை சுற்றி... சுற்றி... இப்போது 'ராதா' வரத் தொடங்கினாள்.

வாரமலர் தினமுரசு, ஒக். 09 - 15, 1994

# தெரியாத சங்கதிகள்

அந்தச் 'சென்றிக்கு' 25 மீற்றருக்கு முன்பாக 'நிறுத்துக... அனுமதி கிடைத்ததும் வரவும்...' என்ற எனக்கு பிடித்தமான தமிழ் வசனம் என்னை வரவேற்றதால்.... மிகவும் அவதியாக ஹொண்டா 200 இல் வந்த நான் ஆறுதலான சந்தோஷத்தில் நின்றேன்.

தெருவின் முன் பக்கமாக இருந்து 'சென்றி பொயின்ரைக்' கடந்து மூன்று லொறிகளும்; இரண்டு மினி வேன்களும்; ஒரு மாட்டு வண்டிலும் ஐந்தாறு சைக்கிள்களும் வந்தன.

நாலைந்து தெரிந்த முகங்கள் பற்களைக் காட்டின. நாலைந்து கைகளும் உயர்ந்து பதிந்தன.

எனது மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால் சில வாகனங்கள் நின்றுகொண்டிருந்தன. ஆள் அரவம் இல்லை.

வாகன ஒழுங்குக்கு பொறுப்பாக நின்ற இராணுவ வீரர் கையினை உயர்த்தி எங்களை வருமாறு அழைத்தார்; எனது மோட்டார் சைக்கிள் சென்றிக்குள் புகுந்து மெதுவாக ஓடத் தொடங்கியது.

சென்றிக்கு வெளியே வந்ததும் மோட்டார் சைக்கிளை ஓரமாக நிற்பாட்டச் சொன்னார்கள்.

மோட்டார் சைக்கிளை துருவித் துருவி ஆராய்ந்தார்கள். அடையாள அட்டையை பார்த்தார்கள். நாலு கேள்விகளை கேட்டார்கள். ஏற... இறங்க... பார்த்தார்கள்.

நான் எல்லாவற்றிற்கும் சிரித்தபடியே மதிலை சொல்லிக்கொண்டிருந்தேன். என்மடியில் கனம் இல்லை. பிறகேன் இவர்களுக்கு பயப்பட வேண்டுல்?

''என்னடா சிரிக்கிறாய் .. பிளேன் விழுத்தின தலைக் கனமோ ..'' அந்த சென்றி இராணுவ வீரர் சிங்களத்தில் மள... மள... வென்று செற்களால் குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்தார்.

அவரின் குண்டுகளினால் தாக்கப்பட்ட நான், மிகவும் மரியாதையுடன் வாயினை இறுக மூடிக் கொண்டேன். முகத்தை 'உம்' மென்று மாற்றலானேன்.

போக அனுமதி கிடைத்தது. மோட்டார் சைக்கிளை தெருவுக்கு உறுட்டி... சீற்றில் அமர்ந்து .. கிக்கை மிதித்தேன். ஊகும்... என்ன என்ன காலமோ 'ஸ்ராட்' வரவில்லை. பெற்றோல் தடைப்படுகிறது என நினைத்து சோக்கை இழுத்து கிக்கை மிதித்தேன். 'ஸ்ராட்' வரவில்லை.

என்ன செய்யலாம்? இருபது மைல்கள் அவசரமாக போக வேண்டிய பயணம். இராணுவ வீரர்களைத் தவிர அந்த சென்றி பொயின்ரில் அப்போது ஆள் அரவம் இல்லை.

தெருவில் வாகன ஒழுங்குக்காக நின்ற இரண்டு இராணுவ வீரர்கள் என்னைப் பார்த்தார்கள்.

எனக்கு அவர்களை பார்க்க பயமாக இருந்தது.

கொஞ்ச நேரத்துக்கு முந்தி பற்களை காட்டித்தானே செம்மையாக வாங்கிக் கட்டிக் கொண்டிருந்தேன்.

நான் என்ன ரோசம் இல்லாதவனா?

நானும் அவர்களை பார்க்காத மாதிரி என் வித்தை களை மோட்டார் சைக்கிளுக்கு செய்து கொண்டிருந்தேன். என்ன செய்வது? என் கஷ்ட நேரம். ஸ்ராட் தான் வர மாட்டேன் என்றதே!

அந்த இரண்டு இராணுவ வீரர்கள் என்னருகில் வந் தார்கள். ''என்ன பிரச்சனை உதவி செய்ய வேண் டுமா...?'' என மிகவும் ஆறுதலாக கேட்டார்கள்.

நான் தலையை நிலத்தில் தொங்க போட்டுக் கொண்டே... எனக்குத் தெரிந்த சிங்களத்தில் பதிலைச் சொன்னேன்.

''கொஞ்சம் சந்தோஷமாக முகத்தை நிமிர்த்தி... எங்களையும் மனிசராய் நினைத்து பதிலைச் சொல்லும்... பேய்; பிசாசுகளோட கதைக்கிற மாதிரி கதைக்கிறாயே ! உதவ வந்த எங்களுக்கு ஒரு மரியாதைக்காவது ஒரு சிரிப்பு ''

நான் பயந்து: பயந்தே தலையினை நிமிரத்தினேன்.

''எங்களுக்கும் உங்கட பொடியன்களுக்கும் சண்டை சண்டைதான். சண்டை எப்பவும் இல்லை. சமாதானமும் வரும். அதுக்கு நீங்க எங்களோட வித்தியாசமாக நடக் கக்கூடாது. இருக்கிறது கொஞ்ச காலம். இதுக்குள்ள சண்டை பிடிச்சு மண்டையை போட வேணுமா...?''

அந்த இராணுவ வீரர்கள் இருவரும் மாறி... மாறி... தங்கள் மொழியில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

என்னிடம் ஏற்பட்ட அந்த பயம்... இப்போது மாறி அவர்களைப் பார்க்கத் தூண்டியது. பற்களுக்கு உடனடி யாக சிரிப்பை வரவழைக்க கட்டளை போட்டேன்.

'அந்த சென்றியில் ஆக்களை சோதிக்கிறவர்கள் நான் சிரித்ததுக்கு இந்தா; அந்தா என்று ஏறிப்பாய்ந்து விழுந்தார்கள். ஆனால் நீங்களோ... மனிசன் மதிரி சிரித்துப் பேசி கதைக்க சொல்லுறீங்க... எனக்கு இது... ஏதுமே புரியவில்லை: எனக்கு இவை தெரியாத சங்கதிகள்...' சொல்ல நினைத்தேன்.

நல்லகாலம் என் சந்தோஷ மிதி...... மோட்டார் சைக்கிளுக்கு 'ஸ்ராஸ்' வந்து விட்டது.

-வாரமலர் தினமுரசு, ஆக. 20 - 26, 1995

# அவதிக்காரர்கள்

கனடாவிலிருந்து எனது மூத்தமகன் கடிதம் எழுதி இருந்தான். என்னைவிட அவனின் தாய் அக்கடிதத்தைப் பலமுறைகள் படித்திருப்பாள். அந்த 'பலமுறைகளின்' பின்புதான்; நான் அந்தக் கடிதத்தைப் படிக்க முடிந்தது.

'என்னப்பா ... நாங்கள் நினைச்சமாதிரி மகனுக்கும் கனடா பிரஜா உரிமை கிடைச்சுப் போச்சு. இளையவன் போய் இப்ப ஒன்றரை வருஷம்தானே. அவனும் கனடா பிரஜை ஆகிவிடுவான். பின்ன மகளையும் எடுக்கிறதாய் எழுதி இருக்கிறான். பிறகென்ன நாங்களும் அங்க போய் நிம்மதியாய் சீவிக்கலாம்.....'

என்னுள்ளும் ஒருவித மகிழ்வு பொங்கிக் கொண்டு தான் இருந்தது. என்னால் முடியாததுகளை என் பிள்ளைகள் முடித்து விட்டார்களே என்று நினைக்கும் போது... என் மனைவியைப் போல நானும் கனடா மண்ணின் சுகத்தில் மிதக்கத் தொடங்கினேன்.

கனடா நகரத்தின் அழகும், இயற்கை செயற்கை தோற்றங்களும் என் கண்முன்னால் நடனமாடத் தொடங்கின. மூத்தமகன் முன் எழுதிய கடிதங்களை எல்லாம் நினைவு கூர்ந்து கனடாவின் உருவத்தைப் படம் பிடிக்கலானேன். அப்போது...

தெருக்கதவை யாரோ தட்டும்...... 'யார் அப்பா அது......' என் கட்டில் ஓரமாய் குந்தி இருந்து என்னைப் போல கனவில் மிதந்து கொண்டிருந்த மனைவியைத் தட்டினேன்

'இந்த நேரத்தில் ... சே...... பெரிய கரைச்சல்... கொஞ்ச நேரமாவது சும்மா இருக்க விடுகிதுகளா......'

சினந்து கொண்டு என் மனைவி எழுந்தாள் சப்பரம் போல அசைந்தாள்.

வீட்டு வெளிவாசல் கதவைத் திறந்து ..... முற்றத்தில் இறங்கி தெருக்கதவை நோக்கி என் மனைவி நடக்கத் தொடங்கினாள். நான் மீண்டும் என் மூத்த மகனின் கடிதத்தைப் புரட்டத் தொடங்கினேன். அந்த கனடா நகரத்தின் அழகும் ... நாகரீக வாழ்வும்......

'ஐயா...... ஐயா......'

திடுக்கிட்டே விட்டேன். யாராக இருக்கலாம்? வீட்டு வாசல் கதவடியில் ஒரு இளைஞன் நிற்பதும் - என் மனைவி என்னை நோக்கி வருவதும் என் கண்களுக்குத் தெரிகின்றது.

'யாரென்று தெரியுமே...... நன்றாகப் பாருங்கோ......, மனைவி சொல்லிவிட்டு 'தம்பி இஞ்ச வாரும் ஐயாவுக்கு நடக்க முடியாது...? என்று அந்த இளைஞனை அழைப் பதும்... என் காதுகளுக்கு நன்றாகக் கேட்கின்றது. அந்த இளைஞன் சப்பாத்துக்களை வாசலில் கழட்டி விட்டு, கொண்டு வந்த 'ரவலிங் பேக்கை' கீழே வைத்து விட்டு...... அந்த ஹோலின் முன் பகுதியில் இருந்த சோபா செற்றி களைக் கடந்து... பின் சாப்பாட்டு மேசையையும் கடந்து அதன் மறைவில் 'மூன்றுக்கு ஆறடி' கட்டிலில் குந்தியிருக் கும் என்னை நோக்கி வந்தான்.

நான் மரியாதைக்காக எழும்ப முற்பட்டேன்.

'நீங்க இருங்க... இருங்க..., என்றவாறு அவன் என் கட்டில் ஓரம் வந்து விட்டான்.

என் மகனின் கடிதம் என் கரங்களுக்குள் பட படத் துக் கொண்டிருந்தது. நான் அந்த இளைஞனின் முகத்தை மீண்டும் பார்க்கின்றேன். 'யாராக இருக்கலாம்?'

என்னால் இன்னும் அந்த இளைஞனை இனங் காண முடியவில்லை. என் தோல்வியை உணர்ந்தோ என்னவோ... என் மனைவியே சொன்னாள். கோட்டை டேவிட்...... க...ன்...'' என் மனைவி முடிக்கவில்லை...... எனக்கு எல்லாமே புரியத் தொடங்கி விட்டது. ''தம்பி... நீர்... டேவிட்டின்ர மூத்தவனோ...'' நான் அந்த இளைஞனைக் கண்டு பிடித்து விட்டதாக நினைத்துக் கேட்டேன். அவன்...... தலையை ஆட்டி விட்டு 'இரண்டாவது மகன்' என்றான். நான் அந்த இளைஞனை மேலும் கீழும் பார்த்தேன்......

நன்றாக அந்த இளைஞனை மேலும் கீழும் பார்க்கின்றேன் என் கண்களிலிருந்து கண்ணீர் கசிகின்றது என்னையறியாமல் என்னுள் அழுகை பொங்கிக் கொண்டு வந்தது... தேம்பி அழ நினைக்கின்றேன் அழுகின்றேன்.

என் நிலை அந்த இளைஞனை ஏதோ செய்திருக்க வேண்டும். என் மனைவி 'அவர் இப்ப கொஞ்சக்காலமாய் இப்படித்தான்...' நீங்க இஞ்ச வாங்க...... அந்த ரூமில பேக்கை வைத்து விட்டு அங்க... பின் பக்கமாய் பாத்றூம் இருக்கு ...... குளிச்சுப் போட்டு வாங்க......' என்று ஏதோ .... ஏதோ எல்லாம் சொல்வது......

என் மூத்தமகனின் அந்தக் கனடாக் கடிதம் இப்பவும் என் கரத்தில்தான் இருக்கின்றது. கண்களைத் துடைத்துவிட்டு ... அந்த இளைஞன் 'இருங்க ஐயா... வாறன்..' என்றவாறு பின்பக்க அறைக்குப் போகின்றான். நான் மெதுவாக கட்டில் தலையணையில் சாய்கின்றேன். இடது காலை மெது...... மெதுவாக மடித்து ... ஓ முடியவில்லை .. நீட்டி ... நீட் ... 'ஆ' .. ... ஐயோ...... அம்மா......

'என் எதிரிக்குக் கூட இந்த மூட்டுவாதம் வரக்கூடாது' என் வழமையான வேதனைக்குரல் தொண்டை

வரை வருகின்றது. தொண்டைக்குள் ஏற்பட்ட அந்தக் குரலின் அரண்டல் ஒருவித அரிப்பை ஏற்படுத்த .. அந்த வழமையான இருமலும் என்னுள் பற்றிக் கொள்கின்றது. இருமுகின்றேன்.

என் மகனின் அந்தக் கனடா கடிதம் இன்னும் என் கைக்குள்தான் இருக்கின்றது. இரண்டு முறைகள் படித்து விட்டேன். மூன்றாம் முறையும் அதைப் படிக்கும் ஆவல் ஏற்பட்டது. ஆனால்......

அந்த இளைஞன்...... டேவிட்டின் இரண்டாவது மகன் ... அவனின் திடீர் வரவால் ஏற்பட்ட அந்த வேதனைகள்... என் சிந்தனை மேகங்கள் ஆறு வருடத்துக்கு முன்னால் நடந்து போன 'டேவிட்டின்' மரண ஓலத்திற்கு பேய் மழை பொழியத் தொடங்கியது.

என் சிந்தனைகள் இனியவை. சில கசப்பானவைகளாகவும் இருக்கலாம். ஆனால் இந்த சிந்தனைகள் இருக்குமட்டும் எனக்கு யாரின் உதவியும் தேவைப்படுவதில்லை. நான் இறக்குமட்டும் என் சிந்தனைகளோடு வாழ்வேன் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

அந்தச் சிந்தனைகளின் ஒன்றான டேவிட்டின் ஞாபகந்தான் இப்போதும்... இப்போதும்...—என் குமுறலுக்கும், விம்மலுக்கும் காரணிகளாக இருக்கலாம்?

'பாத்றூமில்' சத்தம் கேட்கின்றது. 'இஞ்சார்... பொடியன் குளிக்கிறான். சாப்பிட ஏதும் இருக்கா......'

'கறி இருக்கு... சோறு இல்லை கொஞ்சம் மாவைக் குழைத்துப் போடப் போறேன் புட்டும் முட்டைப் பொரியலும்... கறியும் காணுந் தானே...... அப்பா .. ' என்றபடி அடுப்படிக்குள் இருந்து குரலும் வருகின்றது.

என் மனைவி இப்போது முட்டைப் பொரியலுக்கு வெங்காயம் உரித்துக் கொண்டிருக்கிறாள்.

நான் இந்த சொகுசு கட்டிலில் படுத்தபடி இந்த ஆறு வருடங்களை உரித்துப் பார்க்க முற்படுகின்றேன். அந்த முடிந்து போன சம்பவங்கள் எல்லாம் சினிமாப் படம் போல என் ஞாபகத் திரையில் வண்ணப் படங்களாக ஓடத் தொடங்கின.

ஆயிரத்துத் தொளாயிரத்தி எண்பத்தி மூன்றின் கடைசிப் பகுதி அது. என் மனைவியின் மூத்த தமக்கையாரின் கடைசி மகனுக்கு உடல்நிலை சரியில்லையென்று உடன் வருமாறு கடிதமும் வந்திருந்தது. என் மனைவி தனது நாற்பது வயதினை மறந்து அழத் தொடங்கி விட்டாள். ''வருத்தம் தானே ...... யாழ்ப்பாணத்தில் இல்லாத வைத்தியமா? சுகப்பட்டு விடும். சரி அப்படிப் போவதென்றாலும் இஞ்ச திருக்கோணமலையில் இருந்து பஸ்சே ஓடுது...... அங்க போக என்ன? என்று சொல்லியும் அவள் அழுகை இடம் மாறவில்லை.

பின்னர் என்ன? பெண்களின் கண்ணீர் தான்...... யாழ்ப்பாணத்தின் ஷெல் அடிகளைக் கூட தகர்த்து விடுமே!

இஞ்சார்... திருக்கோணமலை நிலை யாழ்ப்பாணத்தில இல்லை யாழ்ப்பாணத்து நிலை இஞ்ச இல்லை. இஞ்ச சிங்களவரின் மீன் வெட்டும் கத்திக்குப் பயப்பட வேண்டும். அவர்களுக்குத் துணை போகும் இராணுவத்துக்குப் பயப்பட வேண்டும் ஒருநாள் இரண்டு நாள் கூத்தோட அழிக்கிறது அழிந்து... போற உயிர்கள் போய்.. பிரச்சினைகள் தூர்ந்து போய் விடும். ஆனால் யாழ்ப்பாணத்தில...... இதுக்குள...... நாங்களும் போய்......

எந்த இடி...... இடித்தாலும் என் மனைவியின் அந்தக் கடைசி ஆயுதம் என்னை வென்று விட்டது.

யாழ்ப்பாணத்தில பல கஷ்டங்களுக்கும் மத்தியில்.... மூன்று நாள் பயணத்தின் பின் இறங்கிய பின்னரே இல்லாள் உள்ள கஷ்டங்களைப் புரிந்து... என்னையும் புரிந்து கொண்டாள்.

வந்தது வந்தாயிற்று...... யாழ்ப்பாணத்திலிருந்து சித்தன்கேணிக்குப் போகவேண்டும். ஒரு வாகனமும் இல்லை.

நடந்தாவது போய்த்தான் தீர வேண்டும்... நடக்கத் துணிந்தோம். நடந்தோம். அப்போது தான்...

அந்த லொறி.... ஓம்.... 'எங்கே போறீங்க...' முன் சீற்றிலிருந்த ஒரு இளைஞன் என்னிடம் கேட்டான். நான் சொன்னேன்.... 'வாங்க.... போற வழியிற இறக்கி விடுறம்....' என்று எங்களை அந்த இளைஞன் அழைத்தான்.

நாங்கள் அந்த லொறியில் ஏறிய பின்னர்தான்...... பின்னர்தான்...... எங்களுக்கு அந்த இளைஞர்கள் யாரென்பது புரிந்தது.

அவர்களின் கைகளிலுள்ள. அந்த வெளிநாட்டு வகை வகையான துப்பாக்கிகள்....

'பயப்படாதீங்க... நாங்க... ஆனைக்கோட்டை மாதா சிலையடியில் இறக்கி விடுறம். நீங்க அங்கால... எப்படியாவது போங்க...'

ஒரு பக்கம் சந்தோசமாகவும்... இன்னொரு பக்கம் பயமாகவும்; உடல் குளிர்ந்து அனலாகிக் கொண்டே இருந்தது.

அவர்கள் சொன்னது போல குறித்த இடத்தில் தான் இறக்கி விட்டார்கள். மாலை... இருளைச் சாப்பிடும் நேரம்......

எங்களுக்கு திக்கு... திசை தெரியவில்லை...

எங்களை லொறியில் ஏற்றினானே ஒரு இளைஞன்... அவனும் எங்களோடு இறங்கிக்கொண்டான். லொறி போய் விட்டது. எங்களின் நிலை அந்த இளைஞனுக்குப் புரிந் திருக்க வேண்டும்... அவன்... யாரையோ கூப்பிட்டான்... என்னமோ சொன்னான். அவன் எங்களைப் பார்த்து விட்டு ஒரு சைக்களை கூப்பிட்டவரிடமிருந்து பெற்றுக் கொண்டு அந்த ஒழுங்கையால் போய்விட்டான்.

சைக்கிள் கொடுத்தவர்.... எங்களிடம் வந்தார்.... நீங்க... இனி அங்காலபோக ஏலாது... இருட்டிப் போச்சு வாங்க... என்ர வீட்டில நின்றுட்டு நாளைக்கு விடியப் போகலாம்... என்றார்...

நாங்கள் சம்மதித்தோம். அவர் எங்களை அந்த ஓலைக் குடிலுக்கு அழைத்துக் கொண்டு போனார்... போன் பின்புதான்... அழைத்துக்கொண்டு போனவரின் தராதரம் எங்களுக்குப் புரிந்தது. அவரின் ஏழ்மையின் கொடூரம்....

அவர்கள் எங்கள் இரவுச் சாப்பாட்டைபற்றிக் கதைப் பது எங்களுக்குப் புரிந்தது. நான் அவரை... அவர்தான் டேவிட்... டேவிட்...

'டேவிட்...' என்னையறியாமல் கத்துகின்றேன் 'என் னப்பா......' என் மனைவியின் கதறலும்... டேவிட்டின் இரண்டாவது மகனும் என் முன்னால்... நிழலாகத்தான் தெரிகிறார்கள்.

'ஒன்றுமில்லை... கொஞ்சத் தேத்தண்ணி...' நான் சொல்லிக்கொண்டே கட்டிலில் இருந்து எழ முற்படுகின் றேன்.

'தம்பி... யாரும் பாசமான ஆக்களின்ர கதை கதைச் சால் போதும்... இப்படித்தான்... இவர் தன் சிந்தனைக ளோடு வாழ்க்கை நடத்துற அதிசயப்பிறவி அப்பு ..' என் மனைவி என்னை நக்கி விட்டுப் போகிறாள்...

நான்...? அந்த நேரத்தில் எப்படித்தான் அந்த சிரிப்பு எனக்கு வந்ததோ! அந்த இளைஞனை என் கட்டிலில் அமரச் சொல்கின்றேன். அவன் மிக பயபக்தியாக கட்டில் ஓரத்தில் அமர்கின்றான்...

என்னிடம் டேவிட்டைப் பற்றிய கேள்விகள் பல... நாக்கு நுனியில் தொங்கிக் கொண்டு இருந்தன. உமிழ் நீரைப்போல கேள்விகளும் ஊறிக் கொண்டே வந்தன...

அந்தக் கொடியநாள் என்னுள்... மீண்டும்... மீண் டும்... நினைவுத் திரையில்... டேவிட்டின் இரண்டாவது மகனிடம்... கேள்வியொன்றைக் கேட்டு விட்டு இருக்கும் போது...

ஒன்பது தடவைகள் மறுத்தபின் பத்தாவது தடவை யாக என்னிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு பாண் வாங்கப் போகிறார் டேவிட்.

மனைவியிடம்.... சம்பலுக்குத் தேங்காய்.... வெங்கா யம்... வாங்கி வருவதாகவும்... சொல்கிறார்.

அவரின் மனைவி சொல்கிறார்...... போறனீங்க ..... பார்த்துப் போங்க ..' டேவிட் போகிறார்.

டேவிட் என்னுடன் பழகிய அந்த பத்து நிமிடங்கள்... நான் அவருடன் பழகி பத்து வருடங்கள் போல் இருந்தது.

நானும் 'கவனமாக... கவனமாக...' அன்றைய சூழல் அவருக்காக என்னையும் பேச வைத்தது.

டேவிட் போய் பத்து நிமிடங்கள் இருக்காது .....

அவர் போன திக்கில் தான்...!

அந்த பாரிய வெடிச் சத்தம் .. என்ர பிதாவே...

அந்தப் பாரிய வெடிச்சத்தம் என்ர பிதாவே... டேவிட்டின் மனைவியின் கதறல்... எங்களையே உலுப்பிவிட்டது. அந்தப் பாரிய வெடிச்சத்தத்தை தொடர்ந்து...

துப்பாக்கிகளின் சிரிப்பொலிகள்......

அந்தக் கொட்டிலின் பின்வளவுக்கால் யாரோ ஓடி வருவது தெரிகின்றது.... 'டேவிட் அண்ணை. டேவிட் அண்ணை மதவடி கண்ணி வெடியில...... ஆமிக்காரங்க அகப்பட்டு போனாங்...' வந்தவன் சொல்லிக் கொண்டே டேவிட்டைத் தேடினான்......

அவனுக்கு ... டேவிட்டின் மனைவியின் கதறல்...... காரணத்தைக் கற்பித்து இருக்கவேண்டும்... 'இந்த மனிசன் இந்த நேரத்தில்..... எல்லாம் தெரிஞ்சு கொண்டும் அதுக்குளை போனா...'

'பாண் வாங்க...' டேவிட்டின் மனைவி சொல்கிறாள்.

'பாண்... ஏன் ஒரு இரவு பட்டினி கிடந்தால் என்ன... எத்தனை இரவு பகல் நாங்கள் பட்டினி கிடந்திருக்கோம்... வந்தவனின் பார்வை எங்களின் மேல் தான் இருந்தது.

சொல்லிக் கொள்ளாமல் அவன் வெளியே ஓடினான்...

பின்னர்... பின்னர்... விடிந்த பின்னர் தான்...

அந்தப் பத்து நிமிடங்கள் பழகிய... என் டேவிட்...

அந்த டேவிட்டைப் பார்க்கப் போன அவன் நண்பன் யோசப்...... இன்னும்... இன்னும்......

ஐயோ... அந்தப் பயங்கரம்

அந்த ஆனைக்கோட்டைப் பகுதியே அழுது கொண்டிருந்தது.

என் மனைவியின் தமக்கையின் மகனின் ஆபத்து கட்டத்தை அணுக வந்த நாம்... மூன்று நாட்கள்... பழகிய அந்த பத்து நிமிடங்களுக்காக... அழுதுகொண்டே இருந்தோம்.

அந்த பாரிய வெடிச் சத்தம்...

துப்பாக்கிகளின் சிரிப்பொலிகள்......

டேவிட்டின்......... மரண ஓலம்... ...

'தம்பி தம்பி...... என்ன... என்ன' என்னையறியாமல் பத்து தடவைகள் அலட்டிக் கொண்டு இருந்தேனாம்... பின்பு மனைவியின் அதட்டலின் பின்புதான்... நான் நினைவுக்கு வந்தேனாம்...

'தம்பி நீர் இவரோட பேசாதையும்... இவருக்கு மூளை சரியில்லை... எதை எதையோ நினைச்சு அழவும் .. சிரிக்கவும் தான் சரி...' என் மனைவி சொல்கிறாள்......

நான் டேவிட்டின் மகனிடம் என்ன கேட்டேன் என்பதை ஞாபகப்படுத்திப் பார்க்கின்றேன். கேட்டது கூட என் ஞாபகத்திற்கு வர மறுக்கிறது. என் வெட்கத்தை மறந்து ... மீண்டும் நான் என்ன கேட்டேன் என்பதை டேவிட்டின் மகனிடமே கேட்கின்றேன்.

அவன் சிரித்துக் கொண்டே ... என் நிலையைப் புரிந்து கொண்டவன் போல... சொல்கிறான் ... 'என்ர அண்ணயைக் கேட்டிங்க......'

'ஆ......ஆ...... என்ன தம்பி...... சொல்லும்......'

'அது... அண்ணை இயக்கத்தில் சேர்ந்திட்டு... என்னை படிக்சச் சொல்லிச்சு......'

'பிறகு......' டேவிட்டின் மரணத்தின் பின் நாம் திருகோணமலை திரும்பிய பின் கடிதம் போட்டோம். பதில் இல்லை... பின்னர் பல தடவைகள் போன போதும் டேவிட் குடும்பத்தை சந்திக்க முடியவில்லை. அவர்கள் போன இடம் அப்பகுதி ஆக்களுக்கே தெரியவில்லை. என் கேள்வியின் குறி...... டேவிட்டின் மரணத்தின் பின் என்ன நடந்தது என்பதாகவே இருந்தது.

'பத்து நாட்களின் பின் ..... நாங்கள் மல்லாகத்துக்குப் போய் விட்டோம் அங்கே சின்னம்மா ஆக்கள் இருக்கினம்...... அங்க இருக்கேக்கதான்...... அண்ணை இயக்கத்துக்குப் போனார்... அண்ணை இயக்கத்தில சேர்ந்தது சின்னமாவுக்குப் பிடிக்கவில்லை. அம்மாவோட ஒரே சண்டை... 'உங்களால என்ர குடும்பமும் அழியப் போகுது...' விடிந்து பொழுது பட்டால் ஒரே கூக்குரல் தான்.

நானும் தங்கச்சியும் அம்மாவும் சீவியத்துக்கு ஒன்றும் இல்லை... அண்ணைதான் எங்கட நிலை தெரிந்து தன் கூட்டாளி மூலமாக...... சில்லாலையில் கொண்டு போய் விட்டார்...... அங்க அம்மா...... தோட்டத்துக்குப் போவா......

என்னை அண்ணை படிக்கச் சொல்வார். இஞ்ச...... இந்த மண்ணை மீட்க...... என்ர உயிர் போகட்டும்.

ஐயா அநியாயமாகச் செத்தார். நான்; இனி வாற பரம் பரை... இப்படி அப்பாவியாய் அநியாயமாக...... சாகக் கூடாது. அம்பது பேரை முடிச்சுப் போட்டுத்தான் போக வேண்டும். நீயாவது படி.... ஏன் தெரியுமா ? என்னைப் போல இந்த மண்ணுக்காகப் போராடி.... உயிரோட போராடுகிறவங்கள காப்பாற்ற வேண்டாமா?......

'என்ன... என்ன நான் நிறுத்துகிறேன். என் கை களுக்குள் இருந்த அந்த கனடா கடிதம்...... என் மகனின் அந்த இனிய நாட்களுக்கான அந்த கடிதம்......

'தம்பி... உன்ர அண்ணை...' நான்... என்னுள் ஒரு வேகம்...

'ஐயா...... அண்ணை இரண்டு வருசத்துக்கு முன்பு இந்தியன் ஆமியோட மோதினதில்... சுதுமலையில் செத் திட்டாராம்.

'அப்பா...... அம்மா......'...

'அம்மாவும் தங்கச்சியும்... தோட்டத்தில வேலை செய்யக்க ஷெல் விழுந்து அவையளும் சரி......

'என்ன... ஓ' வென்று அழ வேண்டும் போல இருந் தது. அழுதால் என் மனைவி என்னை பயித்தியக்கார னாக்கிப் போடுவாள். அழாமலும் இருக்க முடியவில்லை; கண்ணீர்தான்... என்... வேதனைகளை எல்லாம்......

என் மகனின் அந்த இனிய இன்பமான வாழ்வுநோக் கிய... கடிதம் 'ஐயா... இன்னும் வாசிற்றி திறக்கவில்லை. நான் இப்ப கடைசி வருடம் இன்ரவியூக்கு வந்திருக்கேன்...,, டேவிட்டின் மகன் சொல்கிறான்.

ஆனால் நானோ... என் நினைவுகள்......

என்னையும் டேவிட்டையும் ஒப்பிடத் தொடங்கியா விட்டேன்? தகப்பன் அநியாயமாக செத்து விட்டான். மகளும் மனைவியும் காலனை எதிர்பாராமலேயே மடிந்து விட்டனர். தமையன் மண்ணுக்காகப் போராடி வீரமரணம் எய்தி விட்டான்.

ஆனால் ... இவன் ஒருவன்...... வெறுமனே...... தனித்தவனாக...... இவர்கள் எல்லாம் ஏன் இந்த ஈழத்தில் வாழ்ந்தார்கள்?

இவர்களும் தங்கள் தங்கள் சுயலாபத்தை நினைத்து இருந்தால்... வெளிநாடு என்ற மாயப் போர்வைக்குள் மறைந்து வாழ்ந்து இருக்கலாமே! 'அகதிகள்' என்ற லேபலில் ஆனந்த வாழ்க்கை தேடி....என்னுள் இந்திய இராணுவத்தின் பெரிய டாங்கி ஒன்று குண்டுகளைத் தீர்த்த வண்ணம் வந்து கொண்டிருந்தது.

'என்னவாம் ஐயா......' என் மனைவி வருகிறாள். என் கைகள் அதில் உள்ள விரல்கள் உணர்வு கொண்டவைகள் ஆக மாறுகின்றன. துப்பாக்கியை இயக்க வேண்டிய அவைகள்... அந்த ... அந்த ... என் இனிய மகனின் கடைசி கடிதத்தை... கசக்குகின்றனவே ..... கசக்குகின்றனவே......

'என்னப்பா... கடிதத்தை கசக்கிறியளே... உங்களுக்கென்ன விசரோ... 'என் மனைவி மகனின் கடிதத்தை என்னிடம் இருந்து மீட்க போராடுகிறாள். ஆனால் .... நானோ......

அந்த டேவிட்டின்...... மகனை...... இதயசுத்தியுடன்... என் மகனாகவே பார்க்கின்றேன். எனக்கு இப்போது தான் எல்லாமே புரியத் தொடங்கி விட்டது. நான் எழுந்து நிற்க முற்படுகின்றேன் டேவிட்டின் மகனை ஒரு தரமாவது கட்டி அணைக்க வேண்டும் போல இருக்கின்றது.

# தீபாவளிப் பரிசு

என் மனைவி என்னை தன் சொற்களினால் தாக்கினாள். அந்த சொற்களின் பலமான தாக்குதல்களை என்னால் சமாளிக்க முடியவில்லை.

அவள் சொல்வதிலும் சில உண்மைகள் இருப்பதை என்னால் உணர முடிந்ததால்.... அந்த சொற்களுக்கு எதிராக எந்த கேடையத்தையும் என்னால் பிடிக்கமுடியவில்லை.

நான் ஏமாற்றப்பட்டு விட்டேனா? என்னுள் ஒரு கேள்வி மனைவியின் இந்த தாக்குதலால் என்னை சிந்திக்க வைத்தது. என் சிந்தனை - என் தோல்வியாக என் மனைவி நினைத்து இன்னும் அவளிடம் இருந்து சொற்கள் நீளும் அபாயம் நெருங்குவதை என்னால் உணர முடிந்த போது...

நானும் வாயினைத் திறந்தேன்.

சரியப்பா... சத்தம் போட்டு நாலு வீட்ட கூப்பிடாதை. நீ சொல்லுறதில உண்மை இருக்கா... இல்லையா என்று பார்க்கிறேன்...

'உண்மையாக இருந்தால் என்ன செய்வியள் .....'

'அதை பிறகு பார்ப்பம். இப்ப சத்தம் போடாதை...' என் கெஞ்சல் மனைவியின் வாயினை துண்டித்தது.

என் மனைவியிடம் ஒரு பழக்கம். ஏறினால் ஏறுவாள். இறங்கினால் இறங்கி விடுவாள். என் பக்கம் நியாயம் இருந்தாலும் அவள் சொல்வது சரியென நான் தலையாட்டினால் அவள் என் பக்கமே வந்துவிடுவாள்

'சரி... என்னை அந்த கிழவன் ஏமாற்றிப் போட்டுது... என்று வையன்...' நான் மேலும் மனைவியின் வாய் திற வாதபடி கடைசிக் கேடயத்தைப் பிடித்தேன்.

எப்படித்தான் என் மனைவியின் வாயினை நான் மூடி னாலும் என்னுள் 'நான் ஏமாற்றப்பட்டு விட்டேனா' என்ற கேள்வி பெரும் எரிமலையாய் வெடித்துச் சிதறத் தொடங்கி விட்டது என்னவோ உண்மைதான்.

என்னுள் எழுந்த அவதி ஆத்திரம்...

உண்மையை உடன் கண்டறிய வேண்டும் என்ற ஆவல்... என்னை தூண்டியது.

உடுத்த சாரனுடன் மேலில் சேட் ஏதும் போடாது என் அக்கா வீட்டுக்கு நடக்கத் தொடங்கினேன். என் வீட்டுக்கு மூன்றாவது வீடு என் அக்காவீடு.

அக்காவும், பிள்ளைகளும்.... ஆளுக்கொருவராய்.... வெளிநாடு போய் விட்டார்கள். அவர்களின் வீடு... வளவு... வரும் நன்மை, தீமைகள் எல்லாம் இப்போது என் தலையில்.

அக்காவின் வீடு... வளவு... எங்கள் வீட்டைவிட.... எங்கள் வளவை விட ஐந்து மடங்கு கூடியது. அவர்கள் வெளிநாடு போகும் போது அவர்களின் வீடுகளில் வாட கைக்கு இருந்தவர்கள் இப்போது இல்லை. எல்லோருமே புதியவர்கள். நான் தான் அவர்களை இருத்தினேன்.

மூகட்டுவரி, லைற்பில், வளவு வாய்க்கால் துப்பரவு; வேலி... தென்னை... மா... பலா... கொய்யா வருமா னங்கள்... எல்லால் என்னோடுதான்.

தம்பி... நீ எங்களுக்கு எதையும் அனுப்பாதை நீ.... இந்த வளவு... வீட்டை பார்த்துக் கொண்டால் போதும்' என்று சொல்லிவிட்டுப் போன அக்கா வெளிநாடு போய் தன் பிள்ளைகளின் உழைப்பில் நான் இன்னுமொரு புதிய வீடு கட்டும் அளவுக்கு பணத்தை அனுப்பி இருந்தார்.

போதா குறைக்கு என் மனைவி... பிள்ளைகளுக்கு விதம் விதமான வெளிநாட்டு உடுப்புகளும்; மின் உப கரணங்களும் அனுப்பி என்னை திக்குமுக்காட வைத்து விட்டார்.

ஆனால் இத்தனையும் செய்த அக்காவுக்காக அவ கேட்ட ஒரு நன்றி கடன் நான் செய்ய வேண்டி இருந்தது.

அது...

'தம்பி சின்னனில இருந்து குப்புசாமி அப்பு எங்களோட இருக்குது இந்த தகர கொட்டிலில இருக்கட்டும். ஏதும் தேவைப்பட்டால் கொடு...'

என்ற அக்காவின் மூன்று வருடத்துக்கு முந்திய வார்த்தைகள் என் நினைவை தொட்டதாலும் ...

தீபாவளியும் வந்ததாலும் இரண்டையும் சாட்டாக வைத்து... அக்கா குறிப்பிட்ட குப்புசாமி என்ற அந்த விசுவாசமான தொழிலாளிக்கு என்னவோ நான் இரங்கியது என்னமோ உண்மைதான்.

ஆனால்... நான் இரங்கியது எவ்வளவு தவறானது என்பதை என் மனைவி சுட்டிக்காட்டி பத்திரகாளி வேடம் போட்ட போது... நான் சும்மா இருக்க முடியுமா?

குப்புசாமி அப்புவிடம் உண்மையை கேட்க வேண்டும். மூன்று நாளைக்கு முன்பாக இரண்டு சாரனும், இரண்டு

துவாய்களும்... நான் குப்புசாமி அப்புவிடம் கொடுத்திருந் தேன்.

'அப்பு... நீ இந்த ஊத்தைகளை கழட்டி விட்டு... தீபாவளி நாத்தில ஆவது புதிசுகளை கட்ட வேண்டும். உனக்கு எவ்வளவு தான் சொன்னாலும்... நீ.. உன் நிறத்தையோ கோலத்தையோ மாற்ற மாட்டன் என் கிறாய். வருசா வருசம் என்ன பாடுபடுத்தி இதுகளை உடுக்க வைக்கிறன்... இந்த முறையும் என்னை போட்டு கஷ்டப்படுத்தாதை. என்ன... நான் சொல்லுறது...'

என் வார்த்தைகளை சிரிப்போடு தன் வெள்ளை வெளிரென்ற நீண்ட தாடியை உருவி இரண்டு கைகளி னாலும் வாங்கிக் கொண்ட குப்புசாமி அப்பு...

'என்ர மகராசன்... நான் தன்னந் தனியனா இருக்க வேண்டாம் என்று என்ர மனைவி பிள்ளைகள் மாத்தளை யில் இருந்து எத்தனை கடுதாசிகள் எழுதிச்சுகள். நான் ஏன் போகல்ல தெரியுமா? ஒன்று குளிரு எனக்கு ஒத்து வராது... மற்றது நீ... என்ர மகாராசனால தான் நான் போகல்ல... நான் செத்தாலும் இந்த சோணேச பூமியில தான் சாக விரும்புகிறேன்.

அடிக்கு ஒரு லிங்கம் உள்ள மண்ணு தம்பி இது. 'தம்பி... உனக்கு ஒரு கதை தெரியுமா?... முந்தி ஒரு சாமி இந்தி யாவில இருந்து கப்பலால வந்து வில்லூன்றி கடற்கரை யில இறங்கினாராம். கடற்கரை மண்ணை தொட்டு கும் பிட்ட சாமி... அப்படியே நடு நடுங்கிப் போயிட்டாராம். அவரோட கூட வந்தவர்கள் 'ஏன் சாமி என்ன' என்று வினாவினார்கள். அந்த சாமி ஏதும் பேசாமல் நாலு அடி எடுத்து வைத்தாராம். பின்னர் அப்படியே திரும்பி... வந்தவர்களிடம் நான் திரும்பவும் கப்பலுக்கு போக வேண் டும். உடன் ஆவன செய்யுங்கள் என்றாராம். கூட வந்த

வர்களுக்கு ஒரே வியப்பு... சாமியின் விருப்பம் நிறைவேற்றப்பட்டு விட்டதும்.. கப்பலில இருந்த ஒருத்தர் சாமியிடம் அணுகி ஏன் சாமி நீங்க திருக்கோணமலைக்கு போகாம திரும்பிட்டிங்க ஏன் சாமி... என்றாராம். அதற்கு அந்த சாமி... 'ஐயா... நான் குனிந்து மண்ணை தொட்ட போது... சிவலிங்கத்தின் மேல் பாகம் தான் என் கைக்கு பட்டதைய்யா. நாலு அடி எடுத்து வைத்த போது.. வயிறு குமட்டி ஒங்காளம் வாற மாதிரி இருந்திச்சு... கக்க... என்னால முடியல... பார்த்த இடமெல்லாம்... சிவலிங்கம் ஐயா... அது அடிக்கொரு லிங்கம் உள்ள மண் அய்யா... எங்கட கால் கூட அதில் வைக்கிறது குற்றம் ஐயா என்றாராம் சாமி. இந்த மண்ணை விட்டுட்டு... உன்னை விட்டுட்டு போக மாட்டன் தம்பி...'

என்னுடைய அந்த சர்வ சாதாரன தீபாவளி பரிசுக்கு திருகோணமலை மண்ணை புகழ்ந்து என்னையும் புகழ்ந்து பேசிய அந்த எண்பதை தாண்டும அந்த கிழவர் என்னிடம் பொய் சொல்வாரா? அப்படியாயின் என் மனைவி சொன்னது பொய்யா?

தெருவுக்கு போன போது... நண்பன் நவசோதிராசா முன் பக்கமாக சைக்கிளில் வந்து கொண்டிருந்தான்.

'எப்படி அண்ணன் தீபாவளி...' எங்கள் வீட்டுக்கு முன்னால் உள்ள கடையில் நின்று கொண்டிருந்த எங்கள் வீடு ஒன்றில் இருக்கும் குமார் என்னிடம் தன் முன் வரிசை பற்களை காட்டி சிரித்தபடி கேட்டான்.

நானும் என் பற்களை காட்டிய போது நண்பன் நவசோதிராசா சைக்களில் இருந்து இறங்கவும் சரியாக இருந்தது.

'மச்சான் உன்னட்டதான் வந்தனான். வா... ஒரு கதை.. போன செவ்வாய் சொன்னேனே... அந்த கதையின் மறு பாதியும் முடிவும்...'

நான் போன செவ்வாய் கிழமையையும்... நண்பன் சொன்ன கதையையும் நினைவுக்கு கொண்டு வரப் பார்த்தேன். ஞாபகத்துக்கு வரவில்லை 'மச்சான்... வா... நான் ஒரு ஆளை... அக்கா வீட்ட பார்க்கப் போறேன்... வா... அங்க கதைக்கலாம்...'

என்னைத் தொடர்ந்து நண்பன் சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தான். நானும் அக்கா வீட்டுக்கு நடந்தேன்.

என்ன சுந்தா பிரச்சினை... அக்கா வீட்ட.. வாடகைக்கு இருக்கிறவையள் ஏதும் பிரச்சினையே! இல்லாட்டி பெய்த மழையால.... தண்ணி போறதில. வெள்ளப் பிரச்சினையோ...'

என் பிரச்சினைகள் எல்லாம் நவசோதிராசா தெரிந்தவன். அது மட்டும் அல்ல என் பிரச்சினைகள் பலதுக்கும் தீர்வு சொன்னவன்... அவனிடம் இன்று நான் என் மனைவியுடன் போட்ட அந்த குட்டி யுத்தமும் .. அதன் உண்மையறிய போறதையும்... கொட்டிவிட்டால்...

'நவம் உன் கதையை பிறகு பார்க்கலாம். நான் போடும் பிரச்சினைக்கு நீ தீர்வு சொல்...'

'சுந்தா... உன்னிடம் என்ன அப்படி பிரச்சினை சாதாரண சம்பவங்களை கூட நீ பெரிதாக நினைச்சு... அதை பெரிதாக்கி பெரிசாக்குகிறாய்.... மச்சான்.... உன்ரது சிம்பிள்...

என்ன...! எனக்கு ஆத்திரம் வந்தது. மடையன் நான் இந்த காலையில் மனைவியோட போட்ட யுத்தத்துக்கு காரணமான சம்பவத்தை சர்வ சாதாரணம் என்கிறானே! நான் என் மனைவி போல மாறத் தொடங்கினேன். வார்த்தைகளை கொட்டத் தொடங்கினேன்.

'எங்கட குப்புசாமி கிழவர் இருக்கிறாரே! அவருக்கு தீபாவளிக்கென்று சாரன் - துவாய் வாங்கிக் கொடுத்தேன். அவர் என்னடா என்றால் படிச்சு .. படிச்சு... சொல்லியும்... அதை காசுக்கு விற்றுப் போட்டுது இதை நான் நம்பவில்லை. என்ர மனிசிதான் இதை சொன்னது. அதைத்தான் நான் கேட்கப் போறன். இது சரியோ மச்சான்... இந்த முறை அக்கா வெளிநாட்டில இருந்து அனுப்பின துணி வகைகள் இருக்குது என்று தீபாவளிக்கு எங்களுக்கு எந்த உடுப்பும் எடுக்கவில்லை. அது.... மனிசி.... பிள்ளைகளுக்கு என்மேல் நிரம்பின கோபம்... எங்களுக்கு இல்லாத தீபாவளி அந்த பிச்சைக்கார கிழவனுக்கோ.... என்று என் மனைவி பிள்ளைகள் என்னோடு பாயுதுகள். மூத்தவள் லிசா.... கடைசியாள் பிரியந்தி.... மகன் சிவ கணேஸ் .. நான் இவர்கள் மத்தியிம் படும் பாடு? கிழவர் உடுப்புகளை விற்ற சங்கதியை கடைசியாள் பிரியந்தி அறிந்து தாயிடம் சொல்ல மூத்தது லிசா அதை துப்பறிந்து உண்மையறிந்து தாயிடம் ஒத.... நான் இன்று காலை... படும் பாடு...'

நான் என்னிடம் உள்ளதை அள்ளிக் கொட்டிக் கொண்டு நடக்க.... நவம் சிரிப்பது மட்டும் என் காதுகளில்...

'ஏன் நவம் சிரிக்கிறாய்' - நான் பாய்ந்தேன், சிரிக்காமல் அழவோ சொல்கின்றாய்...'

நான் அக்கா வீட்டு பெரிய கம்பி கதவை திறந்து கொண்டு உள்ளே நடந்தேன்.

குப்புசாமி கிழவர் விறகு கொத்திக் கொண்டிருந்தார்.

'சுந்தா... மனிசனோட இப்ப பாய்ந்து விழாதை.... வா... அந்த மாமரத்தடிக்கு என்ர கதையை கேள் பிறகு...

அவரைப் பார்ப்போம்....' நவம் என்னை இழுத்துக் கொண்டு கறுப்புக் கொழும்பான் மாமரத்தடிக்கு என்னை...

மாமரத்தில் சைக்கிளை சாத்தி விட்டு... நான் அமர்ந் திருந்த மரக்குற்றிக்கு வந்தான் நவம்.

என் குறி... விறகு பிளந்து கொண்டிருந்த குப்புசாமி கிழவரின் மேலே இருந்தது. வேலையை முடிச்சுட்டு வரட் டும். என் மனம் கறுவிக் கொண்டிருந்தது.

'சுந்தா... பெரியகடை... போன செவ்வாய்... சோனக வாடி அந்தோனியார் கோவிலடி.... நான் ஒருத்தியைக் காட்டி...' நவம் தந்தி மொழி பேசினான்:

எனக்கு அவனின் அந்த தந்தி மொழி... நல்ல ஞாப கத்துக்கு வந்து விட்டது... நான் என் பிரச்சினை மறந்து சிரித்துக் கொண்டேன்.

'அப்ப... என்ன... மாப்பிள்ளை... வந்திட்டாரா... நான் சத்தமாக நவத்திடம் கேட்டேன்.

'டேய் சுந்தா... சத்தம் போட்டு பேசாதை .. விஷ யத்தை கவனமாக கேள். உன்ர நக்கல் சிரிப்பெல்லாம் எனக்குப் பிடிக்காது...' என்று கூறி விட்டு தன் கதையை தொடர்ந்தான் நவம்.

'சுந்தா... அப்ப... தீபாவளிக்கு வெளிநாட்டுல மாப் பிள்ளை வரப் போரார் என்று .. நல்ல செலவு செல்வ ராணிக்கு...... எனாமல் பெயின்ற் வீட்டு சுவர்களுக்கு அடித்து... நல்ல 'கிக்' அவர்கள் வீடு... புதுச் சாடிகள்... பூமரங்கள்... அப்பப்பா... மாகாணசபையில நாங்கள் ஒன் றாக வேலை செய்யிறதும்... எங்கட பகுடிகளும் உனக்கு

தெரியும் தானே! 'கஸ்பெண்ற்' வரப்போறார் பிறகென்ன... செல்வராணியுன் காட்டில் இனி நல்ல மழைதான் என்றால் அவ முகத்தைப் பார்க்க வேணும்...'

என்ன நாணம்... அவவின் முக அழகுக்கும்... நிறத்துக்கும் சே... எங்கட ஒப்பிசில நாங்க இந்த தீபாவளியை சாட்டி அவவை படுத்துகிற பாடு......

'சரி... சரி... இப்ப அதுக்கென்ன... அதெல்லாம்... தெரிந்தது தானே. இப்ப என்ன தீபாவளிக்கு வந்திட்டாரா அவ புருசன்?'

''டேய் சுந்தா... நீ ஒரு அவசர குடுக்கை... சொல்றன் கேள்... நேற்று செல்வராணிக்கு லீவு. ஆபிஸ் விஷயமாக எங்கட பெரியவர் அவவீட்டுக்கு போகவேண்டி வந்தது.

'அப்ப... சொல்லு மச்சான் ' நான் தூண்டினேன்.

'என்னத்தை சொல்லுவது... சந்தர்ப்பம்... சூழல்... எங்கட நக்கல் கதை... பேச்சு... எல்லாம்... தீபாவளிக்கு அவ புருசன் வர முந்தியே அவ அவரை...'

'என்ன...' நான் பெரும் மூச்சொன்றை விட்டேன்.

'என்ன கொடுமையடா இது... உனக்கு இது நல்லா இருக்காடா...' என்றேன் அருவருப்புடன்.

அவன் பலங்கொண்ட மட்டும் சிரித்தான்.

'இதில எந்த பாவமும் இல்லை...' அவன் அதை சின்ன விஷயமாக சொன்னான்.

அப்போது... 'என்ண மகராசன்...' கோடாரியை தூக்கிக் கொண்டு குப்புசாமி கிழவர் எங்கள் மர நிழலுக்கு வந்தார்.

இப்போது... நவம் சொன்ன கதையும்... அதன் தாக்கமும் என்னை அரித்துக் கொண்டிருந்தது. குப்புசாமியிடம் எதை கேட்க வேண்டும் என்று வந்தேனோ... அது...

'மகராசன்... நீய் காலையில வீட்ட சண்டை போட்டது எனக்கு தெரியும். தேத்தண்ணி குடிக்கலாம் என்று உங்கட வீட்டுக்கு வந்தேன். அப்ப நீ போட்ட சண்டை என் காதில விழுந்தது...'

நான் பேசவில்லை. தலையை மட்டும் ஆட்டிக் கொண்டேன். தீபாவளிக்கு கணவர் வருவார் என ஒரு மாதத்துக்கு முந்தியே ஆயத்தமாகிய ஒரு பெண்.. இந்த இரண்டு நாட்களுக்குள்... கெடுவது என்றால்... அதுவும் தன்மேல் அதிகாரியிடம்...

அந்த ஆண் பெண் உறவு.. அதில்...

'மகராசன்... எனக்கும் வருத்தம் மகராசன். நீ தந்த துணிமணிகள் கட்டவில்லை என்று மகராசன். என்னமோ நான் புதுச கட்டி பழக்கம் இல்லாதவன் பாரு... என்ர சீவியத்தில நான் ஒருக்காலும் புதுசு கட்டல... உன்ர விருப்பத்தால் தான் போன வருஷம் நீய் பார்க்க மட்டும் உடுத்தன். மகராசன் பாரு...'

'என்ன இன்ப சுமைகளை எப்படி எப்படி ஏந்திக் கொண்டு அந்த வெளிநாட்டு கணவன் வருவானோஎன்று... ஒரு தரம் யோசித்தாளா அந்தப் பெண்?' இத்தனை நாளும் காத்திருந்து... காத்திருந்து .. சீ... இந்த அற்ப... ஆசைக்காக தன்னையே தோற்றுப்போன அந்தப் பெண்... எனக்குள் அந்த பெண்ணே நிறைந்து கொண்டிருந்தாள் அலங்கோலமாக.

'என்ன மகராசன்... என்ன யோசிக்கிறாய்... உன்ர துணிங்கள காசுக்கு வித்தன். அதை செலவழிக்கல...

உன்ர சின்னவளுக்கும்... மகனுக்கும் தீபாவளிக்கு சட்டை துணிமனிங்க வாங்க போறன். இவ்வளவு நாளும் நீங்க எனக்கு தந்தீங்க. மகராசன் இந்த கிழவன் போற கட்டை. இதுக்கு ஏன் புதுசு? வாழப்போற பிள்ளைகள் நீங்க... நீங்க உடுத்து அநுபவிக்க வேண்டும். 'இந்த தீபா வளி... உங்க வீட்டில என்ர தீபாவளி ஆக இருக்க வேண் டும்... மகராசன்... நான் சொல்லுவது... உன்ர காதில... மகராசன் '

அந்தப் பெண்... தன்னை தோற்றுப் போன அந்தப் பெண்

அந்தக் கிழவன்... என்னை வென்று விட்ட அந்தக் கிழவன்.

அந்த தாடிக் கிழவர் எதை எதையோ சொல்லிக் கொண்டு இருந்தார்.

என்னை அறியாமல் என் கண்களில்...... .....

அந்த கண்ணீரில் அந்தக் கிழவர்.........

ஆனந்தமாக மூழ்கின்ற......... அந்தக் கிழவரை......

ஆசை, ஆசையாக பார்க்கின்றேன்.

முத்துக்குமரன்

# ஆலயத்தில்....

எனக்கு கோபம் கோபமாக வந்தது. கண்டறியாத இந்த தெய்வங்களால் ஆயிரத்து எட்டு விரதங்களால் மனிதன் பட்டினி கிடந்து சாக வேண்டி இருக்கின்றதே என நினைக்கின்றபோது கோபமா அதைவிட கொஞ்சம் தாக்கமான சொற்களைத்தான் தேட வேண்டி இருக்கின்றது.

'என்னப்பா... நீங்கள் சாமி... தெய்வம்...' இல்லையென்று திரியிரியள்... அதற்கு பலநூறு காரணங்களைச் சொல்லுறீங்கள். நான் உங்களோடு சண்டைக்கு வரவில்லை. நீங்கள் தெய்வங்களை நம்ப வேண்டாம் என்னையாவது நம்புங்கள்...

எனக்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு என்னை நம்பி வந்தவள் பேச்சுக்கு கொஞ்சம் தலை சாய்த்தேன்.

'சரிசொல்லு... உனக்காக கேக்கிறன். கடவுள்களுக்காக கேட்கவில்லை' என் கோபம் சிறிது அடங்கியது. சாதாரண நிலைக்கு வந்துவிட்டேன்.

என் முகத்தில் தோன்றிய அந்த மாற்றம் என் மனைவியை பேச தூண்டியது. என்னோடு பன்னிரண்டு வருடங்கள் ஒன்றாக கழித்தவளுக்கு என்முக பாவம்.. பேச்சின் தன்மை என்னை இனங்கான வேறு என்ன அவளுக்குத் தேவை?

'அப்பா... இந்த முறை முன்னைப்போல கந்தசஷ்டி விரதம் பிடிக்கப் போறன். போனமுறை என்னை போட்டு

வதைத்த மாதிரி... எனக்காக... மச்சம் ஆவது சாப்பிடா மல் இருந்தால் போதும்...'

என் மனைவியை நிமிர்ந்து பார்த்தேன்.

எனக்கு என்னையறியாமல் சிரிப்பு வந்தது. இனி மேல் இவளை திருத்தி எடுக்கிறதெண்டால்... கோபப் பட்டோ... கை காலை நீட்டியோ... முடியாது.

அதற்கு வழி... என் மூளை வேகமாக வேலை செய் தது. மீண்டும் சிரித்துக் கொண்டேன்.

என் சிரிப்பின் தாக்கம்; என் கோபத்தை விட எவ் வளவு பயங்கரமானதென்பது யாருக்கும் தெரியாத ஒரு ரகசியம்.

'மச்சான் உன்னை இணங்காணுறது என்றால் அந்த முத்துக்குமரனால் கூட முடியாது' என்று என் நண்பன் சோதி சொன்னதும்,

'அந்த ஆறுமுகன் போல... உங்களுக்கும் ஆறு தலை கள் ஆறுவித குணங்கள் என்னால் முடியாது போ...' என்று கலியாணம் முடித்த புதிதில் என் மனைவி சொன்னதும்......

'சிரிக்காதிங்க சிரிக்காதிங்க...' என் மனைவி சிறிது சத்தமாகவே சொன்னாள்.

'என்னை ஏசுங்கள்... என்னை அடியுங்கள் என்னை உதையுங்கள். நீங்கள் சிரிக்க வேண்டாம்... சிரிக்க வேண் டாம்...' மீண்டும்... மீண்டும்... அவள் குரல் என் சிரிப்பை அடக்குவது போல பலமாக இருந்தது.

கதிரையில் இருந்த எனக்கு .. அவளை எட்டி உதைக்க வேண்டும்போல் இருந்தது... என் உதை அவள் மேல்

விழாமல் போனமாதம் கிடைத்த போனஸ் பணத்தில் வீட்டுக்குள் புகுந்து சத்தம் போட்ட றேடியோ மேல் விழுந்தது. றேடியோ கீழே விழுந்து நொறுங்கியது... என் கால்களுக்கு மேலும் உசாரைத் தந்தது. என் கண்களில் பட்ட அந்த சாமி தெய்வங்களின் படங்களும்... குத்துவிளக்குகளும் என் அசுர வேகத்துக்கு இடங்கொடாமல் அய்யோ என்று அழுது குளறின.

நான் வேகமாக வீட்டைவிட்டு வெளியேறினேன். இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்ற வைராக்கியம் என் மனதில் தோன்றியது. ''சாராய நாதனை'' நான் தேடினேன்.

கால்மணி நேரத்தில் சாராய நாதன் என்னோடு இணைந்து கொண்டான். கைக்களை வேகமாக மிதித்தேன். முத்துக்குமாரசுவாமி கோவிலை அண்மித்தபோது நண்பன் சோதியின் நினைவு வந்தது. அவனும் கோடான கோடி பக்த கோடிகளில் ஒருவன் தான் நாளாந்தம் முத்துக் குமரனை தரிசித்ததால் தனது வாழ்வில் ஏற்பட்ட 'மகிழ்ச்சிகளை' பல தடவைகள் சொல்லி இருக்கின்றான்.

நான் அவனை எள்ளி நகையாடினேன். வானமண்டலத்திலும் மண்ணுக்குள்ளும் - ஆழ் கடலுக்குள்ளும் புகுந்து விளையாடுகின்றான் வெளிநாட்டான். நாம் கோவில் கட்டி.... கும்பாபிஷேகம் செய்து.... நேரத்தை வீணாக்குகின்றோம். சிறுபிள்ளை விளையாட்டு விளையாடுகின்றோம். சொர்கத்திற்கும், நரகத்திற்கும் வேண்டாத கடவுள்களைத் தேடி.... தேடி.... முத்துக்குமாரசுவாமி கோவில் வலது பக்க வீதியில் திருமுருகானந்த வாசிகசாலை முன்றலில் நான் சோதியுடன் நிமிர்ந்து நின்று பேசியவைகள் எல்லாம்...

முத்துக்குமாரசுவாமி கோவில் வீதிக்குள் என் சைக்களை திருப்பினேன். சைக்களை என்னால் மிதிக்க முடியவில்லை. சாராய நாதனின் துணை இருந்தும்... என்னால் முடியவே முடியவில்லை.

சைக்களில் இருந்து இறங்க மூற்பட்டேன். கால்களை நிலத்தில் ஊன்ற முடியவில்லை. கால்கள் பூமிக்குள் போவது போன்ற பிரமை என்னையறியாமல் ஏதோவொரு மயக்கம் என்னை......

நான் கண்களை விழித்தபோது.... சோதியின் வீட்டு பலகை கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தேன். பக்கத்தில் என் மனைவியும் மூத்த புதல்வனும் அமர்ந்திருந்தார்கள்.

நான் மனைவியுடன் பிடித்த சண்டை......

உடைத்த பொருட்களின் எண்ணிக்கை......

எல்லாம் என் நினைவில் ஊற்றாக ஊறின.

வேகமாக எழுந்து கொண்டேன்.

'இந்த விரதம் இருந்து என்னை பட்டினி போடுறதுகளை... இனி மறந்து போட வேணும்.. இல்லாட்டி.... நீ கோவிலோட போய் இருக்க வேண்டி வரும்......'

என் ஆவேசம்... மிருகத்தனம்... இன்னும் அடங்கவில்லை. கடவுள்.... கோவில்.... விரதம்.... இத்தியாதி வார்த்தைகள் எழும்போது நான் மிருகமாகவே மாறி விடுகின்றேன்.

'தங்கச்சி கடவுளைவிட.... அந்த விரதங்களை விட.... முதலில் உன் கணவனை நேசி. அவன் மனம் கோணாமல் நட... அதுவே நீ விரதம் இருந்ததிற்கு சமமாகும்' சோதி என் மனைவியிடம் சொன்னான்.

'டேய்... நீ எனக்கு புத்தி சொல். உன் பண்டாரித் தனமான சொல்லை என் மனைவியிடம் சொல்ல வேண்டாம்...' நான் சீறி எழுந்தேன்.

வேகமாக, சோதியின் வீட்டில் இருந்து வெளியேறினேன். கோவில் இடது பக்க வீதியால் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தேன்.

'என்ன தம்பி' வழியில் வந்த 'இளைஞர் அருள்நெறி மன்ற' தொண்டர் ஐயாவை ஏறிட்டுப் பார்த்தேன்.

என்னை ''சமய விஷயங்களில்'' ஈர்க்க என்ன பாடு பட்டார். நான் அவரை தூசித்ததுதான் மிச்சம்.

தொண்டர் ஐயா மட்டுமல்ல... முருகானந்த சங்க பொறுப்பாளராக இருந்த சபாரெத்தினம் என்னுடன் எத்தனை தடவைகள் வாதிட்டு இருப்பார்.

நான் ''கடவுள்'' விஷயத்தில் கொஞ்சம் இறுக்கமாகவே இருந்தேன். மூடநம்பிக்கைகளை வளர்க்கும் வர்க்கத்தை அழித்து புதிய சமுதாயம் ஒன்று உருவாக்க வேண்டும் என கனவு கண்டேன். இதற்கு என் மனைவி பிள்ளைகளே விரோதிகளாக இருக்கும் போது...

நான் எதிர்பார்த்த அந்த ''கந்தஷட்டி'' நாளும் வந்தது. எனக்கு பசி எடுக்க ஆரம்பித்தது. என் விரோதிகளான என் மனைவி பிள்ளைகளை... பலி தீர்க்கும் வஞ்சம் என்னுள் உருவானது.

என் மனைவி அந்த கந்தஷட்டி நாட்களில் என்னை மிஞ்சி தன் காரியங்களில் ஈடுபடுவாள் என எதிர்பார்த்தேன். என் எண்ணங்கள் வீணாயின. நான் எதிர்பார்க்காமலேயே...

அந்த நாட்களில் மாமிச உணவுகளை செய்தாள். என் வயிற்றினை குளிரவைத்தாள். தானும் நன்றாக சாப்பிட்டாள் எனக்கு இது அதிசயமாகவே இருந்தது.

---

''சாமி தெய்வத்தை விட கண்கண்ட தெய்வம் உன் புருஷனடி... அவன் தேவை தேவன் தேவையடி கணவனை மதியாதவள் அவன் சொல்லை கேளாதவள் தேவடியாளிலும் மோசமானவளடி''

என் வார்த்தையெல்லாம் என்னையே சுற்றி சுற்றி வந்தன. என் மனைவி திருந்திவிட்டாளா?

மூட பழக்க வழக்கத்தில் மூடங்கிக் கிடக்கும் அறியாமையில் மூழ்கும் முண்டங்களை......

நான் சிரித்துக்கொண்டேன். என் பாதைக்கு என் மனைவியே வந்துவிட்டாள். என் வெற்றி இது முதல் வெற்றி இதை என்னை முட்டாள் ஆக்க முயன்ற நண்பன் சோதியிடம் சொல்லி சொல்லி

'கந்தஷட்டி' நாட்கள் நகரத் தொடங்கின அடுத்த தேவி வீட்டில் - பக்கத்து பேரின்பம் அக்கா வீட்டில்... சுப்பிரமணியம் ரீச்சர் வீட்டில்... ''கந்தசஷ்ட்டி'' கவச ஆராதனைகள்... றேடியோவில்... ரி. வி. யில்... என் மனைவி அசையவே இல்லை 'கந்தசஷ்ட்டி' முடிந்து விட்டது.

ஆனால் ஆனால்...........

அந்த நாட்களை என்னால்... இனி ஒரு போதும் என்னால் மறக்கவே முடியாது.

என்னிடம் தோன்றிய அந்த அகந்தை... கடவுளை விமர்சித்ததனம் மனைவியை படுத்திய பாடுகள்... என்னை சூழ்ந்தேவிட்டனவா?

ஆம்

என் ஒவ்வொரு மூட்டுக்களும்... மாறி மாறி வீங்கத் தொடங்கின... கைகளை... கால்களை...அசைக்கமுடியாத; வேதனைகள் மூட்டுவாதம்... என்னுள் புகுந்துகொண்டது.

என் பண பலம்..

யாழ்ப்பாணம்... கண்டி .. கொழும்பு...

என் வேதனைகளுடன்... என் மனைவி பிள்ளைகள் நான் அழுதேன்...

என்னால் அழமட்டுமே முடிந்தது.

''மூட்டு வாதத்தின் தாக்கம்...... எந்தவொரு மனிதனாலும் தாங்க முடியாததொன்று. வந்தால் தான் புரியும்.

என் மனைவி... என் பிள்ளைகள்...

என் நோய் தீர்க்க அவர்கள் பட்ட பாடுகள்! முடியாதென்ற நிலையில் என் மனைவி என் அருகில் வந்தாள். என்னிடம் ஏதோ பேச பயப்படுபவள் போல அவள் இருந்தாள். நான் அழுதேன் கையெடுத்து கும்பிட்டேன். அவள் பேசினாள். கடைசியாக அந்த பிரபல்யம் இல்லாத அந்த டாக்டரிடம் காட்டுவோம் என்றாள். அந்த டாக்டர் ''ஆளைக் கொன்றவர்'' என்று யாரோ பயமுறுத்தினார்கள்.

நான் அந்த டாக்டரிடமே போவோம் என்றேன். நன்றாக சோதித்த அந்த டாக்டர்... அவர்மேல் என் நோய்களின் பாரத்தை போட்டேன்.

நாட்கள் நகர்ந்தன.

''மூட்டு வாதம்'' என்னை விலகத் தொடங்கியது.

நான் என் மனைவியின் காலில்......

அவள்.. ...

''அப்பா நீங்கள் இனியாவது என்னை நம்புங்கள் என்னையாவது நம்புவீர்களா'' என்றாள் விம்மலுடன். 'உன்னை மட்டுமல்ல நீ நம்பும்... முத்துக்குமரனையும் நம்புகிறேன்'' என்றேன் அழுகையுடன்.

இன்னும் அந்த பிரபலயம் இல்லாத டாக்டர்...... என் மூட்டு வாதம் விலகிய விதம்... என்னுள் ''இரும்பான'' நம்பிக்கையொன்று ஏற்பட்டே விட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளாக நாம் ''கந்தசஷ்டி'' விரதத்தினை பிடிக்கின்றோம். எமது வாழ்வில் ஏற்பட்ட அந்த இருள்......

அதோ 'முத்துக்குமரன்' மணியோசை கேட்கின்றதே!

# விடியப் போகின்றது....

பிரியந்தி வந்து நின்றாள். அன்று மிக அழகாக உடுத்தியிருந்தாள். அவளின் முகத்தில் புன்னகை படர்ந்திருந்தது.

பிரியந்தி வந்து நிற்கவும்.... மிக அழகாக உடுத்தியிருக்கவும்.... முகத்தில் புன்னகை படர்ந்திருக்கவும்.... அந்தக் காரணங்கள் அந்தக் காரணங்கள் சில நிமிடங்களில் தெரியத்தானே போகின்றன!

''பிரியா இன்று நீ மிகவும் அழகாக இருக்கின்றாய்'' மூன்று மாதங்களுக்கு முன்பு வாங்கி இருந்த சிங்கர் பிரிச்சை துடைத்துக் கொண்டிருந்த பிரதீசன் சத்தம் போட்டுச் சொன்னான்.

பிரதீசன், பிரியந்தியின் அண்ணன். இரண்டு வயதுகள் முந்தியவன். பார்ப்பதற்கு ''கமலஹாசன் போல இருப்பான்'' பிரியந்தியை விட நிறத்தில் கூடியவன். செக்கச் சிவந்திருப்பான். சுண்டினால் இரத்தச் சிவப்பாகும் நிறம் அவனுடையது.

''காகம் கறுப்பு விடியக் கத்தும். காகம் கறுப்பு விடியக் கத்தும் என நாள் தவறாது... பிரியந்தியைக் கேலி செய்து... பிரியந்தியின் பேச்சுக்களையும்... ஏச்சுக்களையும் வாங்கி மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொள்பவன் அவனே... அன்று...

பிரியந்தி மிக அழகாக இருக்கின்றாய். என்று சொல்வதென்றால்... பிரியந்தி தன் அண்ணாவை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டாள்.

அன்று அவளுக்கு பிரதீசனை ஏச மனம் வரவில்லை. அவளுக்குள் தன் அண்ணனே தன்னை அழகி என்று சொல்லி விட்டானே என்பதில் பெருமை.

பிரியந்தியின் மூத்த தமக்கைகள் இருவர். மூத்தவள் பிரதிபா மற்றவள் சர்மிளா. இருவரும் பிரதீசனை விட அழகானவர்கள்.

வைத்த கண்ணை மீட்க முடியாத பேரழகிகள். இருவரும் திருமணம் செய்து கனடா பிரான்ஸ் என்று போய் விட்டவர்கள்.

மூத்தவள் பிரதீபா அனுப்பி வைத்த அந்த ஜீன்ஸ்... அதைத்தான் பிரியந்தி போட்டிருந்தாள். பிரியந்தியின் மா நிறத்திற்கும்... உடல் வாகிற்கும்... அந்த ஜீன்சின் சரியான மெசமென்ற் கட்டிங்கிற்கும் ..

பிரியந்தியின் இன்றைய தோற்றம் உண்மையில் தமக்கைகள் இருவரையும் தூக்கி எறிந்தது போலவே இருந்தது.

உரலில் செங்கட்டிகளைப் போட்டு இடித்து மாவாக்கிக் கொண்டிருந்த பிரியந்தியின் தங்கை பிருந்தா... அண்ணன் பிரதீசனின் குரல்கேட்டு உலக்கையை வீட்டு அரைக்குந்தோடு சாத்திவிட்டு... தன் தமக்கையை எட்டிப் பார்த்தாள்.

''பிரியந்தி அக்கா உண்மையில் அழகானவள்தான்...'' என அவளின் மனமும் ஒப்புக் கொள்ளவே செய்தது.

கோலம் போடுவதில் பிரியந்தி கெட்டிக்காரி. இரண்டு நாட்கள் கழித்துவர இருக்கும் ''தைப் பொங்கலுக்கு'' கோலம் போடுவதற்காக... செங்கட்டிகளை இடித்து

மாவாக்கிக் கொண்டிருந்த பிருந்தா... அரைமணி நேரத்திற்கு முன்பு பிரியந்தி சொல்லித் தந்திருந்த அந்த புதிய கோலமுடன்...

தன் தமக்கை பிரியந்தியின் அழகான தோற்ற கோல முடன் சிறிது நேரம் ஒன்றித்தே விட்டாள்.

''என்னடா பார்க்கிறாய்...'' பிரியந்தி தன் தங்கை பிருந்தாவை சுயநினைவுக்கு கொண்டு வந்தாள்.

''அக்கா, அண்ணா சொல்வதைப் போல... நீ இன்று மிகவும் அழகாக இருக்கின்றாய்...''

பிரியந்தி இரட்டைச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு.... தனக்குள்.... தன் அண்ணா பாடும் ''காகம் கறுப்பு... விடியக் கத்தும்...'' என்னும் பாடலை தனக் குள் பாடிப் பார்த்தாள்.

''இத்தனை நாட்களும் என் அழகு இவர்களுக்குத் தெரியவில்லை.

இன்று எப்படித் தெரிகின்றது? தனக்குள் இப்படி ஒரு கேள்வியையும் கேட்டுப் பார்த்தாள்.

அது......, அது .....

அந்தக் காரணங்கள்... அந்தக் காரணங்கள்......

சில நிமிடங்களில் தெரியத்தானே போகின்றன!

''அண்ணா வரட்டா.... பிருந்தா சொன்னதை எல் லாம் செய்துவை. நான் வரட்டா......'' பிரியந்தி வீட்டு விறாந்தையில் இருந்து முற்றத்திற்கு வந்தாள்.

பிரியந்தி அழகாக உடுத்திருக்கின்றாள். அப்படியா னால் அவள் எங்கே போகப் போகின்றாள்?

அது......

அவளின் முகத்தில் எழுதி வைத்தது போலவே இருந்தது.

அண்ணா பிரதீசனுக்கும், தங்கை பிருந்தாவுக்கும் அது தெரியும்.

இருவரும் பிரியந்தியை வழியனுப்ப முற்றத்துக்கு வந்தார்கள். முற்றத்துக் கிழக்குப் பக்கமாக உள்ள பொன்னச்சி மரநிழலில் விறகுகளோடு போராடிக் கொண்டிருந்த.... வேலியில் போட்டிருந்த சால்வைத் துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு இவர்கள் நின்ற இடத்திற்குத் தாண்டித் தாண்டி வந்தார் ஒருவர்...

''குப்புசாமி அப்பு... எப்படி பிரியந்தி....'' பிரதீசன் தன் தங்கையைக் காட்டிக் கேட்டான்.

கிழவரும் சிரித்துக்கொண்டு, ''ராசாத்திக் குட்டி தானே......'' என்றார் பெருமிதத்துடன்.

பிரியந்தி தன்னைச் சூழ்ந்து நின்ற மூவரையும் பார்த்தாள். மிக... மிக அழகாகச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில்... அந்தச் சிரிப்பில்... அவர்கள் மூவரும் நனைந்தே போனார்கள்.

அப்போது... ..

முற்றத்து வாசல் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. பிரியந்தியின் அம்மாவும், அப்பாவும் வந்து கொண்டிருந்தார்கள்.

அம்மாவையும், அப்பாவையும் கண்டதும்தான் தாமதம் பிரதீசன் தன் சைக்கிள் பக்கம் கண்களை விட்டபடி...

''அப்பா ரெச்சியைக் கூட்டி வரவா...?'' என்றான். தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். அவன், அப்பாவின் பதிலை எதிர்பாராமல் மள.... மளவென்று சைக்கிளை உருட்டத் தொடங்கினான்,

அம்மா தன் கையிலிருந்த விபூதியை எடுத்து பிரியந்தியின் அந்த அழகான நெற்றியில் பூசிவிட்டுப் பின்னால் நின்ற பிருந்தாவிடம் கொடுத்தாள்,

''பத்தரைக்கு ரெயின்... இன்னும் அரைமணி நேரம் இருக்கு...'' அம்மாவின் அவசரம் அப்பாவுக்கு விளங்கியது.

வேட்டியைக் கழட்டிப் போட்டுவிட்டு காற்சட்டையை மாற்ற வீட்டுற்குள் விரைவாகப் போனார். அம்மா சேலையை மாற்ற அப்பாவுடன் சேர்ந்து நடந்தாள்.

பிருந்தா அந்த முற்றத்தில் நின்ற பூமா மரத்தின் அடியிலிருந்த கல்லில் குந்திக் கொள்ள......

குப்புசாமி அப்பு முற்றத்து வாசல் பக்கம் ரெக்சி வருகின்றதா எனப் பார்க்க நடந்தார்.

மூன்று நிமிடங்கள் கழிந்திருக்கும்......

ரெக்சியின் சத்தம் வாசல் பக்கம் கேட்டது.

''அம்மா ரெக்சி வந்திட்டுது...'' பிருந்தா கத்தினாள்.

பிரதீசன் சைக்களை தகர வேலியோடு சாத்திவிட்டு வந்தான். அம்மா இரண்டு ரவலிங் பேக்குகளை முற்றத்தில் கொண்டுவந்து வைக்க, அதை குப்புசாமி அப்பு காவிக் கொண்டு ரெக்சி நின்ற இடத்திற்கு நடந்தார். அவரின் நடையில் வேகம் இல்லை. வேதனைதான் இருந்தது.

''அப்பா'' காற்சட்டையோடு முற்றத்துக்கு வந்து விட்டார். தன் மனைவியை நிமிர்ந்து பார்த்தார்.

இத்தனை நேரமும் அக்காவின் அழகில் தன்னை மறந் திருந்த பிருந்தா... சட்டென எழுந்து விம்மத் தொடங் கினாள். பிரியந்தியை கட்டிப்பிடித்து அழுது கண்களை குளமாக்கத் தொடங்கினாள். பிரியந்தியின் முகமுமழகத் தொடங்கியது. அவளின் அழகின் சாயலும் இந்த ஒரு நிமிட நேரத்தில் மாறத் தொடங்கியது.

பிரியந்தியும் அழத்தொடங்க அவர்களோடு அம்மாவும் சேர்ந்துவிட அப்பா ஏதுமே பேச வாய் ஏலாதவராய் மௌனமாகச் சில நிமிடங்கள் அப்படியே கல்லாகிப் போனார்.

பிரியந்தி கனடா போகப் போகிறாள். அவளை அழைத்துச் செல்ல அவளின் மூத்த அக்கா கொழும்பில வந்து நின்று தந்தி கொடுத்திருந்தாள். பிரியந்தி கனடா போகப் போகும் முயற்சிகள் சுமார் ஆறுமாதத்துக்கு முன்பு தொடங்கியவைகள். இன்று தான்......

அந்தக் கனடா போகப் போகும் பூரிப்பில்தானா பிரியந்தி மிக...... மிக...... அழகாகத் தெரிந்தாள்?

இருக்கலாம்! இருபத்தாறு வயதைத் தாண்டும் அவள் இந்தச் சமூகத்தில் தானும் ஒரு அங்கமாக வாழவே விரும்பினாள். ஆனால்......

அவளது நினைவுகளை இந்தச் சமூகம் ஏற்கவில்லையே!

''சுரேன்.'' அவளை வட்டமிட்டான். மோகன்... அலையாது அலைந்தான்.

என்ஜினியர் வரதன் வளைய வளைய வந்தான்......

இப்படி பிரியந்தியை தொடர்ந்த ஆணழகர்கள்... வீராதி வீரர்கள் பலர்...... பலர்...... ஆனாலும்...... பிரியந்தியை மணமகளாக இருத்த எந்த ஆணழகர்களும் மனதில் இடம் தரவில்லை.

கடைசியாக உமாகாந்தன்! வந்து...... வந்து...... பேசி... பேசி...... சிரித்து.... சிரித்துப் போனான். அவனைச் செய்யலாம் என்று பிரியந்தியின் அப்பா நினைத்தார். அவனோடு பேசிப் பார்த்தார். வீட்டாருடன் பேசச் சொன்னான் உமாகாந்தன்.

வீட்டாரோடு அப்பா பேசிப் பார்த்தார். முடிவு.....

உமாகாந்தன் வீட்டார் மூன்று லகர பணம் அல்லது திருகோணமலை நகரில் வீடு வளவென்றும்...... நீட்டிக் கொண்டு போனார்கள் சீர்வரிசை பட்டியலை.

சாதாரண பென்சன் பணத்தோடு...... எப்பவோ வரும் மூத்தபிள்ளைகளின் பணத்தோடு காலத்தோடு போராடும் அவரால் இதற்கெல்லாம் எங்கே போகமுடியும்?

மூத்தமகள் பிரதீபாவுக்கு எழுதினார். அதற்குத் தீபாவின் கணவரே பதில் எழுதினார். பிரியந்தியை கனடாவுக்கு அனுப்பினால் என்னவென்று. ஆறு நாட்களாகச் சிந்தித்துப் பார்த்தார். பிரியந்தியிடம் விஷயத்தைச் சொல்லிப் பார்த்தார்.

பிரியந்தி மௌனமாகச் சிரித்துவிட்டு "அப்பா...... எனக்கு இந்த கோணேச மண்ணில் கல்யாணம் இல்லை. பார்ப்பம்! அந்த கனடா மண்ணை......" என்றாள் சுருதியே இல்லாமல்.

அதையடுத்து...... அதையடுத்து...... நடந்தவைகளின் பின்னால்......

இன்று பிரியந்தியை கொழும்புவரை வழியனுப்ப அப்பா தயாராகி விட்டார். அம்மாவும், தங்கையும் அழுது வடிகிறார்கள்.

"அழாதேயுங்க...... அவள் எங்கே போகிறாள்? மூத் தக்காவுடன் இருக்கத்தானே..." கண்களில் இருந்து கண்ணீரை அடக்கிக் கொண்டு பிரதீசன் சொன்னான்...

அவனுக்கு உமாகாந்தன் மேல் கோபம் கோபமாக வந்தது. ஆனால் அந்தக் கோபத்தை யாரிடம் காட்ட அவனுக்கும் எந்தத் தகுதிகளும் இல்லையென்பது எல் லோருக்கும் தெரியும்.

இரண்டு பிள்ளைகளையும் .. தாயையும்...... சின்னப் பிரச்சினை ஒன்றுக்காக தாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஒரு வருட காலமாக பிரம்மச்சாரிய விரதம் இருப்பவன் அவன். கொழுத்த சம்பளத்தை கூட்டாளிகளுக்கு கொட்டி விட்டு சோற்றுக்காக அம்மாவைப் பார்ப்பவன் அவன்.

மணி பத்து பத்தாகி விட்டது ரெக்சியை நோக்கி நடந்தான்.

பிரியந்தி... அவள் நடையில் இப்போது அழகிருந்தது.

பிரிய்ந்தி பின்சீற்றில் ஏறிக்கொண்டாள். கண்களை துடைத்துக் கொண்டாள். அப்பா முன்சீற்றில் ஏறி அமர......

ரெக்சி புறப்படத் தொடங்கியது. பிரியந்தி நிமிர்ந்து ரெக்சியோடு தன் கண்களை ஓடவிடலானாள்.

அவள் படித்த பள்ளிக்கூடம்...... ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் போகும் சமாது பிள்ளையார் கோயில்...... பயணத்தால் வந்திறங்கும் மடத்தடிச் சந்தி... கிருஷ்ணன்

கோயில்... இலங்கையிலேயே உள்ள ஒரேயொரு சனீஸ்வரர் ஆலயம்... அந்தப் பெரிய மாதாங் கோயில்...... அதோடு நீண்ட கந்தளாய் சுடலை...... சுடலையோடு முட்டிக் கொண்டிருந்த திருகோணமலை கடல் ...

எல்லாமே... எல்லாமே... ரீ. வி. பார்ப்பது போலவே இருந்தது.

''அப்பா...... நான் இனி இஞ்ச வருவன்தானே அப்பா'' என்று அப்பாவிடம் கீச்சிட்டாள். அப்பா பதிலைச் சொல்ல முடியாத நிலையில் தலையை ஆட்டினார்.

அவரின் கண்கள் சுடலை கடற்கரை மண்ணில் படர்ந்திருந்த அடம்பன் கொடியோடு பேசிக்கொண்டிருந்தன.

அவரின் பிள்ளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திக்கில் வாழவேண்டிய, சந்தர்ப்பங்களைத்; தான் வாழ்ந்த சமூகம் தனக்குத் தந்துவிட்டதேயென்று...... நினைவுகளோடுதானா... அந்த அடம்பன் கொடிகளோடு பேசிக் கொண்டிருந்தார்?

உமாகாந்தன் ஸ்ரேசனடியில் நிற்பது... இப்போது பிரியந்திக்கு .. தெரிகின்றது. ஏன் நிற்கிறான்? என்னை வழியனுப்பவோ? அல்லது... அல்லது......

ரெக்சியில் இருந்து அப்பாவும், பிரியந்தியும் இறங்கினார்கள்.

பிரியந்தி, உமாகாந்தனைக் காணாதவள் போலவே தலையினைக் குனிந்து அப்பாவின் பின்னாடி நடந்தாள்.

''பிரியந்தி... பிரியந்தி...'' அழைப்பது யார்? உமாகாந்தனா? அப்பாதான் நிமிர்ந்து பார்த்தார். அவருக்கு அவனோடு பேசவே மனம் வரவில்லை. நிமிட நேரம் நின்றார்.

உமாகாந்தன் அருகில் வந்தான். அவன் கண்களில் கண்ணீரா? பிரியந்திக்கு அவனைப் பார்க்க... . பாவமாக இருந்தாலும்...... அவனது இயலாத்தனத்தை நினைக்க ஆத்திரமாகவும் இருந்தது.

அவன் பேசவில்லை. மௌனமாகவே நின்றான்.

அவனின் மௌன பாஷை எதுவாக இருக்கலாம்?

பிரியந்தியிடம் இந்த கால் மணி நேரமாக தொங்கிக் கொண்ட சோகம் மெல்ல மறையத் தொடங்கியது.

''என்ன தம்பி... என்ன? பிரியந்தி கனடா போகப் போகிறாள்... இப்ப உனக்குச் சந்தோஷம்தானே.

அப்பாவுக்குத் தன் வயிற்றெரிச்சலைக் கொட்ட வேண்டும் போலிருந்தது. ஆனால் கொட்டவில்லை.

பிரியந்தி இப்போது சிரித்தாள். பழையபடி அந்த அழகு அவளில் வந்து புகுந்து கொண்டது.

''காந்தன்... நான் கனடா போகப் போகிறேன்...... சம்பாதிக்கப் போகிறேன்... நீங்க பயப்படாதேயுங்க... இன்னும் ஒரு வருடத்துக்குள்... உங்களையும் அங்க எடுத்துப் போடுவன்... ஐந்து வருடங்கள் கனடாவில் நாமிருவரும் உழைப்போம். பின்பு .. பின்பு... எங்களை உதறித் தள்ளிய எங்கள் மண்ணுக்கே திரும்புவோம். எங்கள் மண்ணில் வாழ்ந்து காட்டுவோம்......'' பிரியந்தி பட... பட...வென சொன்னாள்.

அப்பா... அதிர்ந்தே விட்டார். தன் மகளை... பெருமிதத்துடன் பார்த்தார்.

உமாகாந்தன் .. மௌன நிலையிலிருந்து மீளமுடியாமல்... விம்மத் தொடங்கினான்.

இந்த தைப்பொங்கலோடு பிரியந்தியின் வாழ்வில்... அடுத்த தைப்பொங்கலோடு உமாகாந்தன் வாழ்வில்... அப்படி எத்தனையோ பேர்களின் வாழ்வில்... நாளை... விடியத்தானே போகின்றது!

மாலை மங்கிக்கொண்டிருப்பதை சீத்தா உணர்த்துகிறாள். நான் அவளின் பிஞ்சுத் தோளினை பற்றியபடி நடந்து கொண்டிருக்கின்றேன். 'சுட்டி' என்னை இறுகப்பிடித்தபடி தோளில் அணைந்திருக்கின்றாள்;

சுட்டியின் அணைப்பிலும் - சீத்தாவின் துணையிலும் என் விம்மிய துன்பங்களை மறந்தபடியே கால்களை தூக்கி வைக்கின்றேன்.

''ஐயா தருமந் தாங்கோ:... நான் குருடு:... பார்வை தெரியாதவள்......'' என்ற என் குரலுக்கு வந்து விழுந்த சில்லறைகள் முடிச்சாக எனது இடுப்பில் மறைந்து கிடக்கின்றது.

பிச்சை வேண்டிய பேணி நிறைய, அழுகல் காய் கறிகள் அடங்கிய சுமை, சுட்டியை அணைக்கும் கையில் தான் தொங்கிக் கொண்டிருக்கின்றது.

'சீத்தா...... இந்தா...... அம்மா...... அப்பாவுக்கு குளிசை வாங்கியாங்கோ' சில்லறையை தடவி உணர்ந்து சரியான தொகையொன்றினை கொடுக்கின்றேன். 'அம்மாமி...... இதில நில்லு...... காரு சைக்களு ..... எல்லாம் சரியா ஓடுது... படிக்கட்டில இரு...'

சீத்தா எனக்கே தைரியமூட்டுகிறாள். குருடி என்றாலும் நான் அவளுக்கு மூத்தவள் அல்லவா! எனக்கு இந்த தைரியம் சிரிப்பைத்தான் வரவழைத்தது. நான் வழமை போலவே சிரிக்கின்றேன். எனது சிரிப்பு எங்குமே பரந்து நீளுகின்றது.

'பாருடா.... குருடி சிரிப்பதை. . அவகையிலே ஒரு வயசு நிறையாத குழந்தை:... ஏழு:... எட்டு:... முடிஞ்ச

பெம்பிளைப் பிள்ளையும் துணைக்கு. இதுகள எல்லாம் யாரோ கெடுத்து இப்படி வீதியில அலைய விட்டிருக்கான் பாவி!'

சும்மா போடா... அவளின் சிரிப்பைத்தான் பாரன்... நல்ல வடிவான பெட்டை...... வயசு என்ன இருபத்தி நாலுக்கு கூடாது. பாருநெஞ்சை...... இதுக்கு எங்கால பிரசியர் கிடைச்சுதோ? சிங்காரி போல சிரிக்கிற இவளை யாராவது விட்டு வைப்பானா? வசதி கிடைச்சால் நான் கூட...!

யாரோ பேசிக்கொண்டு நடப்பது எனது சிரிப்புக்குள் புகுகின்றது. பேசிக்கொண்டு போவது கட்டாயம் ஊரைச் சுற்றி அலையும் வேலையற்ற வீண் கட்டாக்காலி மாடுகள் என்றே எண்ணுகின்றேன்.

'நல்ல அழகு... பாரு நெஞ்சை இதுக்கு எங்கால பிரசியர் கிடைச்சுதோ... சிங்காரி போல...'

என்னுள இந்த வார்த்தைகள் மோதுகின்றன. நான் என்னை உற்று நோக்குகின்றேன். தெரியவில்லை - மெல்ல தடவிப் பார்க்கின்றேன். உண்மையென்ற உணர்வினால் நான் பூரிப்படைகின்றேன். சீத்தா வருவது அவளது அழைப்பில் இருந்து தெரிகிறது.

'வாங்கனேன்... போவம். மருந்து வாங்கியாச்சு.'

என்னால் இந்த அழைப்பை உடனே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நான் சிகப்பா, நல்ல அழகா சீத்தாவிடம் கேட்க நினைக்கின்றேன். எனது உடம்பு வெட்கத்தால் எழுந்து நடக்க மறுக்கிறது. சீத்தாவின் கைகளினை தடவிய படியே, நான் நினைத்ததை கேட்க நினைக்கின்றேன். முடியவில்லை. 'கடவுளே! கண்ணைப் பறித்த நீ...

ஒரு முறையாவது எனது அழகை நானே காண அருள மாட்டாயா?' என்ற எனது கோரிக்கையோடு எழும்புகின்றேன்.

எங்கள் பயணம் தொடங்குகின்றது. நாங்கள் குடிசையை நோக்கி நடக்கின்றோம்.

சனியன்கள்... குருடு என்று தெரிஞ்சும் சும்மா இருந்தால்தானே குடும்பத்தையும் வீதிவழியே கூட்டிக்கொண்டு வருகுதுகளே! யாரோ கெடுத்திட்டு இப்படி பிச்சை எடுக்க விட்டிருக்கானே... பாவி...!'

வயசான கிழமொன்றின் பேச்சென்பது அதனது நடுங்கும் குரலில் இருந்து எனக்கு புரிகின்றது. நான் அழவில்லை. கண்களில் தான் கண்ணீர் முட்டுகிறது. நான் சிரிக்கின்றேன். இந்தச் சிரிப்பில்தான் என் அண்ணா எத்தனை ஆறுதலடைகின்றார் என்பது எங்மேல் களங்கம் கற்பிக்கும் யாருக்காவது புரியுமா?

'நான் நடத்தை கெட்டவளாம். எனக்கு குழந்தைகளாம். என்னை எவனோ ஏமாற்றி விட்டானாம். நான் கெட்டது மட்டுமல்லாது எனது அழகினைக் காட்டி பார்ப்போரையும் கெடவைக்கிறேனாம். என் போன்றோரை சுட்டுத் தள்ள வேண்டுமாம்.'

முந்தின கிழடின் பேச்சிற்கு பதிலாக என்னைப் போன்ற பெண் கிழடு ஒன்று சொன்ன அறளை பெயர்ந்த கதையிது. நான் அழுவதா? சிரிப்பதா? இரண்டுமே என்னால் முடியாது. ஆகவே சிந்திக்கின்றேன். எனது உணர்வுகள் எனது உடலை இறுக்குவது போன்ற ஏதோவொரு மாற்றம் என்னைச் சூழுகின்றது. எனது நினைவுகள் என்னைக் குடிசைக்குத்தான் இட்டுச் செல்கின்றது.

'படார்...' பூனையொன்று முட்டியை உருட்டிவிட்டு எலியென நினைத்து என்மேல் பாய்கின்றது! சத்தமும்

செயலும் பின்னால் நடந்தது என்னவென்று உணர்த்தினாலும் நான் 'அம்மா' என்று பயத்தில் அலறுகின்றேன்.

'என்ன—வேல்விழி? பதட்டத்தோடு அண்ணா அலறி எழும்புவதும்; குப்பி லாம்பு கொழுத்தப்படுவதும், எனக்குப் புரிகிறது.

'இருங்கண்ணா!' நான் தடவிப் பார்க்கின்றேன். சுட்டியும், சித்தாவும் தங்களை மறந்து தூங்கிக் கொண்டிருப்பது தெரிகிறது. மெல்ல எழுகின்றேன். நடக்கின்றேன்.

அண்ணாவின் கண்ணீர் என் உச்சியில் விழுகின்றது. நான் விம்முகின்றேன.

'உனக்கு வேல்விழி என்ற பழைய காலப் பெயரை வைக்கோனும் என்று நான்தான் ஒற்றைக் காலில் நின்றேன். இப்போது எனக்கு இரண்டு கால்களும் இயங்கவில்லை. உனக்கு கண்பார்வையும் போய்விட்டது. நாம்...' அண்ணா திக்கித் திக்கியே பேசினார்.

'அண்ணா' என்றேன் பரிவோடு, அண்ணாவின் கரங்களினை தடவிக் கொண்டேன். கால்களில் முகத்தினை பதித்துக் கொண்டேன் 'அண்ணா' மீண்டும் அழுகின்றேன்.

'வேல்விழி ஏன் அழுகிறாயம்மா? நினைப்பதை சொல்லிவிட்டு அழு. நானும் சேர்ந்து கொள்கின்றேன்; உன்னோடு!' அண்ணா தடங்கல் இன்றியே வசனம் பேசுகிறார்.

''அண்ணா நான் குருடு என்று அழவில்லை. நீ... பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டு நடக்க முடியாத முடமென்றும் அழவில்லை...''

'அப்ப...'

'நீ நல்லா இருக்க உன்னோட ஒட்டி பிள்ளைகளை தந்து வாழ்ந்த உன் மனைவி... என் மச்சாள்... உனக்கு நோய் வந்திட்டுது என்றதும் வேற ஒருவனோட ஓடி னாளே... அதுதான்... அண்ணா... அன்புக்கு அன்பு மனை வியல்ல உடன் பிறப்புதான் என்று சொல்வாயே... அது எங்கள்... வாழ்க்கையிலும்...'

'ஓமடி'

எனது விளக்கமற்ற பேச்சிற்கு ஒரே பதிலில் சொன் னார் அண்ணா. அண்ணா சிரித்தார்... என்னையும் சிரிக் கச் சொன்னார்... கலண்டரில் பொக்கை வாய் காட்டி சிரித்துக் கொண்டிருந்த காந்தியையும் ஏசினார்.

'தங்கச்சி... துன்பத்திலும் சிரி... அப்போது தான் உனது மனம் பலமடையும்... நான் முடம் - நீ குருடு சிரிப்போடு சொன்ன அண்ணா திடீரென அழுதார்.

பின்னர் சிரித்தபடியே... அம்மா... நீ வாழ வேண்டி யவள்... வாழ வைக்க வேண்டியவன் நான்... இருவருமோ? நாம் துணையற்ற படரிகள். குறிக்கோள் இன்றி வாழு பவர்கள். பிச்சைக்காசுகள் எங்கள் வயிற்றினை நிரப்பு கின்றன. நாம் வாழவைக்கப்படுகின்றோம்.

'நான் பதில் ஏதும் சொல்லவில்லை.

'பாம்... லொறி... ஏய்...... றோட்டில் என்ன வீடு மாதிரி திரிகிறியே!' இஞ்சால... வா...' யாரோ அதட்ட லுக்கு சீத்தா பணிவாக என்னை அழைப்பது கேட்கிறது. நாம் வீதியின் ஓரத்திற்கே செல்கின்றோம். 'கான்...... இருக்கு... பார்த்து...' நடுவீதியில் சத்தம் போட்டவரே மீண்டும் இரைகிறார். நான் விரைவாக நடக்கின்றேன்.

நான் சுமக்கும் சுமைகளை விட மனச்சுமைகள் அதிகமாகிவிட்டது தான் இந்த விரைவுக்கு காரணமோ!

நான் கலியாணம் செய்யக் கூடாதா? எனது அண்ணாவின் பிள்ளைகளை துணைக்கு கூட்டிவந்து அண்ணாவின் பசியையும் - எங்கள் பசியையும் தணிக்கின்றேன் என்பதற்காக கன்னிகழியாத என்மேல் களங்கம் சுமத்துகிறதே இந்தக் கூட்டம். நான் அழகி .. என்னால் ஏன் திருமணம் செய்ய முடியாது? ..

குருடு .. நீ... குருடு... சுட்டெரிக்கிறது எனது மனம்; சட்டென எனது பிடியில் இருந்து ஓடுகிறாள் சீத்தா.

'எங்கட குடிசையில நிரம்ப ஆக்களு' சீத்தாவின்

சொற்கள் என்னை ஏதோ குழப்பத்திற்கு உள்ளாக்கின்றன

பாவம் .. குப்பிலாம்பு தவறிப்போச்சாம்... குடிசை பற்றியது தெரிஞ்சும் உதவிக்கு அப்ப ஆள் இல்லாததால முடப் பொடியனும் அதில எரிஞ்சு ப்பாச்சு' யாரோ கதைப்பது எனக்கு கேட்கிறது. 'அண்ணா' அலறுகின்றேன்'

அண்ணா! அப்ப இந்த பிள்ளைகள் இவன்ரதா .. பாவம்... இந்த குருட்டுப் பெண்ணுக்கு இனி துணையே இல்லையே' எனது அலறலுக்கு ஆறுதல் வார்த்தை யொன்று குறுக்கிடுகின்றது.

'அப்பாவோவ்...' சீத்தா அலறுகிறாள் எனது அணைப்பில் இருந்தபடியே. கட்டி... ஏதும் புரியாது என்னை இறுக அணைக்கிறாள்; எவரோ தர்மவான்கள் பேசுகிறார்கள். உதவிகள் - பாவம் - கடவுளுக்கு கண்ணே இல்லையா மனிசனை போட்டு இப்படி அலைக்கக் கூடாது. இந்த வார்த்தைகள் மட்டும் பலமாக ஒலிக்கிறது அவர்களிட

மிருந்து. நான் கருகி கிடக்கும் அன்னனை ஞானக் கண்களால் பார்க்கின்றேன்.

இப்போது... என்னைச் சுற்றி இரக்கப் பட இரண்டே இரண்டு உருவங்கள் தான். சுட்டியும், சித்தாவும் எனது முகத்தினை பசியின் கொடூரத்தால் முறைத்துப் பார்ப்பது மட்டும் எனக்கு புரிகிறது.

மச்சானின் உடைகளைப் போட்டு பிச்சை கேட்கப் போய் மற்றவரின் கண்ணுக்கு விருந்தான என்னிடம் இப்போது மாறிக்கட்டவே துணியில்லை. இப்போது தான் அசல் பிச்சைக்காரியென உணர்கின்றேன்.

நான் கலியாணம் செய்ய வேண்டும். பலமாகவே சிரிக்கின்றேன். எனது சிரிப்பிற்கு அர்த்தம் புரியாத சீத்தா... 'ஏன் சிரிக்கிறாய்' என்கிறாள். முன்னர் நான் சிரித்த சிரிப்பின் ஏக்கத்தையும் இப்போது நான் சிரிக்கும் சிரிப்பில் சோகத்தையும் தரம் பிரித்து உணர இந்த சீத்தா வால் எப்படி முடியும்? ஆகவே இவளுக்காக அழுகின்றேன்...

'ஏன் அழுகிறாய்' என்கிறாள் சீத்தா. சீத்தா... என்னைச் சுற்றி ஒரு குடும்பமே வாழ்ந்ததென்பது இப் போது தான் தெரிகிறது. இந்த குருடிக்கு என்கிறேன். சீத்தா ஏதும் புரியாதவளாய்... 'பசிக்குது' என்கிறாள். கட்டி அழுகிறாள். நான் எழும்புகின்றேன்.

சமூகத்தின் எந்தப் பார்வைக்கும் நான் தைரியமாகி விட்டேன். பிச்சை கேட்கவும் துணிந்து விட்டேன்.

'அம்மா... தாயே... நாலு நாளுங்க சாப்பிட்டு இந்த குஞ்சுகள். குருடி அம்மா நானு...'

எனது பல்லவி எங்குமே ஒலிக்கிறது.

# தாக்கத்தின்...
# மறுபக்கம்

திருக்கோணமலையில...

பத்துநாள் மழை...

ஒரு வெயிலால போகுப் பார். இது கோணேசர் கோவில் கிழக்கு பக்கமாக இருட்டிக் கட்டிக் கொண்ட மழை பார். பத்து நாள் பிடிச்சு வெள்ளம் போட்டு விட்டுத் தான் போகும் பார்..." ஆறுதலாக அமர்ந்து அளந்து கொட்டிக் கொண்டிருந்த சிதம்பரநாதரை அவசரமாகப் பார்த்தான் கதிரேசன்.

"ஏனடா தம்பி - வெளிநாடு... என்று எத்தனை தடவை கொழும்புக்கு ஏறி இறங்கி விட்டாய். என்ன ஏஜென்ட் ஏமாற்றிப் போட்டானோ?"

மழைக் கதையை இடை நிறுத்தி விட்டு வெளிநாட்டு ஏஜென்ட் கதைக்கு வந்தார் சிதம்பரநாதன்.

'ஐயா உங்களிட்ட ஒரு சங்கதிக்கு வந்தனான்.'

'சங்கதி இல்லாமல் வரமாட்டியள். என்ர பெடியனை இந்தியன் ஆமி விசாரணை என்று கூட்டிக் கொண்டு போகக்க... ஊரில கொஞ்சம் முழிப்பாகத் திரிந்த நீங்களே பாராமுகமாக இருந்திட்டீங்களே!?

சிதம்பரநாதர் உடனே விசயத்துக்கு வந்துவிட்டார்; அவரின் சொற்கள்......

கதிரேசனை யாரோ அறைவது போலிருந்தது.

'என்ர கஸ்டம் இவருக்கு எங்க தெரியப் போகுது? கொஞ்சக் காலம் ஊர்... ஊர்... என்று திரிஞ்சு நான் கண்ட பலன்? ஓ... அதெல்லாம் அவர் அவருக்கு வரும் போதுதான் தெரியும்.' கதிரேசன் மௌனராகம் பாடினான்.

''என்ன தம்பி... நான் கதைக்கிறன் நீ கதைக்கிறாய் இல்லை. என்ன கோபிச்சுப் போட்டியோ? என்னத்துக்கு வந்தனி .. கோபிக்காதை... இப்பத்தியப் பொடியளுக்கு ஒரு சொல்லு சொன்னால் போதும்... அவங்கள் பாக்கிற பார்வை...''

கதிரேசனுக்கு சிரிப்பு வந்தது.

'நான் கேட்பன்... இல்லையென்று சொல்லக் கூடாது'

'ஓ... நீ என்ர உயிரைக் கேட்பாய் என்னால கொடுக்க முடியுமோ?'

'சே நான் உயிர் கேட்கிற 'யம' இளைஞன் அல்ல. நான் உலகத்தை உறுட்டுகிற சக்திகளில ஒன்றைத்தான் கேட்க வந்தன்...?

அந்த; அவதி; மிகுந்த அவசரத்திலும் கதிரேசனுக்கு வழமையான பகுடி கொஞ்சம் வரத்தான் செய்தது. கொஞ்ச நேரம் தம்மை மறந்து சிரித்தால் உள்ள கவலையும்; அதன் தேவையும் போகுமாமே! உண்மைதானோ இது?

'என்ன தம்பி... உலகத்தை உறுட்டுகிற சக்தியோ?'

'ஆம். உங்கட்ட பணம் கடனாக கேட்க வந்தன்...' அந்த உலகத்தை உறுட்டும் சக்தியான பணம் சிதம்பரநாதரின் செவிப்பறையைத் தட்டியது. அவரின் விழிகள் ? பிதுங்க ஆரம்பித்தன. பிதுங்கிய விழிகள்... பயக்கலவரத்

ஓடன் மாறி... சிதம்பரநாதரை சிதம்பரநாதரை ஒரு கோழையாக கதிரேசனுக்கு காட்டியது.

அவனுக்கு இப்போதும் அந்த பொல்லாத சிரிப்பு பொத்துக் கொண்டுதான் வந்தது. பணமென்றால் பிணம் தான் வாய் திறக்கும் என்பார்கள். இப்போது மனிதனும் திறக்க ஆரம்பித்து விட்டானா??.

'ஐயா... பயப்பிட வேண்டாம். நான் உங்களிட்ட இருக்கிற காசை கொள்ளையடிக்க வரவில்லை. அதுக்காக என்ர இடுப்பில ஏதும் இல்லை. வெளிநாட்டு ஏஜென்சிக்கு கொஞ்ச பணம் கொடுக்க வேணும். அதற்குத்தான் உங் களிட்ட ஒரு சொல்லு...'

சிதம்பரநாதரின் விழிகள் பழைய நிலைக்கு மாற - அவரிடம் புகுந்த அந்தப் பயமானது... கொஞ்சம் உசார் ஆளார்.

அந்த உசார்......

காடையர்களுக்கு பயந்த காலம் போய்... இந்தியன் ஆமி இருக்கின்ற துணிவில்... தமிழர்களின் ஆவேசம் கூடி... 1987 புரட்டாதியில் சிங்களவரை அடித்து துரத்தியது போல... போலத்தான்... அந்த உசார்...

'தம்பியா மூத்தவன் வெளிநாட்டுக்கு போய் வந்ததில இந்த வீடு. கொஞ்சம் நகை. வேறெங்கால என்னட்ட காசு?...' சிதம்பரநாதர் சொல்லிக் கொண்டு எழுந்தார். அவரோடு; முன்பு மழைகால ஆராட்சியில் இருந்த அவ ரின் நண்பரும் மெதுவாக எழுந்து கொண்டார்.

அப்போது; ரோஜாச் செடிக்கு பேன் பார்த்துக் கொண்டிருந்த சிதம்பரநாதரின் மனைவி...

'கொஞ்சம் இங்கால வாங்க... ஒரு கதை...? என்று அவரை அழைத்தாள். சிதம்பரநாதர் மனைவியின் பக்கம் அகல; கதிரேசன் அந்த அழகான வெளிநாட்டு காசு வீட்டையும்; அந்தப் பூந்தோட்டத்தையும் வைத்த கண் வாங்காது மாறி; மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்:

அவனின் மனதில் ஒரு கற்பனையான உலகம் உருண்டோடிக் கொண்டிருந்தது. விழியோரத்தில் அந்த கனவு... கனவு... நீண்டு நீண்டு... ஒரு பெரிய ஏணியாகி... ஏணியாகி...

அவன் வலது காலினை தூக்கி அந்த ஏணிப்படியில் வைத்தபோது...

சிதம்பரநாதரின் குரல் அவனை அப்படியே நிறுத்தியது.

'தம்பியா என்னை கோவியாதை...? என்ற சிதம்பரநாதர் கொடியில் காய்ந்து கொண்டிருந்த துவாய்த் துண்டை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு...

கதிரேசனுக்கு அந்த... அந்த சிதம்பரநாதரின் 'கோவியாதை' என்ற சொல் மரண அடியாக விழுந்தது. அவன் வாய் விடாத ஆட்களே இல்லை. வாய் விடாத ஆளாக இருந்த சிதம்பரநாதரிடமும் கடைசியாக வாயை விட்டு விட்டான். முடிவு???

அவன் தன்னுடைய சமூகத்துக்கா இறந்த காலங்களில் உழைத்த உழைப்பு. அதன் பிரதி உபகாரங்கள்... பலா பலன்கள் சே... இதுகளை விட்டால்... ஒரு உதவி... அவனுக்கு விழியோரத்தில் இப்போது கனவல்ல கண்ணீர் தான் பொங்கிக் கொண்டு வந்தது.

இன்றினைப் போல அன்று இந்தியன் ஆமி இல்லை; இயக்கப் போராளிகளும் காடுகளில் திரிந்து கல்வி கற்று வேட்டைகளை நாட்டில் நடத்தி விட்டு ஒழித்த நேரம்...

கட்டுமீறிய இராணுவம் அப்பாவிகளான திருக்கோண மலை மக்கள் மீது தங்கள் வெளிநாட்டு ஆயுதங்களைக் கொண்டு... அல்லல் படுத்திய நேரம். 1983ல் தமிழ் மக்கள்... திருக்கோணமலையை விட்டு யாழ் பஸ்ஸில் நின்று முண்டி அடித்து ஏறிய நேரம் தன் உயிரை துச்ச மென மதித்து... ஒரு சொட்கன் துணையுடன்... இரண்டு மூன்று எறி வெடிகளுடன்... அந்த கட்டுமீறிய இராணு வத்தை தனியொருவனாக எதிர்த்து துரத்தினானே... அதெல்லாம் .. சிங்கள காடையர்கள்; சிங்கள இராணுவம் என தமிழர்கள் பயந்து; பயந்து; ஓடி ஓடி ஒழிந்தார் களே... அந்த நேரம்... கதிரேசனுக்கு நினைக்க; நினைக்க......

அவன் தனக்காக - தன் குடும்பத்துக்காக - தன் இன சனத்துக்காக... ஒரு இரவு தானும் விழித்திருப்பானா தான், வாழும் வாழும் மக்களுக்காக சமாதானம் வேண்டி எத்தனை இரவுகள் விழித்திருப்பான்.

ஆனால் இன்று... இந்த சமூகத்துக்கு அன்றில்லாத இந்தியன் இராணுவமும் துணைக்கு இருக்கின்றார்கள். அவன் இனி இந்த சமூகத்திற்கு இன்று தேவைப்படாத வன். இதையெல்லாம் நினைத்தா அவன் வெளிநாடு போக விரும்பினான்?

வீதிக்கு வந்தவனை ஒரு கரம் தடுத்து நிறுத்தியது; அது... அதை தட்டிவிடத்தான் அவன் நினைத்தான்;

ஆனால் அவனால் முடியவில்லை; 83ல் அவனுக்கு ஒரு உந்து சக்தியாய் அவனை இயக்கிய அந்த அ......

அந்த...... கோபந்தான் பொத்துக் கொண்டு அவனுக்கு வந்தது.

'உன்ட ஐயாட்ட கேட்க கூடாது என்று தான் இருந்தன். இப்ப கேட்டு என்ர மானம்; மரியாதை எல்லாத்தையும் இழந்து போட்டன். நீ நேற்று 'ஒருக்கா கேட்டுப் பாருங்க? - என்று அழுது வடித்ததால தான் கேட்டன்... இப்ப பரம திருப்தி தானே...?

கதிரேசன் நடக்க ஆரம்பித்தான்.

'இஞ்ச நில்லுங்க... என்ர ஒரு சொல்லுக் கேட்டு விட்டுப் போங்க... என்று அந்த அழகி அவனை தடுத்தாள்.

மாட்டுச் சாணத்தில் கால் வைத்து உதறிய அவன் 'என்ன...? என்று தலையினை மட்டும் திருப்பினான்.

'எல்லாம் நல்லபடியாக முடியும். கவலையை விடுங்க. இணத்தடியில வந்து சாணி மிதித்த காலை கழுவி விட்டுப் போங்க...? என்ற நமட்டுச் சிரிப்புடன் அந்த அழகி மின்னி மறைந்தாள்.

கதிரேசனுக்கு ஏதும் புரியவில்லை.

இந்த மண்ணின் இறைமைக்கு புது வண்ணம் ஊட்டிக் கொண்டிருந்த இந்திய ஆமியின் ஜீப் அவனைக் கடந்து போக... கடந்து போக...

கதிரேசன் வீட்டுக்கு வந்த பின்பே தன்னிலை உணர்ந்தான்.

'தம்பியா...... ஒரு... விசயம்... ? அவனின் சகோதரி அவனை அழைத்தாள்.

'என்னக்கா...? முகத்தில் அரும்பிய வியர்வையை துடைக்க மனம் இல்லாதவனாய் கிணற்றடிப் பக்கம் பார்த் தான். சாணம் பூசிய காலும் நினைவுக்கு வந்தது.

'இஞ்ச பார்...? என்றபடி துவைத்த துணியை அப் படியே போட்டு விட்டு அவனருகில் வந்த அவனது தமக்கை...

''சிதம்பரத்தார் மனைவி பாக்கியம்... காலம இஞ்ச வந்தா... நீ தான் வெளியில போக காசுக்கு அலையிறி யாமே! அவையள் தருகினமாம். அவள் வசந்தாவை ரெயிஸ்டர் பண்ணி விட்டுப் போகட்டாம்......'' என்றாள்

கதிரேசன் தன் தமக்கையை நிமிர்ந்து பார்த்தான் தம்பியின் மாற்றங்கள், அக்காவிற்கு எதை எதையோ உணர்த்த... உணர்த்த...

'என்னடா...? என்றாள்.

'அக்கா... நான் என் சமுதாயத்தில எதையும் எதிர் பார்த்து உழைக்கவில்லை. கொஞ்சத்துக்கு முந்தியும் சிதம் பரத்தாரிட்ட போய் உதவி கேட்டுப்பார்த்தன். அது பிரதி உபகாரமாகவல்ல... கடனாக. அதோட அவரின் மகளை எதிர்பார்த்தும் அல்ல. நானும் அவளும் விரும்புகிறது ஏதோ உண்மை. ஆனால் இதை வியாபாரம் ஆக்கிற தென்றால்...

ஓ... காசு கொடுத்து பொம்பிளையை விலைப்படுத்தப் பார்க்கினமோ? இல்லாட்டி வெளிநாடு போனால் எங்கே என்ற மகளை மறந்து போவானோ என்ற நினைப்போ...

'என்னடா; என்ன கதைக்கிறாய்...?

'கதைக்க என்னக்கா இருக்குது? நான் வெளிநாடு போகவில்லை. இஞ்சயே - இவங்க முன்னாடியே...... உழைத்து... சிதம்பரநாதரின் மகளை எடுக்காட்டிப்பார்...'

கதிரேசன் ஆவேசமாகக் கூறினான்.

1983ல் அந்த தனியொருவனாக... அந்த வெளிநாட்டு ஆயுதங்களுக்கு முன்னால்...

ஓட நினைத்தவர்களை எல்லாம் ஒன்று திரட்டி பயத்தினை அறுத்து... அறுத்தானே...

அப்போது அவனுக்கு இருந்த அந்த துணிவு? அந்த துணிவு இன்றும்; இன்றும் இப்போதும்......

கதிரேசன் முகத்தில் ஊறிய வியர்வை முத்துக்களைத் துடைக்க மறந்தவனாய்... தான் நின்ற இந்த மண்ணையும்... அந்த விண்ணையும்... மாறி மாறிப் பார்த்தான்.

(நிவேதனம்; 1988)


விழியோரத்துக்
கனவுகள்
திருமலை
சுந்தா
வெளியீடு:
75/=
கல்வி பண்பாட்டு அலுவல்கள்
விளையாட்டுத் துறை அமைச்சு.